
லட்சுமி சுதாவின்
மனதில் பதிந்த ஓவியம்
லட்சுமி சுதாவின்
மனதில் பதிந்த ஓவியம்



## என்னுரை

'மனதில் பதிந்த ஓவியம்' கதையின் நாயகி ரித்விகா ஒரு குறும்புக்காரப் பெண்.

அவள் இருக்கும் இடத்தில் துள்ளல், கிண்டல், கேலி, மகிழ்ச்சி எல்லாமே கரை புரண்டு ஓடும்.

பொறுப்பான போலீஸ் அதிகாரியான நாயகன் சஞ்சய் அவளை வித்தியாசமான சூழலில் சந்திக்கிறான். இப்படியும் ஒரு பெண்ணா என்ற ஆச்சரியம் அவனுள் எழுகிறது.

சுவாரசியமான, விறுவிறுப்பான சம்பவங்களால் பின்னப்பட்ட இந்தக் கதை உங்களுக்கும் பிடிக்கும் என்று நினைக்கிறேன்.

விமர்சனங்களுக்காகக் காத்திருக்கிறேன்.

பிரியமுடன்,

**லட்சுமி சுதா**
lakshmisudha2010@yahoo.com



# மனதில் பதிந்த ஓவியம்

## 1

என்
வாழ்க்கை
உயிர்ப்பில்லாமல்
நத்தை
போல்
ஊர்ந்து
கொண்டு
இருந்தது
.........

வாசனைப்
போல்
நீ
வந்தாய்
..........
என்
சுவாசமாகி
நீ
நின்றாய்
..........
என்
வாழ்க்கை
தொடங்கியது!

சூரியன் மனமின்றி மேகத்தில் தன் ஆக்கிரமிப்பை நீக்கத் தொடங்கிய ஒரு அழகான மாலைப் பொழுது. பட்டாசு சப்தம் காதைத் துளைத்தது.

"தீபாவளிக்கு இன்னும் ஒரு வாரம் இருக்கு... இப்பவே இப்படிப் பட்டாசைப் போட்டுத் தள்ளறாளே..." – அங்கலாய்த்தபடியே நடந்தார் ஒருவர்.

"வெடி விலை என்னம்மா ஏறிடுத்து. ம்... அந்தக் லத்தில நூறு ரூபாய்க்கு ஒரு மூட்டை வெடி, மத்தாப்பு, வானம், சங்கு சக்கரம் எல்லாம் கிடைக்கும். ஆனால் இப்ப பாருங்க... விலைவாசி விஷம் போல ச்சு!" என்றார் அவர் அருகில் இருந்த இன்னொருவர்.



"என்ன இருந்தாலும் அந்தக் காலம் மாதிரி வராது."

பின்னால் நடந்து வந்து கொண்டிருந்த ரித்விகாவிற்கு அவர்கள் பேசுவது சிரிப்பை வரவழைத்தது.

"அங்கிள்! அந்தக் காலத்தில் இருந்த மாதிரி பொருளாதாரம் இல்லைதான்... ஆனால் விஞ்ஞான வளர்ச்சி சூப்பரா இருக்கே... கைபேசி, கணினி, விண்கலங்கள், என எவ்வளவு முன்னேற்றம்!" என்றாள், சந்தமாக.

"குழந்தை... யாரும்மா நீ?"

"ம்... நான் அதை உங்களைக் கேட்கணும். நீங்க வந்திருப்பது எங்க ஏரியா. நான் ஒண்ணும் கைக் குழந்தை இல்லை."

"ஏம்மா... ரொம்பத் துடுக்காப் பேசறியே... இந்த ஃபிளாட்டில் உள்ள எல்லா வீடும் உன்னோடதா?"

"இல்லை... மூன்றாவது மாடியில் ஒரே ஒரு வீடுதான் சந்தானத்தோடது."

"அது யார் சந்தானம்?"

"என்னோட அப்பா."

"அட ராமா... அப்பாவை மரியாதை இல்லாமல் பேர் சொல்லி அழைக்கிறியே... இது தப்பும்மா!"

"ம்... நான் உங்களைப் பெயர் சொல்லி அழைத்தால்தான் தப்பு. என் அப்பாவை நான் பெயர் சொல்லி அழைப்பதில் எந்தத் தப்பும் இல்லை."

"அம்மாடி... ரொம்ப வாயாடியா இருக்கிறியே!"

"அங்கிள்! உங்களுக்கு இங்கே யாரைப் பார்க்கணும்?"

"அதை... நான் ஏன்மா உன்னண்ட சொல்லணும்..."

"குட்... இப்பதான் நீங்க என்னை மாதிரிக் கொஞ்சம் பேசறீங்க... அப்படியே மெயின்டெயின் செஞ்சுக்கோங்க.

பை... பை... ஆன்ட்டி எங்கே? அவங்களை அம்போன்னு விட்டுட்டு நீங்க நகர்வலம் வர்றீங்க... எந்த இளவரசியைக் கரெக்ட் செய்யப் போறீங்க?" - குறும்பாகக் கண்ணடித்தாள்.

அவர் அரண்டு போய் விட்டார். இது என்னடா வம்பாக இருக்கிறது. பேப்பரைத் தான் கரெக்ட் செய்ய முடியும். அது என்ன இளவரசியைக் கரெக்ட் செய்வது?

குழம்பிப் போய் விட்டார் அவர். அவர் திகைப்பிலிருந்து மீளுவதற்குள் சிட்டாக அங்கிருந்து பறந்து போய் விட்டாள் ரித்விகா.

ரித்விகா என்றால் குறும்பு என்று அர்த்தமோ என்று அந்த அடுக்குமாடிக் கட்டிடவாசிகளுக்குச் சந்தேகம் ஏற்படும் வண்ணம் அவளது குறும்புகள் அளவில்லாமல் இருந்தன.

சின்னப் பசங்களுடன் சேர்ந்து கிரிக்கெட் விளையாடுவது, மொட்டை மாடியில் அணுகுண்டு வெடி வெடிப்பது, தூங்கும் நேரம் காலிங்பெல்லைத் தொடர்ந்து அடித்து விட்டு ஓடிவிடுவது... என்று அவள் செய்யும் 'வால்'தனங்களைச் சிலர் ரசிப்பார்கள்.

சிலர் திட்டுவார்கள். சிலர் வளர்ப்பு சரியில்லை என்று அவள் அப்பாவையும் சேர்த்து அர்ச்சனை செய்வார்கள். ஆனால் அதை எல்[illegible] [illegible]ல் வழக்கம்



போல் தன் குறும்பு லீலைகளில் தொடர்ந்து ஈடுபட்டுக் கொண்டே இருந்தாள், அவள்.

"டேய் சஞ்சய்! உன்னை நான் ஒரு சந்தேகம் கேட்கணும்."

"என்ன அங்கிள்... சொல்லுங்க..."

"டேய் கரெக்ட் செய்வது என்றால் என்ன?" என்றார் தாழ்ந்த குரலில் சிவநேசன்.

"அங்கிள்..." - அலறினான் அவன்.

"ஏய்... ஏன்டா கத்தறே... சொல்லு..."

"ம்... கந்தசஷ்டிக் கவசம், விஷ்ணு சகஸ்ரநாமம் சொல்ல வேண்டிய வயதில் உங்க வாயிலிருந்து இந்த மாதிரி ஒரு வார்த்தை... வரும்னு நான் துளிக்கூட எதிர் பார்க்கவில்லை.

அமெரிக்காவில் இருக்கிற உங்க மகன் காதில இது விழுந்ததுன்னா... ஆடிப் போயிடுவான். மித்ரன் இந்தக் கொடுமை எல்லாம் கேட்க வேண்டாம்னுதான் அமெரிக்காவில இருக்கான் போல..."

"டேய்... நான் நினைச்சது சரிதான். அந்தப் பெண் தில்லாலங்கடியாத்தான் இருப்பா போல..."

"அட... அங்கிள்! உங்க தமிழ் ஞானம் ரொம்ப பயங்கரமா இருக்கு... தில்லாலங்கடி கரெக்ட்... இன்னும் என்னென்ன இருக்கு உங்க தமிழ் அகராதியில்..."

"இல்லை சஞ்சய்... அந்தப் பெண்தான் எல்லாத் துக்கும் காரணம். என்னம்மா வாயா[illegible]

ம்.. சரி. ஆண்ட்டி அமெரிக்காவில் இருக்கிற நேரத்தில நீங்க கொஞ்சம் அமெரிக்கையா இருந்தா நல்லா இருக்கும். வந்ததிலிருந்து ஒரு மார்க்கமாத்தான் பேசறீங்க. என்ன ஆச்சன்னு தெரியலையே?"

"அட ராமா... நீயும் என் மேல சந்தேகப்படற பார்த்தியா... இந்த வயசில எனக்குத் தேவைதான்!" என்று அவர் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது ஒரு ராக்கெட் கொடி மேல் இருந்த அவர் டி-ஷர்ட் மேல் சீறிப் பாய்ந்தது.

தீ டி-ஷர்ட் மேல் சடசடவெனப் பரவியது.

"அச்சோ... என்னோட சட்டை!" - பதறினார் அவர்.

"அங்கிள் இருங்க..." என்ற சஞ்சய்... டி-ஷர்ட்டைக் கீழே இழுத்துப் போட்டுத் தண்ணீரைக் கொட்டித் தீயை அணைத்தான்.

"என்னடா... சஞ்சய் இது! வீட்டுக்குள்ளே ராக்கெட் எல்லாம் வருது! இந்த வீட்டுக்குக் குடி வந்தவுடனே ராக்கெட் நம்மளை வரவேற்கிறது. நல்ல டி-ஷர்ட்டா அது... இப்படி வீணாயிடுத்தே... ஜன்னலை இனி திறக்கவே கூடாது போல..." - புலம்பியபடியே இருந்தார் சிவநேசன்.

"இருங்க அங்கிள்! இது யாரோ சின்னப் பசங்க வேலையா இருக்கும். நான் கீழே போய் பார்த்திட்டு வர்றேன். வீட்டுக்குள்ள வர்ற மாதிரியா ராக்கெட் வெடிப்பாங்க..." - என்றபடியே கோபமாக அங்கிருந்து வேகமாக வெளியேறினான்.

கீழே காம்பவுண்ட் அருகே பத்துப் பதினைந்து சிறுவர்கள் இருந்தார்கள். எல்லோரும் ஏழாவது... இல்ல... எட்டாவது படித்துக் கொண்டிருப்பார்கள் போல...



நடுவே ஒரு இளம்பெண் நின்று கொண்டிருந்தாள். கோதுமை நிறத்தில் கிட்டத்தட்ட ஐந்தடி உயரத்தில் இருந்த அவள் அந்தக் கூட்டத்திற்குத் தலைவி போல் காட்சியளித்தாள்.

"ஹலோ! நீங்கதானே ராக்கெட்டை வீட்டுக்குள் போட்டது...!" என்றான் கோபமாக சஞ்சய்.

"ராக்கெட்டா... அது எப்படி இருக்கும்? டேய்... நீங்க யாராவது ராக்கெட்டைப் பார்த்திருக்கீங்களா?" என்று அப்பாவி போல் முகத்தை வைத்தபடி கேட்டாள் அவள்.

"தெரியாது ரிது! நாங்க அதை சயின்ஸ் புக்கில் பார்த்திருக்கிறோம்..." என்றான் ஒரு பொடியன், சீரியஸாக.

"கேட்டீங்கதானே... இங்கே யாரும் அப்துல்கலாமின் சொந்தக்காரங்க இல்லை. அதனால நீங்க யாரையோ தேட வந்து... தெரியாம தப்பா எங்ககிட்டே ஏதோ கேட்கிறீங்க...

பரவாயில்லை. நீங்க இந்த ஃபிளாட்டுக்குப் புதுசுன்னு நினைக்கிறேன். உங்களை இதுக்கு முன்னாடி இங்கே பார்த்தது இல்லையே!" என்றாள் ரித்விகா.

சஞ்சய் அவளைப் பார்த்தான். காம்பவுண்ட் சுவர் அருகில் இருந்த பாட்டில், ராக்கெட், வெடி, தீப்பெட்டி அவன் கண்ணில் பட்டது.

"என்னது இதெல்லாம்?"

"பார்த்தா தெரியலை... தீபாவளி வெடி."

"இப்பதான் ராக்கெட்டைப் பார்த்ததே இல்லைன்னு சாதிச்ச... இதுக்குப் பெயர் என்ன?" என்றான் ராக்கெட்டைக் கையில் எடுத்தபடியே.

"ஓ! இந்த ராக்கெட்டா? நீங்க கேட்ட விதத்தைப் பார்த்து நாங்க ஸ்ரீஹரிகோட்டா ராக்கெட்டைப் பற்றிக் கேட்கிறீங்களோன்னு நினைச்சேன்!" என்றாள் நித்திகா.

"ஏய்... என்ன கிண்டலா! ராக்கெட் எப்படி வெடிக்கும்னு தெரியாதா... உனக்கெல்லாம் ராக்கெட் எதுக்கு?

என் அங்கிளோட டி-ஷர்ட் ஒன்னு எரிஞ்சு போயிடுச்சு... அதை இனிமே உபயோகப்படுத்தவே முடியாது அவரால... எல்லாம் உன்னோட அஜாக்கிரதையால்தான்!"

அதற்குள் சிவநேசன் கீழே வந்து விட்டார்.

"சஞ்சய்! நான் சொன்ன அந்தத் தில்லாலங்கடி... இந்தப் பெண்தான்!" - கிசுகிசுத்தார் அவன் காதில்.

"ஹலோ! பாய்-ஃபிரண்ட் உங்க டி-ஷர்ட்தானே வீணாயிடுத்து. கவலைப்படாதீங்க... நான் உங்களுக்கு ஒரு சூப்பர் டி-ஷர்ட் பிரஸண்ட் செய்யறேன்.

ஆன்ட்டி! கோவிச்சுக்க மாட்டாங்கதானே!" என்று தலைசாய்த்து மெதுவாக ரகசியம் போல் சிவநேசனிடம் கேட்டாள்.

"ஏய்... தப்பு செஞ்சுட்டுக் கொஞ்சம் கூட பொறுப்பே இல்லாமல் இப்படிக் கதை அடிச்சிட்டு இருக்கியே... பார்த்தா படிச்ச பெண் மாதிரி இருக்க... ஆனால் நீ பேசற விதம் அப்படி இல்லை..." - என்றான் கோபமாக சஞ்சய்.

"மிஸ்டர்! என்ன ரொம்ப ஓவராப் பேசறீங்க... நான் ஏதோ பெரிய குற்றம் செய்த மாதிரி இல்ல... பில்டப் கொடுக்கிறீங்க...

நான் என்ன தொடர் குண்டு வெடிப்பதற்கு ஏற்பாடு செஞ்சேனா... இல்லை, ஏதாவது பணக்கார வாரிசைக் கடத்திட்டுப் போய்... பணம் கொடுத்தால்தான் விடுவேன்னு மிரட்டினேனா... இல்லை செயின் திருடினேனா... இல்லை ஏ.டி.எம். மிஷினில் நூதன முறையில் ரகசிய எண்களைக் கைப்பற்றி பணம் கொள்ளை அடித்தேனா...!



ஒரு சொத்து ராக்கெட்டிற்காக இவ்வளவு நேரம் என்கிட்ட சண்டை போடுகிறீர்களே... நீங்கள் செய்வது உங்களுக்கு நல்லா இருக்கா? அதுவும் இப்ப வர வெடி எல்லாம் சரியே இல்லை... புஸ்வாணம் பட்டுன்னு வெடிச்சுது. ராக்கெட் மேல போறதுக்குப் பதிலா... தெரியாம உங்க வீட்டு ஜன்னல் வழியா வந்து வீட்டுக்குள்ள விழுந்திடுச்சு...

அதுக்கு ஏதோ என்கொயரி மாதிரி செய்யறீங்களே... பாய்-ஃபிரண்ட் நீங்களாவது சொல்லக் கூடாதா?" - சிவநேசனைப் பார்த்துக் கெஞ்சினாள் அவள்.

"என்னம்மா பாய்-ஃபிரண்ட்னு சொல்றே!"

"அங்கிள்! இனிமே நாம ஃபிரண்ட்ஸ். நீங்க பாய், நான் கேர்ள். அதனால உங்களை இனிமே நான் பாய்-ஃபிரண்ட்டுன்னுதான் கூப்பிடுவேன்."

"ம்... சஞ்சய் பாவம்டா... ஏதும் சத்தம் போடாதே!"

"அங்கிள்... நீங்கதானே டி-ஷர்ட் வீணாயிடுச்சுன்னு புலம்பினீங்க... இப்ப இப்படி தடால்னு மாறிட்டீங்க..."

"சின்னப் பெண்... அதோட நாம இந்த ஃப்ளாட்லதான் இனிமே இருக்கப் போறோம். அதால எதுக்கு அனாவசியமா சண்டை, சச்சரவுன்னு தோணுச்சு."

சஞ்சய் அவளை ஒரு தினுசாகப் பார்த்து விட்டு அங்கிருந்து வெளியேறினான்.

# 2

வாழ்வு
தொடங்கும்
இடம்
நீதானே
...........
வாழ்வின்
ஆதார
சுருதி
நீதானே
...........
என்
வாழ்வின்
சந்தோஷ
மேகம்
நீதானே
...........
என்
வானில்
தோன்றிய
வண்ண
வானவில்
நீதானே
...........



மழை தொடர்ந்து பெய்து கொண்டிருந்தது. இரண்டாவது நாளாக.

ரித்விகாவின் முகம் இருண்டு போய் இருந்தது. வானத்துக் கரிய மேகங்களைப் போல.

"என்னங்க... உங்க பொண்ணு இப்படி அமைதி சிகரமா இருக்கா... அதனாலதான் மழை இப்படித் தொடர்ந்து பெய்யுதோ!"

"அட... மாலினி! நீ வேற... அவ கவலை அவளுக்கு!"

"அப்படி என்னங்க கவலை? ஏதாவது லவ் மேட்டரா... உங்ககிட்ட சொன்னாளா?" - ஆர்வமாகக் கேட்டாள் மாலினி.

"அட... சீ மக்கு! அவ இன்னும் குழந்தையாத்தான்டி இருக்கா. தீபா, தீபன் எல்லாம் அவளுக்கு ஒண்ணுதான்."

"அப்ப... ஏன் கவலையா இருக்கா?"

"மழையினால வெடி எல்லாம் வெடிக்க முடியலையாம். அதான் சோகமா இருக்கா..."

மாலினி அதைக் கேட்டுச் சிரித்தாள்.

"அட... ஏன் சிரிக்கிறே நீ! இதில என்ன காமெடி இருக்கு?"

"ம்... நல்ல காலம் லெட்டர் பாக்ஸில் ஆட்டாம் பாம் வெடிப்பது, காருக்கு அடியில் பட்டாசு கொளுத்துவது போன்ற டெக்னிக்கெல்லாம் அவளுக்குத் தெரியவில்லை."

"ஏய்... நீயே அவளைக் குட்டிச்சுவர் போல் ஆக்கி விடுவாய் போல..."

தன் அறையில் இருந்தபடியே அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த ரித்விகாவிற்கு அந்த யோசனை பிடித்துப் போனது.

தன்னுடைய தளபதியான பப்லுவை உடனே கைபேசியில் தொடர்பு கொண்டாள். பப்லு எட்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கிறான்.

"பப்லு! ஒரு ஐடியா."

"சொல்லு ரிகா... என்ன ஐடியா?"

"லெட்டர் பாக்ஸ் இல்ல... அதுக்குள்ள ஆட்டாம் பாம் எல்லாம் போட்டுடலாம். சும்மா தூள் கிளப்புற மாதிரி சப்தம் வரும்."

"வாவ்... ரிகா! இப்பதான் எனக்கு நிம்மதியாச்சு..."

"ஏன் பப்லு?"

"பக்கத்து ஃபிளாட்ல இருக்கிற அந்த அடாவடி அர்ச்சனா இப்பத்தான் ஒரு பெரிய சரத்தைப் போட்டுட்டு ரொம்ப ஃபிலிம் காட்டினா... ஃபோன் வேற செய்து வெறுப்பேத்தினா...

நம்ம யார்கிட்டயும் அந்த மாதிரி பத்தாயிரம் வாலா வெடி இல்லை... அதனால அட்லீஸ்ட் அணுகுண்டாவது இந்த மாதிரி வெடிச்சாதான் நமக்கு கெத்தா இருக்கும்."

அர்ச்சனா பக்கத்து ஃபிளாட்டில் இருக்கும் அலட்டல் பெண். படிப்பில் சுமார்தான். அவளும் ரித்விகாவும் ஒரே பள்ளியில்தான் படித்தனர்.

பொறியியற் கல்லூரியில் மெரிட் மூலம் சீட் கிடைத்தது ரித்விகாவிற்கு.



ஆனால் அர்ச்சனா மார்க் குறைவாக எடுத்ததால் அந்தக் கல்லூரியில் இடம் கிடைக்கவில்லை. ஆனால் அப்பாவின் பண உதவியால் அவள் அதே கல்லூரியில் சீட் வாங்கிக் கொண்டாள். டெய்லி ஒவ்வொரு காரில் பவனி வரும் அவளுக்குக் கர்வம் அதிகம்.

மற்றவர்களை எல்லாம் துச்சமாக மதிப்பாள். எடுத்தெறிந்து பேசுவாள். அதனாலேயே ரித்விகாவிற்கு அவள் எதிரியாக மாறினாள்.

படிப்பில், வாலிபால், டென்னிஸில் ரித்விகாவை மிஞ்ச முடியவில்லை அர்ச்சனாவால். அவளைக் கல்லூரியில் படிக்கும் பொழுது மட்டம் தட்ட முடியாத அர்ச்சனா, கொக்கு போல் சரியான சமயத்திற்காகக் காத்துக் கொண்டிருந்தாள்.

பப்லு அர்ச்சனாவைப் பற்றிச் சொன்னதும், ரித்விகாவிற்குள் இருந்த சிங்கம் சீறியது.

"பப்லு! நீ உடனே கீழே வா. எல்லார்கிட்டேயும் சொல்லிடு. ஆட்டாம் பாம் மட்டும் போதும். வேறு ஏதும் வேண்டாம்..." என்று படபடத்தாள்.

"சரி ரிகா!" என்று பணிவாகச் சொன்னான் அந்தத் தளபதி.

அடுத்து ஐந்து நிமிஷத்தில் பப்லுவின் படை கீழே தயாராக இருந்தது. அவர்களைப் பார்த்த ரித்விகாவின் இதழில் வெற்றிப் புன்னகை தவழ்ந்தது.

"வீட்டில யாரும் இதைப் பற்றி சொல்லலைதானே!" - சந்தேகமாகக் கேட்டாள் ரித்விகா.

"மூச்சு விடலை ரிகா!"

"தட்ஸ் குட். இப்ப இங்கே இருக்கிற லெட்டர் பாக்ஸ் மொத்தம் பதினைந்து. நம்மகிட்ட இருக்கிற ஆட்டாம்-பாம் ஐம்பது. அஞ்சு ஆட்டாம்-பாமை சின்னாவின் அம்மாவிடம் கொடுத்து விடலாம்."

சின்னாவின் அம்மா ஃபிளாட்டில் உள்ள எல்லோர் வீட்டுப் பாத்திரங்கள் மற்றும் துணிகளைக் க்ளீன் செய்பவள்.

"ரிகா! உன் தாராள மனசே மனசு!" - குரல் கொடுத்தான் ஒரு விசுவாசி.

"பரவாயில்லை பப்லு... அப்ப மொத்தம் நம்மிடம் மீதம் எவ்வளவு அணுகுண்டு இருக்கும்?"

பப்லு திருதிருவென விழித்தான். எஸ்.வி.சேகரின் வண்ணக் கோலங்களில் வரும் கணக்கு வாத்தியார் போல்.

ரித்விகா சட்டென அவன் கண்களுக்குத் தெரிந்தாள்.

காணாமல் போகும் சக்தி தனக்கு இல்லையே என்று வருந்தினான் அவன்.

"பப்லு! என்னடா மீதம் எவ்வளவு ஆட்டாம்-பாம்?"

"ரிகா... அது வந்து... வந்து..."

"ரிகா! பாவம். பப்லு கணக்கில் வீக். நான் சொல்றேன்..."

தன்னை அவமானப்படுத்திய விக்ரமை முறைத்தான் பப்லு. விக்ரம் அதைக் கண்டுகொள்ளவில்லை.

"ரிகா! நாற்பத்தைந்து ஆட்டாம்-பாம் நம்மிடம் இருக்கு. ஒரு லெட்டர் பாக்ஸில் மூன்று ஆட்டாம்-பாம் வீதம் வைத்தால், பதினைந்து லெட்டர் பாக்ஸில் நாற்பத்தைந்து



ஆட்டாம்-பாமும் சரியாகப் போய்விடும்..." என்றான் ரமணா படத்தில் வரும் விஜயகாந்த் போல, விக்ரம்.

"தட்ஸ் நைஸ் விக்ரம்! குட் பாய்..." என்று அவனை ரித்விகா பாராட்டினாள். கன்னத்தைச் செல்லமாகக் கிள்ளினாள்.

பப்லுவின் முகத்தில் எண்ணெய் போட்டால் வெடித்து விடும் அளவுக்குக் கோபம் தணலாகக் காய்ந்தது.

"சரி... எல்லாரும் இங்கேயே இருங்க. பப்லு, விக்ரம்... நீங்க ரெண்டு பேர் மட்டும் என்னுடன் வாங்க."

பப்லுவின் முகம் மீண்டும் ஒளிபெற்றது. இருவரும் ரித்விகாவைப் பின்தொடர்ந்தனர்.

"விக்ரம்! நீ இந்த இரண்டு ரோவில் உள்ள லெட்டர் பாக்ஸில் ஆட்டாம்-பாமை வை. பப்லு... நீ அந்த வரிசையை கவர் செய். மூன்று வை, ஒரு லெட்டர் பாக்ஸில்..."

"சரி... ரிகா!"

ஊதுபத்திகளைத் தயாராக எடுத்து வைத்தாள், ரித்விகா.

"ரிகா... எல்லாம் ரெடி."

"சரி... அந்தப் படை எல்லாம் திரட்டிக் கொண்டு வா. நான் மூன்று, இரண்டு, ஒன்று என்று சொல்லுவேன்...

ஒன்று சொல்லும் பொழுது எல்லோரும் ஆட்டாம்-பாமைப் பற்ற வைத்து விட்டு ஓடிவிட வேண்டும். யாரும் இங்கே இருக்கக் கூடாது. மரியாதையாக வீட்டுக்குப் போய் விட வேண்டும்... புரிந்ததா!"

"புரிந்தது... ரிகா"

"சரி. இதை அப்படியே அந்தப் படையிடம் சொல்லி விடுங்கள்."

"சரி ரிகா!" என்று உற்சாகமாக ஓடினார்கள் பப்லுவும், விக்ரமும்.

அடுத்த ஐந்து நிமிடத்தில் காரியத்தைக் கச்சிதமாக முடித்து விட்டு எல்லோரும் அங்கிருந்து ஓட்டமாகத் தலை தெறிக்க ஓடினர்.

திரும்பிப் பார்த்தபடியே வேகமாக ஓடி வந்த ரித்விகா, எதிரில் வந்த ஒருவன் மேல் மோதினாள். மோதிய வேகத்தில் அவன் மேல் விழுந்தாள்.

அப்பொழுது சட்டென வீதி விளக்குகள் அணைந்து போயின. கும்மிருட்டில் நிலவின் ஒளி மட்டுமே கசிந்து கொண்டிருந்தது.

"ஏய்... ஏன் இப்படித் தலைதெறிக்க ஓடி வந்தே? என்ன பிரச்சனை... யார்?" என்று அவன் முடிக்கும் முன்பு வெடிச் சத்தம் காதைத் துளைத்தது.

"காட்! தீவிரவாதிகள் வேலைதான் இது!" அவன் முணுமுணுத்துக் கொண்டே அவளை விலக்கினான்.

ரித்விகா 'இல்லை...' என்று சொல்ல வேண்டும் என்று நினைத்தாள். ஆனால் வெறும் காற்றுதான் வந்தது. அதோடு அந்த ஆணின் ஸ்பரிசம் அவளுள் ஏதோ ஒரு ரசாயன மாற்றத்தை ஏற்படுத்த... பேச முடியாமல் திணறினாள் ரித்விகா.

அடுக்கு மாடிக் கட்டிடத்தில் இருந்து கூச்சல், சப்தம் எழ... பதறியபடியே கட்டிடத்தை நோக்கி ஓடினான் சஞ்சய்.



அதற்குள் மின்சாரம் வந்துவிட... சாலையில் விளக்குகளுக்கு உயிர் மீண்டும் கிடைத்தது.

'ரொம்ப பயங்கரமான சப்தம்தான்... கூடவே கரண்ட் வேற போனதால் இரண்டு மடங்கு எஃபெக்ட்!" - தனக் குள்ளேயே முணுமுணுத்துக் கொண்டாள் ரித்விகா.

அதற்குள் சப்தம் அடங்கியது. லெட்டர் பாக்ஸ் எல்லாம் உடைந்து சிதறிப் போய் தரையில் கிடந்தன. சே! எல்லாம் வெடி... தீபாவளி வெடி.

வேண்டுமென்றே லெட்டர் பாக்ஸில் வைத்திருக் கிறார்கள். யாருடைய வேலையாக இருக்கும்... என நினைக்கும் பொழுது அவனுக்குச் சட்டென நினைவுக்கு வந்தது ரித்விகா தான்.

அந்தப் பெண் வேலையாகத்தான் இருக்கும். சத்தம் வருவதற்கு முன்பே வேகமாக ஓடி வந்தாள் அவள். ஸோ... அவளுக்கு வெடி வெடிக்கப் போகிறது என்று தெரிந்திருக்கிறது.

அவளை விடக்கூடாது. சரியான இடியட். சஞ்சய்யின் கோபம் அவனுள் புகை போல் படர்ந்தது.

லிஃப்ட் அருகே ரித்விகா நின்று கொண்டிருந்தாள்.

"ஏய் நீதானே... இங்கே வெடி வெடிக்க ஏற்பாடு செய்தது?"

"என்ன ஸார்! அன்னிக்கு ராக்கெட் வெடிச்சேன்னு சொன்னீங்க... இன்னிக்கு இங்கே வெடி வெடிச்சேன்னு சொல்றீங்க... என்னை எப்ப பார் ஏதாவது சொல்லிக்கிட்டே இருக்கீங்க.

சும்மா இந்த மாதிரி அபாண்டமா பழி சொல்ற வேலை வைச்சுக்காதீங்க. நான் அப்புறம் தீவிரமா நடவடிக்கை எடுக்க வேண்டி வரும்."

"ஓ... நீ... நடவடிக்கை எடுப்பியா? என்ன நடவடிக்கை எடுப்பே?"

"ம்... நியூசென்ஸ் கேஸ்னு போலீஸில் புகார் செய்வேன்."

சஞ்சய்யின் இதழ்களில் புன்னகை பரவியது.

"ம்... நாட் பேட். இந்த அளவுக்கு உனக்கு மூளை வேலை செய்யுதா?"

"ஹலோ! நான் கோல்ட் மெடலிஸ்ட் ஸார். இந்த மாதிரி நக்கல் பேச்செல்லாம் வேண்டாம். உங்களை மாதிரி வெட்டியாகப் பேசிக் கொண்டிருக்க என்னால் முடியாது.

எனக்கு நிறைய வேலை இருக்கிறது..." என்றபடியே அங்கிருந்து நழுவினாள் அவள்.

அவள் போவதையே அவன் பார்த்துக் கொண்டிருந்தான்.

எப்படி வாயாடுகிறாள் இவள். கொஞ்சமும் பயம் இல்லாமல்... என்னிடம்.

மிஞ்சிப் போனால் இருபது... இல்ல இருபத்தொன்று வயதுதான் இருக்கும். ஆனால் இந்த வயசுப் பருவப் பண்களுக்கு இருக்கும் அச்சம், நாணம் எக்[illegible]
வும் இவளிடம் [illegible]



# 3

துடிக்கிறேன்
நான்
...........
வார்த்தை
எனும்
அமிலத்தால்
உன்
உணர்வை
எரித்து
விட்டேன்
நான்
...........
துடிக்கிறேன்
நான்
...........
மன்னிப்பாயா
என்னை?
உயிர் பறவை
என்னை விட்டு

சும்மா இந்த மாதிரி அபாண்டமா பழி சொல்ற வேலை வைச்சுக்காதீங்க. நான் அப்புறம் தீவிரமா நடவடிக்கை எடுக்க வேண்டி வரும்."

"ஓ... நீ... நடவடிக்கை எடுப்பியா? என்ன நடவடிக்கை எடுப்பே?"

"ம்... நியூசென்ஸ் கேஸ்னு போலீஸில் புகார் செய்வேன்."

சஞ்சய்யின் இதழ்களில் புன்னகை பரவியது.

"ம்... நாட் பேட். இந்த அளவுக்கு உனக்கு மூளை வேலை செய்யுதா?"

"ஹலோ! நான் கோல்ட் மெடலிஸ்ட் ஸார். இந்த மாதிரி நக்கல் பேச்செல்லாம் வேண்டாம். உங்களை மாதிரி வெட்டியாகப் பேசிக் கொண்டிருக்க என்னால் முடியாது.

எனக்கு நிறைய வேலை இருக்கிறது..." என்றபடியே அங்கிருந்து நழுவினாள் அவள்.

அவள் போவதையே அவன் பார்த்துக் கொண்டிருந்தான்.

எப்படி வாயாடுகிறாள் இவள். கொஞ்சமும் பயம் இல்லாமல்... என்னிடம்.

மிஞ்சிப் போனால் இருபது... இல்ல இருபத்தொன்று வயதுதான் இருக்கும். ஆனால் இந்த வயசுப் பருவப் பெண்களுக்கு இருக்கும் அச்சம், நாணம் எக்ஸெட்ரா எதுவும் இவளிடம் மருந்துக்குக் கூட இல்லை. வியந்தான் அவன்.



# 3

துடிக்கிறேன்
நான்
...........
வார்த்தை
எனும்
அமிலத்தால்
உன்
உணர்வை
எரித்து
விட்டேன்
நான்
...........
துடிக்கிறேன்
நான்
...........
மன்னிப்பாயா
என்னை?
உயிர் பறவை
என்னை விட்டுப்
போகிறது பறந்து!
மன்னிப்பாயா
என்னை?

"பொண்ணா... அது பேய். நம்ம பசங்க எல்லாம் அதால கெட்டுக் குட்டிச் சுவராகுது..." – அங்கலாய்த்தாள் அம்புஜம்.

'வசந்தம்' அடுக்கு மாடி குடியிருப்பில் மூன்றாவது மாடியில் குடியிருப்பவள்.

பட்டாசு வெடித்தது நாங்கதான் என்று ஒரு பயந்தாங்குளி கோழைப் பயல் ஒத்துக் கொண்டதால் எல்லாரும் கும்பலாக மாட்டிக் கொண்டனர்.

ஃபிளாட்டில் உள்ள பெருசுகள் எல்லோரும் கீழே உள்ள ஹாலில் கூடினர். சந்தானமும் அதில் இருந்தார்.

"ஸார்! நாங்க புதுசா எதுவும் சொல்லப் போறது இல்லை..." ஆரம்பித்தார் நாராயணன்.

"ம்... தெரியும். ரித்விகா பற்றிப் பேசத்தானே... இப்ப என்னை இங்கு அழைத்தீர்கள்."

"ஆமாம் ஸார்... ரொம்ப ஜாஸ்தியாயிடுத்து... தொந்தரவெல்லாம்!" – ஒத்து ஊதினார் விஸ்வநாதன்.

"ஸார்... பாவம் சின்னப் பெண். தீபாவளி சமயத்தில் வெடி வைச்சிருக்கா... அதைப் போய் பெரிது பண்ணிண்டு... நாம அடிக்காத லூட்டியா... சின்ன வயதில்!" – வித்தியாசமாகப் பேசினார் சிவநேசன்.

சந்தானம் அவரைப் பார்த்தார். அவர் கண்களில் ஆச்சரியம் கலந்த நன்றி தெரிந்தது.

காரணம் இதுவரை ரித்விகா செய்வதை, அடிக்கும் லூட்டிகளை யாரும் பரிந்து பேசுவது இல்லை.

"ரொம்ப தேங்க்ஸ் ஸார்... நீங்க எந்த வீடு?"



"நான் இரண்டாவது மாடி ஹவுஸ் நம்பர் பி ஸார். இப்பதான் குடி வந்தேன்."

"ஸார்... நீங்க புசுது. அதுதான் ரித்விகாவுக்கு சப்போர்ட் செய்யறீங்க..."

போன வாரம் கீழே கிரிக்கெட் விளையாடி இருக்காங்க. ரித்விகா அடிச்ச பந்து, வீட்டு ஜன்னல் கண்ணாடியைப் பதம் பாத்திடுச்சு.

வீட்டுக்குள்ள விழுந்த பந்து டைனிங் டேபிள் மேல் இருந்த பீங்கான் பாத்திரங்கள் மேல் பட்டு எல்லாம் படபடவென அப்பளம் மாதிரி நொறுங்கிப் போயிடுத்து..."

"ம்... தீபாவளி ராக்கெட்... இப்ப சித்த நாழி முன்னாடிதான் என் டி-ஷர்ட்டில் பறந்து போச்சு. டி-ஷர்ட்டும் போயே போச்சு. அதெல்லாம் நினைச்சா முதல்ல கஷ்டமாத்தான் இருக்கும். அப்புறம் பழகிடும். இந்த வயசில அதை எல்லாம் நாம் ரசிக்கக் கத்துக்கணும்."

"ஸார்... உங்க வீட்டு ஜன்னல் உடைஞ்சாத் தெரியும். பிசாத்து டி-ஷர்ட்... அதான் டயலாக் பேசறீங்க..."

"அது பிசாத்து டி-ஷர்ட் இல்ல... என் மனைவி எனக்குப் பரிசளித்தது..."

"தீபாவளி என்பதற்கு என்ன அர்த்தம்? நம்மிடம் உள்ள தீயகுணங்கள் – ஆசை, கோபம், காமம், பொறாமை... இதெல்லாம் அழியணும். நம்மை விட்டு விலகணும்.

அன்பு எனும் ஒளி எல்லாவிடத்திலும் பரவ வேண்டும். அதுதான் இந்தப் பண்டிகையின் தாத்பரியம். ஆனால் நாம இப்ப என்ன பேசிண்டு இருக்கோம்.

எல்லோரும் கோபமாக, பொறுமை இழந்து ரித்விகாவை மட்டும் குற்றம் சொல்கிறோம். புதிதாக வந்திருக்கும் சிவநேசன் ஸார் மட்டும் வித்தியாசமாக யோசிக்கிறார்.

அவருக்கு இருக்கிற அந்த மன்னிக்கும் மனப்பக்குவம்... ஏன் நம்ம எல்லாருக்கும் இல்லை. ரித்விகா செஞ்சது தப்புதான். அவ மட்டும் இதில் சம்பந்தப்படலை. எல்லார் வீட்டில இருக்கிற பொடிப்பசங்களும் இதில இன்வால்வ் ஆகியிருக்காங்க.

அதனால நாம் இதைப் பெரிது பண்ண வேண்டாம். சந்தானம் ஸார்... அவர் மககிட்ட பேசட்டும். அடுத்த தடவை இந்த மாதிரி தப்பு நடக்காம அவர் பார்த்துப்பார்!" என்றார் செயலாளர் பாலாஜி.

"சரி... சார். நீங்க சொல்றதுக்கு... நாங்க கட்டுப்படறோம்."

"ரொம்ப நன்றி ஸார்!" என்றார் சந்தானம்... பாலாஜியிடம்.

"இதில என்ன ஸார் இருக்கு. தீபாவளி வாழ்த்துக்கள்!" என்றார் புன்முறுவலோடு பாலாஜி.

ஹாலில் இருந்து எல்லோரும் கலைந்து சென்றனர். நடந்து போய்க் கொண்டிருந்த சிவநேசனை நோக்கி வேகமாகச் சென்றார் சந்தானம்.

"ரொம்ப ரொம்ப தேங்க்ஸ் ஸார்!"

"அட... எதுக்கு தேங்க்ஸ் எல்லாம்..."

"இல்லை... நீங்க புதுசா குடி வந்தாலும் ரித்விகாவிற்காகப் பரிஞ்சு பேசினீங்களே... அதுக்குத்தான்."



"அட... பரவாயில்லை ஸார். உங்க பெண்ணைப் பார்த்து... அந்தக் குழந்தை பேசறதைக் கேட்டு நானே... முதலில் கொஞ்சம் ஆடிப் போனது உண்மைதான்.

ஆனா அந்தக் குழந்தை மனசில கள்ளம் இல்லை. கல்மிஷம் இல்லை. அதனால் அப்புறம் யோசிச்சப்ப தப்பா ஏதுமே தெரியலை. ரித்விகாவையும் அழைச்சுண்டு வாங்கோ ஆத்திற்கு..."

"பேஷா... வர்றோம்!" என்றார் சந்தானம், வாய் எல்லாம் பல்லாக.

இருக்காதா பின்ன... முதல் முதலாக ஒருவர் தன் பெண்ணைப் பற்றி நல்லதனமாகச் சொல்கிறார். அதைக் கேட்க கேட்க அவர் மனம் பெருமிதம் கொண்டது.

"நீங்களும் வாங்க... குடும்பத்தோடு."

"இப்போதைக்கு நான் ஒண்டிக்கட்டை."

"ஏன்?" - என்றார் பதட்டமாக சந்தானம்.

"அடடா... நீங்க நினைக்கிற மாதிரி ஏதும் இல்லை. ஆத்துக்காரி புள்ளையாண்டானோட அமெரிக்காவில சவுக்கியமா இருக்கா... மாட்டுப் பெண்ணும் தங்கம். அதனால நான் அவளை அங்கே அனுப்பி வைச்சேன்."

"ஓ... அப்படியா!"

"ஆமாம் ஸார். அதோட என் புள்ளையோடு சிநேகிதன்... சஞ்சய்ன்னு பேர். அவன் வந்து அப்பப்ப என்னைக் கவனிச்சுப்பான்.

ரொம்ப நல்ல பையன் ஸார். அந்த வகையில நான் ரொம்ப அதிர்ஷ்டசாலிதான்."

"ஆமாம் ஸார்... பெத்துப் பிள்ளைங்களே சரியில்லாத இந்தக் காலத்தில பிள்ளையோட சிநேகிதன் நல்லா உங்களைக் கவனிச்சிக்கிறான்னா... அது நீங்க செய்த அதிர்ஷ்டம்தான்."

"ஆமாம் ஸார். நல்ல சூட்டிகையான பையன். சஞ்சய்யின் அம்மா, அப்பா சின்ன வயசிலேயே தவறிட்டா... தாத்தா தான் அவனை வளர்த்திருக்கார். அவரும் சமீபத்தில் இறந்திட்டார்.

பாவம்! சஞ்சய் ரொம்ப கலங்கிப் போயிட்டான். இப்ப... இப்பதான் கொஞ்சம் கொஞ்சமா அந்த இழப்பில இருந்து வெளியே வர்றான்."

"அடப் பாவமே! நல்லவர்களைத்தான் பகவான் ரொம்பவே சோதிக்கிறார்."

"சரி... கிளம்பறேன்... நாழியாச்சு. புவனா காத்துண்டு இருப்பா..."

"புவனாவா?"

"என் ஆத்துக்காரிதான் ஓய்!"

"ஓ... ஆனா அவங்க அமெரிக்காவில இருக்கிறதா சொன்னேளே...!"

"ஆமாம். வெப்-கேம் வழியா பேசிப்போம். இப்ப இங்க சாயங்காலம் ஆறு மணி. அங்க நியூஜெர்ஸியில் இப்பதான் காலை எட்டரை மணி."

"ஓ... பரவாயில்லையே! கம்ப்யூட்டர் எல்லாம் அத்துப்படி போல..."

"எல்லாம்... சஞ்சய் சொல்லிக் கொடுத்ததுதான்."



"சரி... சரி. போய் உங்க சாட்டிங்கை கண்டினியூ செய்யுங்க..." என்றார் சிரித்தபடியே சந்தானம்.

"சரி.... ஓய்!" என்று சிரித்து விட்டு அங்கிருந்து அகன்றார்.

வீட்டுக்குள் உற்சாகமாகப் பாடல் ஒன்றை முணுமுணுத்தபடியே சென்றார் சந்தானம்.

**"ஹாய்** டாடி... என்னை எல்லாரும் மீட்டிங்கில் வசை பாடி இருப்பாங்களே...!"

"ம்... எல்லாரும் இல்லைடா!"

"அட... இது என்ன ஆச்சரியம்!"

"ஆமாம்... அதிசயம் ஆனால் உண்மை."

"அப்பா! சஸ்பென்ஸ் போதும். என்ன சொன்னாங்க?"

"எல்லாம் வழக்கமா சொல்றதுதான். நீ ரொம்ப அடாவடி செய்யறே... அடுத்தவங்களுக்குத் தொல்லை கொடுக்கிறே... உன்னால் ஃப்ளாட்டில் உள்ள மற்ற பசங்க எல்லாம் கெட்டுப் போறாங்க... எக்ஸெட்ரா... எக்ஸெட்ரா..."

"நீங்க இப்படிக் கூலா இருக்கிறதாலதான் அவளுக்குத் திமிர் ஏறுது..." என்றாள் மாலினி.

"அட... மாலினி பாவம் அவ... ரித்து! உனக்கு ஒரு விஷயம் தெரியுமா! அந்தக் கூட்டத்தில உனக்கு ஒரு சப்போர்ட்டர் இருந்தார்."

"அட... எனக்கா? ஆச்சரியமா இருக்கே... யார் டாடி அது?"

"புதுசா குடி வந்திருக்கார். பேர் சிவநேசன்."

"யார் அது... புதுசா குடி வந்திருக்கிறது... ஓ! பாய்-ஃபிரண்டா பரவாயில்லையே... பாய்-ஃபிரண்ட் என்னைப் பற்றி நல்லவிதமா சொல்லியிருக்காரா... நாட் பேட்!"

"ஏய்... என்னடி அச்சுபிச்சுத்தனமா பாய்-ஃபிரண்ட் அப்படி... இப்படின்னு பேச்சு..."

"அம்மா! நீ சும்மா இரு. உனக்கு இதெல்லாம் புரியாது. இதெல்லாம் பெரியவங்க விஷயம்."

"அடக் கழுதை. அடிச்சேன்னா தெரியும்."

"போம்மா..." என்று சிரித்து விட்டு அங்கிருந்து வெளியேறினாள், வேகமாக ரித்விகா.

"இவ அடிக்கிற லூட்டி தாங்க முடியலை!"

"குழந்தைடி அவ..."

"ஆமாம்... தொட்டில்ல போட்டுக் கொஞ்சுங்க. கல்யாண வயசாச்சு அவளுக்கு!"

"அவளுக்கு எவ்வளவு வயசானாலும் அவ எனக்குக் குழந்தைதான்டி!"

"சரி... நீங்களாச்சு... உங்க பெண்ணாச்சு. எனக்கு அடுப்பில் நிறைய வேலை இருக்கு."

"அப்படியே எனக்குக் கொஞ்சம் காப்பி."

"ம்... கண்டிப்பா!"

அடுத்த நாள் காலை பறவைகளின் சப்தம் கேட்க, ரித்விகா மனமின்றி கண் விழித்தாள். அம்மாவின் காபியின் நறுமணம் ஹாலைக் கடந்து அவள் அறையில் பரவி இருந்தது.



"புஜ்ஜி குட்டி... நான் போய் நைஸா காப்பி குடிச்சிட்டு வர்றேன். நீ சமர்த்தா இங்கேயே இருக்கணும்..." என்று தன் படுக்கையில் இருந்த டெடி பொம்மையைக் கொஞ்சினாள்.

"அம்மா... குட் மார்னிங்."

"குட் மார்னிங்."

"அம்மா... ப்ளீஸ் எனக்கு..." என்று அவள் முடிக்கும் முன்பு மாலினி குறுக்கிட்டாள்.

"உனக்குக் காப்பி எல்லாம் கிடையாது."

"அம்மா... ப்ளீஸ்!"

"ஏய்... போ. போய் பல் துலக்கிட்டு வா."

"அம்மா ஒழிக! அவள் அராஜகம் ஒழிக!" என்று கத்தியபடியே ஹாலுக்கு வந்தாள்.

பேப்பரில் மூழ்கி இருந்த சந்தானம் தலையை நிமிர்த்திப் பார்த்தார்.

"என்னடா... ரித்து!"

"அப்பா... அம்மா எனக்குக் காப்பி கூடக் கொடுக்க மாட்டேங்கிறா!"

"அவ்வளவுதானே! இந்தா என்னோட காப்பி. இதை நீ குடி..." என்று டேபிளில் இருந்த காப்பியை அவளிடம் நீட்டினார்.

"அப்பான்னா அப்பாதான்!" – அவர் கன்னத்தைச் செல்லமாக நிமிண்டி விட்டுச் சென்றாள்.

"நீங்க செய்யறது.. துளிகூட நல்லா இல்லை. இவ உங்களாலதான் கெட்டுக் குட்டிச் சுவராயிட்டா..."

"அம்மா! இப்படி எல்லாம் பேசாதே!"

"ஹேற... எப்படிடி பேசறது?"

"சொல்றதை ஒழுங்காச் சொல்லு..."

"என்னடி பேசற... ஒண்ணும் புரியலை."

"கெட்டுக் குட்டிச் சுவராயிட்டான்னு சொல்லாதே. என் உயரம் ஐந்தரை அடி. அதனால் கெட்டுப் பெரிய சுவர் ஆயிட்டா... அப்படின்னு சொல்லு."

சந்தானம் கடகடவெனச் சிரித்தார். மாலினி அவரை முறைத்தாள்.

"அப்பா... நான் இன்னிக்கு ஃபிரண்ட்ஸோட படம் போறேனே... ஜாலி!"

"இன்னிக்கு ஆஃபீஸ் போகலையா ரித்து!"

"ம்... போகணும் அப்பா. வேலை இருக்கு. இது நைட் ஷோ தானே!"

"ஏய்... நைட் ஷோவெல்லாம் வேண்டாம்." அதட்டினாள் மாலினி.

"அம்மா... நான் உன்கிட்ட பேசலை. அப்பாகிட்டதான் பேசறேன்."

"ரித்து! காலம் கெட்டுக் கிடக்குடி... அதான் ப்ளீஸ்!" என்று கெஞ்சினாள் மாலினி.

"அம்மா... சென்னை எவ்வளவு பாதுகாப்பான சிட்டி. நீ ஏதோ பழைய பஞ்சாங்கம் மாதிரிப் பேசறே."

"ஏய்... சரிகாஷாவை ரவுடிங்க துரத்தி, கேலி செஞ்சது சென்னையில்தான். பாவம் அழகான சின்னப் பெண்.



பயத்தில எங்கோ மோதி, தலையில அடிபட்டு உயிரே போயிடுச்சு. அது மட்டும் இல்லை... ஒரு பெரிய ஷாப்பிங் மாலில் பெண்களை ஈவ் டீஸிங் செய்ததற்காக சமீபத்தில் நிறைய இளைஞர்களைக் கைது செய்திருக்கிறார்களாம்."

"அம்மா... அப்ப ரவுடிங்க எல்லாரும் உள்ளே ஜெயிலில் பத்திரமா இருக்காங்க. அதனால எனக்கு எந்தப் பிரச்சனையும் வராது."

"நான் வேண்டுமானால் படம் முடிந்த பின்பு உன்னை அழைத்துப் போகவா ரித்து!"

"அப்பா... நீங்களும் அம்மா கட்சியில் சேர்ந்து கொண்டீர்களா?"

"இல்லை... ரித்து! நான்..." என்று அவர் முடிக்கும் முன்பு குறுக்கிட்டாள் மகள்.


"அப்பா... என் ஃபிரண்ட்ஸ் எல்லாம் என்னைக் கிண்டல் அடிப்பாங்க. நீங்க வராதீங்க. நான் நந்தினியோடு திரும்பி வந்து விடுவேன்."

"சரிடா... பத்திரம்."

ரித்விகா உற்சாகமாகக் குளிக்கச் சென்றாள்.

# 4

## ஏன் வந்தாய் என் வாழ்வில்?






சொல்
பெண்ணே!
எனக்கே
நான்
நண்பன்
இல்லை
.........
உன்னை
எப்படி
நான்
ஏற்பது?
ஏன்
வந்தாய்
என்
வாழ்வில்
சொல்
பெண்ணே
.........

"ஏய் நந்தினி! நீ அப்ப படத்துக்கு வரலை, அப்படித்தானே!"

"ஏய் ரிகா... ப்ளீஸ் புரிஞ்சுக்கோ. மதன் ஊரில் இருந்து வர்றான்."



"மதன் வந்தா என்னடி... படம் நைட் ஷோதான். நாளைக்கு சனிக்கிழமை. லீவுதான். மதனுடன் நீ நல்லா டைம் ஸ்பெண்ட் செய்யலாம்."

"ம்... சூர்யா படம். ஏழாம் அறிவு. எனக்கும் மனசு அடிச்சுக்குது. ஆனால் மதன் தப்பா நினைப்பார்."

"மதன் அவ்வளவு பொஸஸிவ்வா... நீ சூர்யா படம் பார்க்கிறது அவருக்குப் பிடிக்காதா?"

"ம்... அது அப்படி இல்லை ரிகா. அவர் ஃபிளைட் நைட் ஒன்பதரை மணிக்குத்தான் லேண்ட் ஆகுது. நான் அவரை ஏர்போர்ட்டில் ரிசீவ் செய்யணும். அதை அவர் எதிர்பார்ப்பார்."

"ஸோ.. நீ ஏழாம் அறிவு படத்தை, சூர்யாவை நினைச்சுகிட்டே... மதனை ஏர்போர்ட்டில் ரிசீவ் செய்வே அப்படித்தானே!" என்றாள் கோபமாக.

"ரிகா! உனக்கு இதெல்லாம் புரியாது. நீ சின்னப் பெண்."

"ஆமாம்... நீ பாட்டி. நான் சின்னப் பெண். போடி... நீ என்னோட ஒரு வயசு பெரியவ... தட்ஸ் ஆல். ஏதோ பாட்டி மாதிரிப் பேசறே?"

"ம்... ஆனால் எனக்குத் திருமணம் ஆகிவிட்டது ரிகா. அது நிறைய அனுபவங்களைச் சொல்லிக் கொடுக்கும். விட்டுக் கொடுத்தல், பகிர்ந்து கொள்ளுதல், புரிந்து கொள்ளுதல் என நிறைய சொல்லிக் கொண்டே போகலாம்."

"அடப் போடி... மாரல் சயின்ஸ் க்ளாஸ் மிஸ் மாதிரி இருக்குது... நீ பேசறது!"






"இப்ப அப்படித்தான் இருக்கும் ரிகா. நீயும் ஒரு நாள் திருமணம் செய்துப்ப அப்ப புரியும்... உனக்கு நான் சொல்றதெல்லாம்..."

"ஏய்... அதெல்லாம் எனக்குச் சரி வராது."

"இப்படித்தான் சொல்லுவ... அப்புறம் மிஸ்டர். ரைட் உன் வாழ்க்கையில் வந்த பின்பு தெரியும்... நீ எப்படி இருக்கப் போறன்னு பார்க்கத்தானே போறேன்."

"இந்த வாழ்க்கையில் இருக்கிற சுகமே தனிதான் நந்தினி. நம்மளைப் பார்த்துக்க பெற்றோர் இருக்காங்க... நோ ரெஸ்பான்ஸிபிளிடிஸ்..."

"ஓ... அந்தப் பொறுப்புகளுக்குப் பயந்துதான் ஜகா வாங்கிறியா?"

"இருக்கலாம் நந்தினி... அதோட அம்மா மாதிரி காலையில எழுந்து காப்பி கலந்து, டிபன் செஞ்சு அப்பாவை ஆபீஸிற்கு அனுப்பி... அப்புறம் என் போன்ற ஒரு சோம்பேறிப் பெண்ணை தாஜா செய்து, வேலைக்கு அனுப்பி... இதெல்லாம் என்னால் செய்ய முடியும் என்று தோன்றவில்லை."

"ம்... பார்க்கலாம். நீ என்ன செய்யப் போறன்னு...?"

"சவாலா... ஐ அம் ரெடி."

"போடி... இன்னிக்குப் படத்துக்கு என்ன செய்யப் போறே?"

"ம்... ஒரு டிக்கெட். அதான் உன் டிக்கெட்டை என்னடி செய்யறது?"

"பேசாமல் தியேட்டர் வாசலில் கூவிக் கூவி வித்திடு."



"ம்... நாட் பேட். அந்தப் பைசாவிற்குக் கூட ஒரு பாப்-கார்ன் வாங்கலாம்."

"சே... விளையாட்டுக்குச் சொன்னா அதையே சீரியஸா... செய்வே போல..."

"அதுதான் ரித்விகா. ஆனால் நான் என் ஸ்கூட்டியை வேறு வீட்டில் வைத்து விட்டேன். நீ என்னை உன் காரில் டிராப் செய்வாய் என்று நினைத்து அப்படிச் செய்து விட்டேன். நீதான் இப்படி காலை வாரி விட்டுட்டியே... அதுவும் கடைசி நிமிஷத்தில்."

"சாரி ரிகா... மதன் இப்படி திடுதிப்னு வருவார்ன்னு நான் நினைக்கலை. நெக்ஸ்ட் மன்த் தான்டி அவர் வர்றதா இருந்தது. சட்டுன்னு பிளான் மாறிடுச்சு."

"ம்... மதன் இப்படி வில்லனா ஆயிட்டாரே!"

"ஏய்... என் ஹீரோவைத் தப்பா பேசாதே!"

"அப்பாவை வேண்டுமானால் வந்து அழைத்துப் போகச் சொல்லலாம். படம் முடிந்த பின்பு... ஆனால் பிரெஸ்டிஜ் பிராப்ளம்."

"அது என்ன பிரஷர் குக்கரின் பிரச்சனைக்கும் உன் அப்பா வந்து உன்னை அழைத்துக் கொண்டு வருவதற்கும் என்ன சம்மந்தம்?"

"மக்கு... சமையலைத் தாண்டிக் கொஞ்சம் யோசி. நான் சொல்றது குக்கர் இல்லை. தன்மானப் பிரச்சனை நந்தினி..."

"ஓஹோ... அப்பாகிட்ட என்னடி தன்மானம் வேண்டிக் கிடக்கு..."

ம்... நான் அப்படித்தான். காலையில அவர் பிக்-அப் செய்யட்டும்மான்னு கேட்டப்ப... வேண்டாம்னு சொல்லிட்டேன். அதுவும் ஒரு சீன் போட்டு வேண்டாம்ன்னு சொன்னேன்.

என் ஃபிரண்ட்ஸ் எல்லாம் என்னைக் கிண்டல் செய்வாங்கன்னு சொன்னேன். இப்ப போய் சந்தானம்கிட்ட எப்படிடி நான் கேட்க முடியும்?"

"அட ராமா... அப்பாவை இப்படியா மரியாதை இல்லாமல் அழைப்பது..."

"என் அப்பாவைத் தான்டி நான் அப்படி அழைக்கிறேன். உனக்கென்னடி கஷ்டம்!"

"உன்னோட பேசி ஜெயிக்க முடியாதுடி. எனக்கு வேலை இருக்கு..." - என்று லஞ்ச் டப்பாவை மூடினாள் நந்தினி.

"ம்... உனக்கு மட்டும்தான் வேலை. நான் இங்கே ஆபீஸில் கிரிக்கெட் விளையாடப் போறேன்... பார்."

"காட்... உன்னோட பேசி ஜெயிக்க முடியாது!" என்றபடியே கேண்டீனிலிருந்து வெளியேறினாள் நந்தினி.

'ஒரு டிக்கெட்டை விற்று விடலாம். படம் முடிந்து ஆட்டோவில் வந்து விடலாம்... அதுதான் பெஸ்ட்!' என்று தனக்குள்ளேயே பேசிக் கொண்டாள் ரித்விகா.

நல்ல படங்களை விரும்பிப் பார்ப்பாள் அவள். மணிரத்னம் படம் ராவணன் வெளிவந்த பொழுது ஆவலுடன் அதை முதல் நாள் முதல் ஷோவிலேயே சத்யம் தியேட்டரில் பார்த்தாள்.



ஆனால் படம் அவளுக்குப் பிடிக்கவில்லை. மனசு நொந்து போய் மணிரத்னத்திற்கு ஒரு இமெயில் அனுப் பினாள். 'அடுத்த படமாவது நன்றாக எடுங்கள். இல்லா விட்டால் ரிடையர் ஆகிவிடுங்கள்.

நாயகன், ரோஜா, மௌனராகம் எங்கள் மனதில் இருக்கும்... நீங்காத நினைவுகளுடன்!' என்று மனதில் இருக்கும் உணர்ச்சிகளைக் கொட்டிய பின்பே அவள் மனம் சமாதானம் ஆனது.

மணிரத்னத்திடமிருந்து பதில் இமெயில் வந்தவுடன் அவள் மகிழ்ச்சியில் திக்குமுக்காடினாள்.

'உங்களின் கருத்திற்கு நன்றி. அடுத்த படம் கண்டிப்பாக உங்கள் மனதில் இடம்பெறும்...' என்று நறுக்கெனப் பதில் வந்தது.

அதை ரித்விகா எல்லோரிடமும் காட்டினாள். முக்கியமாக அலட்டல் அர்ச்சனாவிடம்.

அர்ச்சனாவின் முகம் பொறாமையால் சின்னதாகிப் போனதை அவள் ரசித்தாள்.

பழைய ஞாபகத்தில் மூழ்கி இருந்தவளைக் கலைத்தது இண்டர்காம் ஒலி.

"மேடம்... உங்களைத் தேடி ஒரு விசிட்டர் வந்திருக் கிறார். பெயர் கணேஷ். உங்க காலேஜ் மேட்டாம்..." என்றாள் ரிசப்ஷனிஸ்ட்.

'ம்... யார் கணேஷ்!' என்று ஒரு நிமிடம் யோசித்த வளுக்குப் பொறி தட்டியது.

"ஓ... ஜொள்ளு பார்ட்டியா!"

"மேடம்... என்ன மேடம்?" பதறினாள் ரிசப்ஷனிஸ்ட்.

"ஓ... ஸாரி. நான் உன்னைச் சொல்லவில்லை சக்தி. கணேஷை அங்கேயே இருக்கச் சொல். நான் வருகிறேன்."

"ஹாய் கணேஷ்! ஹவ் ஆர் யூ?"

"ஹி... ஹி... ரிகா நான் நல்லாயிருக்கேன். நீ... நீ அப்படியேதான் இருக்க..." என்றான் அவளை ஓரக் கண்ணால் பார்த்தபடியே.

இவன் திருந்தவே மாட்டான். தலை குனிந்து கொண்டு.... வெட்கப்பட்டுக் கொண்டு... காலேஜில் பார்த்தப்ப எப்படி இருந்தானோ... அப்படியேதான் இன்னமும் இருக்கான்.... என்று மனதிற்குள் நினைத்துத் தனக் குள்ளேயே சிரித்துக் கொண்டாள் அவள்.

"சரி... கணேஷ். எதுக்கு என்னைப் பார்க்க இங்கே வந்தீங்க?"

"ஹி... ஹி... எனக்குப் பக்கத்து காம்பளக்ஸில்தான் வேலை. இன்னிக்குத்தான் சேர்ந்தேன். உன்னைப் பற்றி அர்ச்சனாவிடம் கேட்டேன். அவள்தான் நீ இங்கு இருப்ப தாகச் சொன்னாள்!"

சொல்லி முடித்தவனைப் பார்க்க பரிதாபமாக இருந்தது அவளுக்கு.

ஏ.ஸியை மீறி அவன் முகத்தில் வியர்வை. முகம் முழுவதும் பயம் என்னும் போர்வையைப் போர்த்தி இருப்பது அவளுக்குத் தெளிவாகத் தெரிந்தது.

"தேங்க்ஸ் கணேஷ். உங்களுக்கு வந்து என்னைப் பார்க்கணும்னு தோணிச்சே!"



"ஹி... ஹி... ரிகா... என்ன இப்படிக் கேட்டுட்டே. நான் உனக்காக இதைக் கொண்டு வந்தேன்!" என்று பாண்ட் பாக்கெட்டில் இருந்து ஒரு கவரை எடுத்தான். அவளிடம் நீட்டினான்.

"என்ன... இது?"

"அதை நீ அப்புறமாகப் படி ரிகா... ப்ளீஸ்!"

"லவ் லெட்டரா கணேஷ்!"

"ஆ... ஆமாம் ரிகா. அது எப்படி உனக்கு..."

பேசி முடிக்கும் முன்பு குறுக்கிட்டாள் அவள். "கணேஷ்... இதைக் கண்டுபிடிக்கிறதுக்கு ராக்கெட் சயின்ஸ் படிக்க வேண்டாம்..." என்றவள் அதைக் கிழித்துக் குப்பைத் தொட்டியில் போட்டாள்.

"ரிகா... என்ன இது? என்னை உனக்குப் பிடிக்கவில்லையா?"

"கணேஷ்! நீ எனக்கு ஒரு ஃபிரண்ட். அவ்வளவுதான். அதைத் தாண்டி வேறு எந்த எண்ணமும் என் மனதில் இல்லை. உன் மனதிலும் இருக்கக் கூடாது. என்ன நான் சொல்வது புரிகிறதா?"

"புரியுது... ரிகா!" என்றான் கணேஷ்.

அவனைப் பார்க்க அவளுக்குப் பரிதாபமாக இருந்தது. இந்த நூற்றாண்டில் இப்படியொரு ஆண்பிள்ளை என அவளுக்கு வியப்பாக இருந்தது.

"ஸாரி ரிகா! நான் உன்னைத் தப்பா நினைச்சிட்டேன். என் மேலே கோபமா?"

"அதெல்லாம் இல்லை கணேஷ்!"

"இல்லை ரிகா... உனக்குக் கோபம்தான். ஆனால் அதை அடக்கிட்டு இருக்க..."

"அட... அதெல்லாம் ஒன்றும் இல்லை."

"இல்லை... ரிகா! உனக்குக் கோபம்தான்."

அடச்சே! இவன் என்ன பதினாறு வயதினிலே பட சப்பாணி கேரக்டர் கமல் மாதிரி... 'சந்தைக்குப் போகணும்... ஆத்தா வையும்...' போல சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்றானே... என்ன செஞ்சா இவன் வாயை மூடுவான். ஒரு நொடி யோசித்தாள்.

"கணேஷ்! எனக்குக் கோபம் இல்லை. நீயும் நானும் ஃப்ரெண்ட்ஸ்தான். அதை நிரூபிக்கிற வகையில் நாம இன்னிக்குப் படத்துக்குப் போறோம். ஏழாம் அறிவு. உனக்கு ஓ.கே.தானே!"

"ஓ... ஓ.கே. ரிகா!" - ஆயிரம் வாட்ஸ் பல்பாக அவன் முகம் பிரகாசித்தது.

"சரி... அப்ப சாயங்காலம் ஏழு மணிக்குக் கிளம்பலாம். வில்லிவாக்கம் பி.வி.ஆர். காம்ப்ளக்ஸ். ஓகே.வா!"

"ஓரி... ஓரி... சரி ரிகா!"

"குட். அப்ப ஏழு மணிக்கு இங்கே வந்திடு."

"சரி... ரிகா."

"அப்புறம் உன்னிடம் டூவீலர் இருக்கா?"

"இ... இருக்கு. ஆனால்..."

"பெட்ரோல் இல்லையா?"



"அதெல்லாம் இருக்கு."

"அப்ப ஏன் தயங்கறே?"

"நான்... நான் இதுவரை யாரையும் வைத்து ஓட்டியது கிடையாது. பயம்மா இருக்கு எனக்கு... பேலன்ஸ் போய் விழுந்திடுவோமோன்னு..."

அவளுக்கு வாய் விட்டுச் சிரிக்க வேண்டும் போல் இருந்தது. கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

"சரி... நான் ஓட்டுறேன். நீ பின்னாடி உட்கார். சரியா...!"

"ஓ.கே. ரிகா!"

"சரி... கிளம்பு எனக்கு நிறைய வேலை இருக்கு."

"ஓ.கே. ரிகா!"

அவன் போன பின்பு இருக்கைக்கு வந்தவள்... அடக்க முடியாமல் கலகலவெனச் சிரித்தாள்.

"ஏய்... என்ன ஆச்சு?" என்றாள் நந்தினி.

கணேஷைப் பற்றி ஒன்று விடாமல் எல்லாவற்றையும் சொன்னாள் ரித்விகா. இப்பொழுது சிரிப்பது நந்தினியின் முறை ஆனது.

## 5

நீ
உறங்கிக்
கொண்டு
இருக்கிறாய்

..........

அழகாக
ஒரு
வன
மோகினி
போல

..........

உன்னைத்
தொடத்
துடிக்கும்
என்
கைவிரல்களை
அடக்கிக் கொள்கிறேன்

..........

உன் அழகான
பிம்பம்
என் மனதில்
நீங்காமல்!

**தி**ரைப்படம் முடியும் பொழுது இரவு மணி பன்னிரண்டு. சூர்யாவின் நடிப்பை அசை போட்டபடியே வெளியே வந்தாள் ரித்விகா.

"என்ன கணேஷ்... படம் பிடித்ததா?"

"பரவாயில்லை ரிகா... நீ வந்தது எனக்குச் சந்தோஷம்."



கடவுளே! இந்த மாதிரி அசட்டுப் பிச்சு பயலைக் கல்லூரி இவளுக்கு எப்படி வருகிறதோ... என்று தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

"சரி... கணேஷ். நான் ஆட்டோவில் போய்விடுறேன். நீ வீட்டுக்குப் போயிடு."

"ஐயையோ... வேண்டாம்!" - அலறினான் அவன்.

"ஏன்?"

"எனக்கு இங்கிருந்து வீடு போக வழி தெரியாது."

சே! இந்தச் சென்னைக்கே இழுக்கு இவன் போன்ற பூச்சி தான்... என நினைத்துக் கொண்டாள் ரித்விகா.

"சரி... வா... நான் உன்னை ஆபீஸ் வரைக்கும் விடுறேன். அங்கே இருந்து வழி தெரியும்தானே!"

"ஆ... அது தெரியும். நான் அதை சட்டைப் பாக்கெட்டுல பேப்பரில் பத்திரமாக எழுதி வைத்துள்ளேன்."

'சே... கஜினி சூர்யான்னு நினைப்பு!' என்று முணுமுணுத்தபடியே வண்டியைக் கிளப்பினாள் அவள்.

குறுக்கு வழியில் போனால் சீக்கிரம் போய் விடலாம் என நினைத்தவள் மெயின் ரோட்டைத் தவிர்த்து குண்டும் குழியுமாக இருந்த சாலையைத் தேர்ந்தெடுத்தாள்.

பத்து நிமிடம் கடந்திருக்கும். போலீஸ் ஜீப் ஒன்று அவர்கள் முன்னே வழிமறிக்க வண்டியை நிறுத்தி விட்டு இறங்கினாள் அவள்.

ஜீப்பிலிருந்து காக்கி உடையில் முரட்டுத்தனமா[illegible] கொப்பளிக்கும் நடையில் இறங்கியவனைப் பார்த்[illegible] அதிர்ந்தாள் அவள்.

அவன் விழிகள் கூர்மையாக அவள் முகத்தில் பதிந்தது.

"எங்கே போயிட்டு வர்றீங்க?" என்றான் கணேஷைப் பார்த்து.

"ரிகா... என்ன சொல்லட்டும்...?" - குழறியது கணேஷின் நாக்கு.

அவளுக்கு எரிச்சலாக வந்தது?

"படத்திற்குப் போயிட்டு வர்றோம்!" என்றாள் பட்டென.

"ஸார்! பேச மாட்டாரா... எங்ககிட்ட!"

"அது... உங்களுக்கு அவசியம் இல்லை..." என்றாள் அவள்.

"என்ன படம்?"

"ஏழாம் அறிவு."

"ஓ... படம் எப்படி இருந்தது?"

"நீங்க மதன் திரை விமர்சனம் பாருங்க... படம் எப்படின்னு தெரியும்."

"ஷட் அப். கண்ட நேரத்தில் பாய்-ஃபிரண்டோட படம் போயிட்டு வர்றோம்ன்னு பொய் சொல்லிட்டு அநாகரிகமான வேலையில ஈடுபடறது உன் போன்ற பெண்களுக்குக் கைவந்த கலை ஆச்சே!"

"ஷட் அப். வார்த்தையை அளந்து பேசுங்க... நீங்க போட்டுட்டு இருக்கிறது காக்கி சட்டை. அதுக்கு மதிப்புக் கொடுத்து நான் சும்மா இருக்கேன்..." - சீறினாள் அவள்.

"படத்தோட டிக்கெட் எங்கே?"



"கணேஷ்! டிக்கெட்டை நான் உங்ககிட்டத்தான் கொடுத்தேன்."

"இ... இல்லையே ரிகா!" என்றான் சட்டைப் பாக்கெட்டிலும், பேண்ட் பாக்கெட்டிலும் கைவிரல்களால் துழாவியபடியே அவன்.

"கான்ஸ்டபிள்..."

ஓரமாய் ஒதுங்கி இருந்த கான்ஸ்டபிள் அவன் முன்னே ஓடி வந்தார்.

"யெஸ் ஸார்!"

"அந்த ஆளைச் சோதனை செய்யுங்க."

கான்ஸ்டபிள் கணேஷ் பக்கம் வர, கணேஷ் ஓட முயன்றான்.

"ஏய்..." என்று அவனைத் தாவிப் பிடித்தார் கான்ஸ்டபிள்.

"ஸார்... விட்டுடுங்க... என்னை!"

அவன் சட்டைப் பாக்கெட்டில் இருந்த டிரெயின் டிக்கெட், துண்டுக் காகிதம் எல்லாவற்றையும் எடுத்தார் கான்ஸ்டபிள். பேண்ட் பாக்கெட்டை சோதனை செய்தார்.

அதில் ஒரு பத்திரிகை இருந்தது. பார்த்தாலே தெரிந்தது நான்காம் தர பத்திரிகை என்று.

"ஸார்... இதுதான் இருந்தது!" என்று சேகரித் எல்லாவற்றையும் அவனிடம் நீட்டினார் பவ்யமா கான்ஸ்டபிள்.

விளக்கு ஒளியில் தெரிந்த அந்தப் பத்திரிகையில் இருந்த அரை-குறை பெண்ணின் ஃபோட்டோவைப் பார்த்து முகத்தைச் சுளித்தபடி வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள் ரித்விகா.

சே! இவன் முன்னால் இப்படி அவமானப்பட வேண்டி இருக்கே... ச்சீ இந்தக் கணேஷ் எவ்வளவு மோசமானவன்... அவள் மனம் கொதித்தது.

"என்ன பத்திரிகை இது!" என்றான் கணேஷிடம் சஞ்சய்.

"எனக்குத் தெரியாது... ஸார்!"

"ஓ... அப்புறம் எப்படி இது உன் பாக்கெட்டில் வந்தது?"

"ஸார்... ரிகாதான் ஸார் இதை என்னிடம் கொடுத்தாள்."

ரித்விகாவின் உடலில் தீ போல் கோபம் பரவியது.

"ஏய்... உன்னை..." என்று கணேஷின் சட்டையைக் கொத்தாகப் பிடித்தவள் கைவிரல்களை மடக்கித் தாடையில் குத்து விட்டாள்.

"அம்மா..." - அலறினான் கணேஷ்.

"ஈஸி... செய்யற தப்பெல்லாம் நீ செஞ்சுட் உண்மையைச் சொன்ன அவனை ஏன் அடிக்கிறே?"

"நோ... நான்... நான்... ச்சீ! அந்தப் புக்கெல்லாம் தொடக்கூட மாட்டேன்..."

"ம்... உன்னை எப்படி நம்புவது?" - அவன் கண்கள் ஏளனமாக அவள் முகத்தில் படிந்தது.



அவள் விழிகள் அவனை எரித்து விடும் போல் முறைத்துப் பார்த்தன. கோபத்தால் அவள் உடல் நடுங்கியது.

"ஸார்... ரிகா தான் என்னைப் படத்திற்கு அழைத்து வந்தாள். எனக்கு இந்த இடம் எல்லாம் தெரியாது ஸார்!" - கணேஷ் வாய்க்கு வந்ததை எல்லாம் உளறிக் கொட்டினான்.

"பார்த்தியா.. உன் பாய்-ஃபிரண்ட் உண்மை எல்லாம் ஒவ்வொன்றாகச் சொல்கிறான்."

"அவன் இப்ப சொல்வது மட்டுமே நிஜம். நான்தான் அவனைப் படத்திற்கு வருமாறு சொன்னேன். அவனுக்கு வழி தெரியாது என்பதால் நான்தான் வண்டி ஓட்டினேன்."

"ம்... உனக்கு இந்த மாதிரி ஃபிரண்ட்ஸ்தான் பிடிக்குமா... வெரி சீஃப் டேஸ்ட்."

"லுக்... எனக்கு நேரமாச்சு. நான் வீட்டுக்குப் போகணும். அநாவசியமா என் டயத்தை வேஸ்ட் செய்யாதீங்க."

"நான் உன்னை ஸ்டேஷனிற்கு அழைத்துப் போய் விசாரிக்க வேண்டும். வா என்னோடு..."

"நோ. நான்... நான் எந்தத் தப்பும் செய்யவில்லை. நான் வரமாட்டேன்."

"இங்கே பார்... மரியாதையா ஜீப்பில் நீயா ஏறிடு. இல்லைன்னா பொண்ணுன்னு கூடப் பார்க்க மாட்டேன்..." உறுமினான் அவன்.

ரித்விகாவின் முகம் பயத்தால் வெளிறிப் போனது. கண்கள் கலங்கின. ஏதும் சொல்லாமல் ஜீப்பில் ஏறினாள்.

"பாஸ்கரனின் அந்தப் பையனை ரெண்டு தட்டுத் தட்டுடு அனுப்புச்சுக்குறங்க..."

"சரிங்க சார்"

அவள் பதட்டத்தில் நகத்தைக் கடிக்கத் தொடங்கினாள்.

"நகத்தைக் கடிக்காதே. அது கெட்ட பழக்கம்."

"சந்தானம்கூட என்னை இப்படிச் சொல்ல மாட்டார். ஆனால் என் நேரம்... நீங்க சொல்வதைக் கேட்டுக் கொண்டு உட்கார்ந்து கொண்டிருக்கிறேன்."

"யார் அது சந்தானம்... இன்னொரு பாய்-ஃபிரண்டா?"

"ச்சீ... என் அப்பா அது!"

"சார்... என்ன ஒரு மரியாதை... அப்பாவிடம்!"

"மரியாதை மனசில் இருந்தால் போதும்."

"ஓஹோ... அப்படியாடி... நல்ல விளக்கமடி..."

"ஏய்... என்ன பேச்சு இது?" - சீறினாள் அவள்.

"ம்... நீதானே சொன்னாய். மரியாதை மனதில் இருந்தால் போதும் என்று."

"ரொம்ப சாமர்த்தியமாகப் பேசுவதாக நினைத்துக் கொள்ளாதீர்கள்."

"என்ன இருந்தாலும் உன் பாய்-ஃபிரண்ட் கணேஷ் அளவுக்குச் சாமர்த்தியம் எனக்கு வராது."

"அவனை என் பாய்-ஃபிரண்ட் என்று சொல்லா தீர்கள்."

"நீதானே இவன் என் ஃபிரண்ட் என்று அறிமுகப் படுத்தி வைத்தாய்."



"ஓ... அசிங்கமான மோசமான ஆள். இவ்வளவு மோசமான கேவலமான எண்ணங்களை மனதில் வைத்துக் கொண்டு வெளியே அப்பாவி போல் வேஷம் போட்டுக் கொண்டு... ச்சீ..."

"எனக்கென்னவோ உன் மேல்தான் சந்தேகமாக இருக்கிறது. நீதான் பொய் சொல்கிறாய் என்று நினைக்கிறேன். நீ அவனைப் படத்திற்கு மட்டும் ஆசையாக அழைத்தாயா... இல்லை... வேறு... ஆ..." என்று அவன் முடிக்க முடியாமல் அலறினான். காரணம் அவன் கையணிக்கட்டை அவள் வெடுக்கெனக் கடித்திருந்தாள்.

"ஏய்... வண்டி ஓட்டிக்கிட்டு இருக்கேன் நான். அப்புறம் நீ நரகத்திற்கும் நான் சொர்க்கத்திற்கும் போக வேண்டியது தான்.

காட்! பல்தானா அது. கத்தி மாதிரி கூர்மையா இருக்குதே!"

"நீங்க வாய்க்கு வந்ததைப் பேசினால்... இப்படித்தான் என் வாய் பதில் சொல்லாது... பல்தான் பேசும்."

"ஏய்! உனக்குப் பயமே இல்லையா? நீ ஒரு போலீஸ் அதிகாரியிடம் பேசிக் கொண்டிருக்கிறாய்."

"நான் எந்தத் தப்பும் செய்யவில்லை. அதனால் எனக்குப் பயமும் இல்லை."

"ஸ்டேஷனுக்கு வா. நான் யார் என்று உனக்குக் காட்டுகிறேன்."

இப்பொழுது ரித்விகாவின் முகத்தில் பயரேகைகள் அப்பட்டமாகத் தெரிந்தன. அதைக் கண்ணாடி வழியே பார்த்தவன் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

"ப்ளீஸ்... விட்டிருங்க வேண்டாமே! நான்... நான் எந்தத் தப்பும் செய்யவில்லை."

"உன்னை என்னால் நம்ப முடியாது. பொய் சொல்லாதே! உனக்குக் கைவந்த கலை. ராக்கெட்டை வைத்தது நீ... ஆட்டம்-பாமை [illegible] பாக்ஸில் வெடிக்க வைத்தது நீ... ஆனால் இல்லை என்று சாதித்தாயே... பொய் சொன்னாயே...!"

அவள் மௌனமாக இருந்தாள்.

"என்ன சத்தத்தையே காணோம்?"

"அது... அது வந்து..."

"ம்... எது வந்து...?"

"அது சும்மா... விளையாட்டுக்காகச் செய்தது... ஒரு த்ரில்லுக்காக..."

"ம்... அதே போல் ஒரு சாதுப் பையனை த்ரில்லுக்காக நீ என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்று நான் நினைக்கலாமே!"

அவள் பதில் சொல்ல முடியாமல் திருதிருவென விழித்தாள்.

"சரி... இறங்கு."

"ப்ளீஸ்... சார் வேண்டாம்."

"அதெல்லாம் முடியாது... இறங்கு."

அவள் கண்கள் கலங்கின. ஒரு விம்மல் வெடித்தது. அழுதபடியே இறங்கியவள் திகைத்தாள்.



காரணம் அது வசந்தம் அபார்ட்மெண்ட்ஸ். அவள் வசிக்கும் இடம். அவள் அவனை ஏறிட்டாள். அவன் இதழ்களில் மெல்லிய புன்னகை படர்ந்தது.

சே! வீடு வந்ததுகூட தெரியாமல் வழியைக் கவனிக்காமல் இப்படி முட்டாள் மாதிரி இவன் முன்னால் நிற்கிறேனே... என்று அவளுக்குக் கூச்சத்தால் முகம் சிவந்தது.

"போ... உள்ளே!" என்றான் தணிந்த குரலில் அவன்.

"தே... தேங்க்ஸ் எ லாட்!"

"ம்... இனிமேலாவது ஜாக்கிரதையா இரு. [illegible] கட் செஞ்சிரு. யார் நல்லவங்க... யார் கெட்டவங்க... என்று உன்னால் தீர்மானிக்க முடியாவிட்டால்... உன் மனதைக் கேள். அப்பவும் குழப்பமாக இருந்தால் என்னைக் கேள். குட் நைட்."

அவள் மனதில் ஒரு இனிமையான ராகம் ஒலித்தது. ஏதோ பேச வேண்டும் என்று அவள் நினைத்தாள். ஆனால் வார்த்தைகள் தொண்டையில் சிக்கிக் கொண்டன.

"குட் நைட்!" என்று சொல்லிவிட்டு அங்கிருந்து நகர்ந்தான்.

"என்னம்மா... படம் நல்லா இருந்ததா?"

"ம்... நல்லா இருந்தது. ஆறாம் நூற்றாண்டு சகலகலா வல்லவன் போதி தர்மரையும் இருபத்தோராம் நூற்றாண்டு சர்க்கஸ் கலைஞன் அரவிந்தையும் டிஎன்ஏ வழியாக முடிச்சுப் போட்டுக் கதையை நகர்த்துகிறார்கள்... அப்பா!"

புரையோடியிருக்கே... வித்தியாசமா இருக்கே"

"ஆமாம் அப்பா... எப்பவும் இந்தியாவுக்குப் பாக்குறதுக்குத்தான் என்னை, வேற மாதிரி காட்டுவாங்க. ஆனால் இந்தப் படத்தில எனக்கு வழியா பயிவட்டுவா எது... அதோட, ஏ என்னு ஏ என்பது என்ன... அப்படின்னு ரொம்ப அழகாக எல்லோருக்கும் புரியுற மாதிரி சொல்லி கதையைக் கொண்டு போயிருக்காங்க..."

"ஜப்பானில் போதி தர்மர் ரொம்ப பிரபலம். ஆனால், இங்கே பிறந்த அவருக்குச் சரியான அங்கீகாரம் இல்லை. இங்குள்ள நிறைய பேருக்கு போதி தர்மர் பற்றி தெரியாது. காஞ்சிபுரத்தில் கொடி கட்டிப் பறந்தவரின் கதை இது தான், ஏதோ... புத்தகத்தில் விமர்சனம் போட்டிருந்தான் ரித்து!"

"சரி... சரி... மிச்சக் கதையை நாளைக்குப் பேசலாம். நாழியாயிடுச்சு. படுங்க..." - மாலினியின் குரல் ஓங்கி ஒலித்தது.

"அப்பா... ஹோம் மினிஸ்டர் உத்தரவு போட்டாச்சு. இனிமே பேசக் கூடாது."

"ஆமாம்பா... குட் நைட்."

"குட் நைட்... அப்பா!"

வழக்கமாகப் படுத்தவுடன் தூங்கி விடுவான் ரித்விக். ஆனால் அன்று ஏனோ தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத்தான்.

கடைசியில் பின்னிரவில் தூங்கினான்.

## 6

கனத்த
மௌனம்
........
நம்மிடையே
முதல்முறையாக
சிரிப்பு
கும்மாளம்
கிண்டல்
சந்தோஷம்
எல்லாவற்றுக்கும்
முற்றுப்புள்ளி
வைத்தது
இந்தக்
கனத்த
மௌனம்
........
பிரிவின்
வலியை
நான்
உணர்கிறேன்
மௌனமாக

காலிங் பெல் சத்தம் கேட்க... யாராக இருக்கும் என நினைத்தபடியே கதவைத் திறந்தார் சிவநேசன்.

வெளியே ரித்விகா நின்று கொண்டிருந்தாள்.

குளித்து விட்டு பளிச்சென மகாலக்ஷ்மியைப் போல் இருந்த அவளைப் பார்த்து புன்முறுவல் பூத்தார்.

"குழந்தை வாம்மா... உள்ளே!"

"குட் மார்னிங் அங்கிள். நான் ஒண்ணும் குழந்தை இல்லை..." என்று சிணுங்கியபடியே உள்ளே வந்தாள் அவள்.

"அது என்னம்மா தட்டில? என்ன ஏந்திண்டு வந்திருக்க... காலங்கார்த்தால!"

"அங்கிள்! இன்னிக்கு ஞாயிற்றுக்கிழமை. வாரா வாரம் ஞாயிற்றுக்கிழமை இங்க பக்கத்தில இருக்கிற ஒரு ஆசிரமத்திற்கு நாங்க போவோம். போய் அங்க இருக்கிற அனாதைக் குழந்தைகளுக்கு காலை பிரேக் பாஸ்ட் தருவது வழக்கம்.

அம்மா இட்லி, சட்னி, சாம்பார் எல்லாம் செஞ்சிட்டாங்க. நான் ஸ்வீட் செய்தேன். குலோப் ஜாமுன் உங்களுக்குக் கொடுக்கலாம்னு வந்தேன்."

சிவநேசனின் கண்கள் கலங்கின. இந்தப் புது வீட்டில் நம்மைத் தேடி ஒரு பெண் காலையில் ஸ்வீட் கொடுக்கிறாளே... என்ற எண்ணம் அவர் மனதை நெகிழ வைத்தது.

தன் அறையில் படுக்கையில் அரைத் தூக்கத்தில் இருந்த சஞ்சய்க்கு அவர்கள் பேசுவது கனவில் ஏதோ நடப்பது போல இருந்தது.



"என்ன அங்கிள் யோசிக்கிறீங்க... உங்களுக்கு ஷுகர் இருக்கா?"

"அதெல்லாம் இல்லைம்மா..."

"அதானே பார்த்தேன். என் பாய்-ஃபிரண்ட் ஆச்சே... நீங்க. நல்ல ஹெல்தியா, ஸ்ட்ராங்கா... ஹாண்ட்ஸம்மா இருக்கணுமே!"

அவர் கலகலவெனச் சிரித்தார்.

சஞ்சய் சிரிப்பைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டான்.

"இன்ஃபேக்ட் நான் உங்களுக்கு தேங்க்ஸ் சொல்லணும்..."

"எதுக்கு?"

"அன்னிக்கு அந்தக் கௌரவர் சபையில் நீங்க மட்டும் தான் எனக்கு ஆதரவாய் பேசினீங்க... சும்மா பீஷ்மர் மாதிரி கேள்வி கேட்டீங்களாம். கலக்கிட்டீங்க... போங்க. அதுக்கே நான் உங்களுக்கு ஸ்பெஷல் ஸ்வீட் தரணும்."

"புரியலையே நேக்கு...."

"என்ன நீங்க... இப்படி டியூப் லைட்டா இருக்கீங்க. நான் பப்லுவிடம் சொல்லி உங்களுக்குத் தனியா டிரெயினிங் கொடுக்கச் சொல்லணும்."

அவர் மீண்டும் சிரித்தார்.

சுவாரசியமாகப் படுக்கையில் உட்கார்ந்தபடியே அவர்கள் பேசுவதை ரசித்துக் கொண்டிருந்தான் சஞ்சய்.

"ஃபிளாட் மீட்டிங் நடந்துச்சே... அதைப் பற்றித்தா நான் சொல்றேன். எல்லாரும் என்னை வசை பாடினப்ப.

நீங்க மட்டும் என்னை சப்போர்ட் செஞ்சீங்களாம். சந்தானம் சொன்னார்.

ரொம்ப தேங்க்ஸ் ஃபிரண்ட். சீக்கிரமா குலோப் ஜாமுனை டேஸ்ட் செய்யுங்க..."

"நான்... நான் அப்புறமா சாப்பிடறேனேம்மா..."

"நோ... நோ... குலோப்ஜாமுன் வெந்திருக்கான்னு சந்தேகம் எனக்கு. நான் சாப்பிட்டுப் பார்த்தேன். வெந்த மாதிரிதான் இருந்தது. இருந்தாலும் கன்ஃபர்ம் செய்துக் கலாம்னு தோணிச்சு. சாப்பிடறது சின்னப்பசங்க பாருங்க... வயித்தை வலிக்கக் கூடாது அதனாலதான்.

அம்மாவிடம் கேட்கலாம். ஆனால் உடனே ஒரு லெக்சர் கொடுக்க ஆரம்பிச்சிடுவாங்க. இதுகூடத் தெரியலை உனக்கு... நாளைக்கு உனக்குக் கல்யாணம் செய்து கொடுத்த பின்பு வளர்ப்பு சரியில்லைன்னு எங்க தலை உருளும்... எல்லாம் என் தலையெழுத்து... அப்படின்னு ஒரே போர்...

அதனால்தான் நான் உங்ககிட்ட கொடுத்து செக் செய்யலாம்னு நினைச்சேன்..."

சிவநேசன் திருதிருவென விழித்தார். அட ராமா! சோதனை எலி போல் ஆகிவிட்டதே என் நிலைமை. இதைச் சாப்பிடா விட்டால், வாயில் திணித்தாலும் திணித்து விடுவாள். என்ன செய்வது இப்பொழுது?

கிண்ணத்தில் இருந்த குலோப்ஜாமுன் அவர் கண்களுக்கு வில்லங்க ஜாமுனாக தோன்றின.

"அங்கிள்! இதென்ன... சேத்தன் பகத் புக்கெல்லாம் படிக்கிறீங்க...?"



"இல்லை... இப்ப இருக்கிற இந்திய எழுத்தாளர்களில் அவர் புத்தகம் நன்னா இருக்குன்னு என் மகன் சொன்னான். அதான் படிக்கலாம்னு..." இழுத்தார்.

"ரொம்ப ஒண்ணும் நன்னா இல்லை. டு ஸ்டேட் அஃபேர்... புக் வாசிச்சேன். சே... சே...! டர்ட்டியா இருந்தது. அதைப் படிச்ச பின்பு ஐ.ஐ.டி., ஐ.ஐ.எம்னா இந்த மாதிரி மோசமான, இடமா இருக்குமான்னு பயம் வந்திடுச்சு."

"ஓ... அப்படியா! நான் இனிமே படிக்கலைம்மா இதை!"

"தட்ஸ் குட். நான் சொல்றதை உடனே கேட்கிற வங்களை எனக்கு ரொம்பப் பிடிக்கும். யூ ஆர் வெரி ஸ்வீட். ப்ளீஸ் அந்த ஸ்வீட்டைச் சாப்பிடுங்க."

அட... ராமா! இதை மறக்க மாட்டா போல இருக்கே... தெனாலிராமன் வளர்த்த பூனை ஒன்று பாலைக் கண்டால் மிரண்டு ஓடுமாம். அதற்குக் காரணம் பாலை அது கொதிக்கக் கொதிக்க ஒரு முறை குடிக்க நேர்ந்ததுதான்.

சிவநேசனின் நிலைமை அப்படித்தான் இருந்தது. பயத்துடன் ஸ்பூனால் ஒரு குலோப்ஜாமுனை வாயில் போட்டார். இதமாக வெண்ணெய் போல் கரைந்தது.

"ரொம்ப நன்னா இருக்கும்மா..."

"அப்பாடா... இப்பதான் நிம்மதியாச்சு!" என்றாள் பெருமூச்சு விட்டபடியே.

"இரும்மா... நான் வேற ஒரு கிண்ணத்தில் போட்டுட்டு உனக்கு இதைக் கழுவித் தரேன்."

"ஆமாம்.... அங்கிள். இல்லைன்னா... அம்மா திட்டுவா!"

டேபிள் அடியில் இருந்த புத்தகத்தில் கிரண் பேடி அட்டையில் போலீஸ் உடையில் கண்மூடித் தியானம் செய்கிறார். சட்டென அவள் மனம் காக்கிச் சட்டையில் சந்தித்த சஞ்சயைச் சுற்றி வந்தது.

"அங்கிள்! இந்தப் புக் நீங்க படிச்சிட்டீங்களா?"

"எந்த புக்ம்மா...?"

"ஐ பேர் - கிரண் பேடி பயோகிராபி!"

"அது... சஞ்சய் படிச்சிட்டு இருந்தான். அவனோட புக்." - உள்ளே இருந்து குரல் கொடுத்தார்.

"ஓ... சஞ்சய்யை உங்களுக்கு எப்படிப் பழக்கம்?"

"என் மகன் மித்ரனோட ஃபிரண்ட் அவன்."

சஞ்சய் காதைத் தீட்டிக் கொண்டு உள்ளே உட்கார்ந்திருந்தான்.

"ஓ... அப்படியா! அவர் என்ன வேலை செய்யறார்?"

'அடிப்பாவி. நேற்று டியூட்டியில் இருந்த பொழுது என்னைப் பார்த்தாய். போலீஸ் ஜீப்பில் சவாரி செய்தாய். அப்புறம் நான் ஏதோ ரஜினி படத்தில் வர மாதிரி போலீஸ் உடையை இரவில் வாங்கிப் போட்டது போல் கேட்கிறாளே!'

"போலீஸ் டிபார்ட்மெண்ட்ம்மா... அசிஸ்டெண்ட் கமிஷனர். இப்பதான் சென்னைக்கு டிரான்ஸ்பர் ஆச்சு."

"ஓ... வேலை எல்லாம் எப்படி... ஒழுங்காப் பார்ப்பாரா?"

சஞ்சய் கஷ்டப்பட்டுக் கோபத்தை அடக்கிக் கொண்டான். என்னவோ இண்டர்வியூவுக்கு ஆள் எடுப்பது போல் அல்லவா கேள்வி கேட்கிறாள். புகைந்தான் மனதிற்குள் அவன்.



"நல்லா... சூப்பரா வேலை பார்ப்பான்."

"அப்படியா என்ன? எனக்கென்னவோ சந்தேகமா இருக்கு..."

"ஏன்ம்மா... அப்படிச் சொல்றே?"

"சும்மா தீபாவளி வெடிக்கிறவங்களையும், நைட் ஷோ போயிட்டு வர்றவங்களையும் அதட்டி மிரட்டுவதுதான் அவர் வேலைன்னு எனக்குத் தோணுது.

அப்பாவியா இருக்கிறவங்களை தேவையில்லாமல் அதட்டறது அவர் வேலை..."

அறையினுள் இருந்த சஞ்சயின் பி.பி. ஏறியது. என் மேலதிகாரி கொடுத்த சான்றிதழ்களையும், நான் வாங்கிய மெடல்களையும் இவளிடம் காட்டினால்தான் ஒத்துக் கொள்வாள் போல... சே! சரியான வம்புக்காரி.

"அப்படி எல்லாம் இல்லை குழந்தை... நேத்திக்குக் கூட வில்லிவாக்கம் கிட்ட கள்ளச்சாராயம் காய்ச்சறதா தகவல் வந்ததுன்னு வேலை முடிச்சுட்டு ராத்திரி ரொம்ப லேட்டாத்தான் வந்தான்."

"ஓ! அப்படியா... எனக்கென்னவோ நீங்க சொல்றதில் நம்பிக்கை இல்லை பாய்-ஃபிரண்ட். ஸாரி இந்த விஷயத்தில் மட்டும்..."

"அதோட இன்னொரு சந்தேகம்!"

"என்னம்மா...?"

"உங்க சஞ்சய்க்கு சிரிக்கவே தெரியாதா! எப்பப் பார்... உம்முன்னு முகத்தை வைச்சிண்டு... சிடுமூஞ்சி சஞ்சய் நல்ல ரைமிங்கா இருக்குதானே... பட்டப் பெயர்.

உயரமா வளருவதில் எந்தக் குற்றமும் இல்லை என்ற ஒரே காரணத்திற்காக நல்லா உயரமா வளர்ந்து இருக்கார்... சின்ன வயசில் நிறைய காம்ப்ளான் குடிச்சிருப்பார் போல...

ஆள் பரவாயில்லை. என் ஹீரோ சூர்யா ரேஞ்சிற்கு இல்லை. பட்... ஓ.கே. அவர்கிட்ட இருக்கிற ஒரே ஒரு அட்ராக்ஷன்..." - அதற்கு மேல் பேச முடியாமல் அவள் வாயைக் கோந்து பசை போட்டு ஒட்டியது போல் ஒட்டிக் கொண்டது.

காரணம் அறை வாசல் அருகே நின்று கொண்டிருந்த சஞ்சய்தான். அப்பொழுதுதான் அவளுக்கு உறைத்தது... தான் ஹாலைக் கடந்து வேறு ஒரு அறை அருகே வந்துவிட்டோம் என்று.

"வா... உள்ளே. இது என் அறைதான்!"

"இ... இல்லை. நான்..." - திக்கித் திணறினாள் அவள்.

"உள்ளே வந்து உட்கார்!" - அதிகாரமாக ஒலித்தது அவன் குரல்.

அவள் வேகவேகமாக உள்ளே வந்தாள். அங்கிருந்த நாற்காலியில் பொத்தென உட்கார்ந்தாள்.

"ஸோ... உன் வேலையே இதுதானா!"

"எ... எது என் வேலை?"

"வம்படிப்பது... இல்லாத ஆளைப் பற்றி இல்லாததும் பொல்லாததும் சொல்றது. வெரி பேட்."

"இல்லை. நான்..." என்று அவள் முடிக்கும் முன்பு அவன் குறுக்கிட்டான்.



"இந்தா... இதைப் பார்." - கப்போர்டைத் திறந்து அதிலிருந்த ஒரு ஃபைலை அவள் முன்னே போட்டான்.

அவள் கண்கள் அகல அவனைப் பார்த்தாள்.

"பிரித்துப் பார்."

அவள் வேகவேகமாக அதைப் பிரித்தாள். உள்ளே நிறைய ஃபோட்டோக்கள். அவன் பரிசு வாங்குவது, மெடல் வாங்குவது, கலை விழாக்களில் பள்ளி மாணவ, மாணவியருக்குப் பரிசு வழங்குவது என்று நிறைய ஃபோட்டோ ஆல்பமாக இருந்தது.

"வேலை எல்லாம் சுமாராத்தான் பார்ப்பார் போல... அப்படின்னு குற்றச்சாட்டு நீ தானே சொன்ன... சுமாரா வேலை பார்த்தா இந்த மாதிரி அங்கீகாரம் எல்லாம் கிடைக்காது... புரியுதா!

அப்புறம் என்ன சொன்ன? ஆங்... காம்ப்ளான் குடிச்சுக் குடிச்சு இப்படி உயரமா வளர்ந்திருக்கார்ன்னு... அப்படித்தானே! அதெல்லாம் என்னன்னு எனக்குத் தெரியாது. எங்க தாத்தா மிலிட்டரியில் இருந்தார்.

காலையில பச்சை மூக்குக் கடலை, பால், ராகி கஞ்சி, பழையது இதெல்லாம் தான் எனக்குத் தெரியும். சிட்டி யிலேயே பிறந்து வளர்ந்த உனக்கு இதெல்லாம் எங்கே தெரியப் போகுது? அப்புறம் என்ன... சிடுமூஞ்சி சஞ்சய். அதானே என் பட்டப் பெயர். குற்றவாளிங்க கிட்ட ஈன்னு பல்லைக் காட்டிக் கொண்டு சண்டை போட முடியாது... புரிந்ததா!"

மூச்சு விடாமல் படபடவெனப் பேசுபவனை கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்.

## 7

உன்னைப்
பூ
என்றோ
தென்றல்
என்றோ
நிலவு
என்றோ
மழை
என்றோ
நான்
வர்ணிக்க
விரும்பவில்லை
பெண்ணே
.........
நீ
சக்தி
.......
என்னை
இயக்கும்
சக்தி நீ
பெண்ணே!



"என்னடா சஞ்சய்! முழிச்சிட்டியா... சத்தம் யாரண்ட போடறே? பாவம்டா... சின்னப் பெண்!" என்றபடியே அவன் அறைக்குள் வந்தார் சிவநேசன்.

"சத்தம் எல்லாம் இல்லை. சும்மா பேசிட்டு இருக்கோம். என் வேலை பற்றி நிறைய சந்தேகங்கள் இவளுக்கு. அதுதான் தீர்த்து வைச்சிட்டு இருந்தேன். அப்படித்தானே ரித்விகா!"

அவள் முகத்தில் இப்பொழுது வெற்றிக்களை தெரிந்தது.

ஓ... இவனுக்கு அங்கிள் கிட்ட கொஞ்சம் பயம் கலந்த மரியாதை போல என நினைத்தவள்... தனக்குள்ளே சிரித்துக் கொண்டாள்.

"அங்கிள்! இவ ஏதோ ஸ்வீட் செஞ்சிருக்காளாமே... அதை கொஞ்சம் எனக்கும் கொடுங்க. அப்புறம் காப்பி. நல்லா ஸ்ட்ராங்கா... இரண்டு கப். இவளுக்கும் சேர்த்து."

"ஓ... பேஷா எடுத்துண்டு வரேன். நேக்குத் தோணலை பார்... குழந்தைக்குக் காப்பி கொடுக்கணும்னு..." என்று தன்னையே கடிந்து கொண்டு சமையல் அறை பக்கம் சென்றார்.

அவரை வேண்டும் என்றே சமையல் அறைப் பக்கம் அனுப்புகிறான் என்று அவளுக்குப் புரிந்தது. சரியான திருடன்தான் என்று மனதிற்குள் அவனைச் செல்லமாகத் திட்டினாள்.

"ஸோ... இன்னொரு விஷயம் எனக்குத் தெரியணும்..."

"என்ன விஷயம்?" என்றாள் சற்றே திமிராக.

"என்கிட்ட இருக்கிற அந்த ஒரே ஒரு அட்ராக்ஷன்... உனக்குப் பிடித்த விஷயம் என்ன? கொஞ்சம் சொல்ல முடியுமா!"

அவள் முகம் அவளை அறியாமல் சிவந்தது. மௌனமாக இருந்தாள் அவள்.

"ஏய்... உன்னைத்தான் கேட்கிறேன். காதில விழலை..."

"என்னடா... சஞ்சய்! ஏன் இப்படிக் கத்தறே? பாவம் சின்னப் பெண். பயந்திடப் போறா!" - உள்ளே இருந்து குரல் கொடுத்தார் சிவநேசன்.

ரித்விகாவின் கண்களில் அலட்சியமும், வெற்றி மமதையும் தெரிந்தது.

"பாய்-ஃபிரண்ட் சப்போர்ட் இருக்கும் வரை என்னை எதுவும் செய்ய முடியாது!" - என்று கண்களை உயர்த்தி உதட்டைக் குவித்து பழிப்புக் காட்டினாள்.

அவன் கலகலவென சிரித்தான். சிரிக்கும் பொழுது அவன் அடர்த்தியான மீசைக்குக் கீழே வெண்பற்கள் மின்னுவதைத் தன்னை மீறி ரசித்தாள் அவள்.

அவள் தன்னை வித்தியாசமாகப் பார்ப்பதை அவன் கவனித்தான். அவனுள் மடக்கப்பட்ட குடை போல் இருந்த கர்வம் சட்டென விரிந்து கொண்டது.

"என்ன சூர்யா அளவுக்கு இருக்கிறேனா?"

அவள் சுதாரித்துக் கொண்டாள். மீண்டும் மௌனமானாள்.

"ஏய்... சொல்லு. என்கிட்ட என்ன பிடிச்சிருக்கு?"



அவளுக்குப் புரிந்து விட்டது. அவனுக்கு அதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் தலையில் வண்டைப் போல் குடைகிறது.

இவனைக் கொஞ்சம் அலைக்கழிக்க வேண்டும். நேற்று என்னை எப்படி மிரட்டினான்? சே... நான் அந்த மாதிரி என் வாழ்நாளில் பயந்ததே கிடையாது. ஆனால் இவனால் எப்படிப் பதறிப் போய் விட்டேன்... நேற்று. அதனால் இவனைக் காய விடவேண்டும். தீர்மானித்தாள் அவள்.

"அதுவா... அது வந்து..."

"ஏய் வந்து போயின்னு இழுக்காம சட்டுன்னு சொல்லு."

"இந்த மாதிரி மிரட்டினா... நான் சொல்ல மாட்டேன்." - கொஞ்சினாள் அவள்.

சே! பெண்ணா இவ... ராட்சஸி. அழகு ராட்சஸி. சில நேரம் கோபமாக... படபடவென பட்டாசு போல் பொரிந்து தள்ளுகிறாள்.

சில நேரம் கொஞ்சுகிறாள். சில நேரம் அழுது தொலைக்கிறாள். சில நேரம் என்னை ஒரு மாதிரி பார்க்கிறாள். என்ன செய்யலாம்... இவளை? அவனுள் ஒரு போராட்டம் நடந்தது.

"சரி... மிரட்டலைச் சொல்லு."

"உங்களுக்கு என்ன அதைத் தெரிஞ்சுக்கிறதுல அவ்வளவு இண்ட்ரஸ்ட்!"

"ஏய்... சொல்லுன்னா சொல்லு. சும்மா வளவளன்னு வெட்டிப் பேச்சு பேசிக்கிட்டு... சே!" - அவன் பொறுமை இழந்தான்.

"அங்கே பாருங்க..." - அவள் ஜன்னலைக் காட்டினாள்.

"என்ன...?" - அவன் திரும்பினான்.

"சொல்ல முடியாது... இப்ப என்ன செய்வீங்க..." என்றவள் சட்டென வேகமாக அவன் அறையிலிருந்து ஓடி விட்டாள்.

சே! ஒரு சின்னப் பெண் நம்மை ஒரு நொடியில் ஏமாற்றி விட்டாளே... அவன் நொந்து போனான்.

"என்னடா... அவ போயிட்டாளா?"

"ஆமாம். லேட்டாச்சுன்னு கிளம்பிட்டா."

"அச்சோ... காப்பி கலந்தேனே அவளுக்கு..."

"ம்... கொடுங்க. நான் குடிக்கிறேன் எல்லாத்தையும்..."

"ரொம்ப சூட்டிகையான பெண். நேக்கு அவ செய்யற குறும்பெல்லாம் பார்த்தா கண்ணனின் லீலைகள்தான் ஞாபகம் வருது."

"அங்கிள்! ஒரு விஷயத்தில் அவ கண்ணன் மாதிரியே தான் ஸ்ட்ராங்கா இருக்கா?"

"எதிலடா சஞ்சய்?"

"எல்லா வயசிலேயும் அவளுக்கு பாய்-ஃபிரண்ட்ஸ் நிறைய பேர். ஆறாவது... ஏழாவது படிக்கும் ஸ்கூல் பசங்களில் ஆரம்பித்து... ரிடையர் ஆன அங்கிள் வரை..." என்றான் சிரித்தபடியே.

சிவநேசனும் அதைக் கேட்டுச் சிரித்தார்.

"இந்தாடா குலோப்ஜாமுன். நன்னா இருக்கு... சாப்பிடு."



வாயில் போட்டவுடன் கரைந்தது அது.

"ம்... நல்லா இருக்கு அங்கிள்!"

"ஆமாம்டா... ஆசிரமக் குழந்தைகளுக்கு கொடுக்கிறதுக்குத்தான் அவ செஞ்சிருக்கா... பரவாயில்லை... சின்ன வயசில நல்ல பொறுப்புணர்வுதான்."

"ம்..." என்று சுரத்தில்லாமல் உம் கொட்டினான்.

அவன் மனம் முழுவதும் அவள் பதில் சொல்லாமல் போன கேள்வியை ஆராய்ந்து கொண்டிருந்தது.

'என்கிட்ட என்ன பிடிச்சிருக்கும் அவளுக்கு....! உயரமா... ஹேர் ஸ்டைலா... இல்லை என் கண்ணா...' என்று நினைத்தபடியே தன்னையே கண்ணாடியில் பார்த்துக் கொண்டு நின்றான்.

**ஆ**சிரமக் குழந்தைகளுக்குத் தன் கையால் உணவு பரிமாறினாள் ரித்விகா. பின்பு அவர்களுடன் கொஞ்ச நேரம் அரட்டை அடித்து விட்டு வீடு திரும்பினாள்.

வசந்தம் அடுக்ககத்திற்குள் நுழையும் பொழுது சஞ்சய்யின் நினைவு வந்தது. அவனைப் பார்க்க வேண்டும். அவனிடம் பேச வேண்டும். அவனைச் சீண்ட வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. கஷ்டப்பட்டு தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டு வீட்டினுள் நுழைந்தாள் அவள்.

"வா... சாப்பிடலாம். குழந்தைங்க நன்னா சாப்பிட் டாங்களா?"

"ம்... நல்லா சாப்பிட்டாங்க அம்மா. ஆனால் ஒவ்வொரு முறை அங்கே இருந்து திரும்பி வீட்டுக்கு வரும் பொழுது மனசு கஷ்டமா இருக்கும்மா..."

"புரியுது... ரித்து."

"ஏன்மா... சின்ன வயசில அவ்வளவு கஷ்டம்... அந்தப் பசங்களுக்கு!"

"சில கேள்விகளுக்கெல்லாம் விடை இல்லை. வாழ்க்கை அப்படித்தான். என்ன செய்வது? அட்லீஸ்ட் உதவி செய்வதற்கு இப்ப நிறைய பேர் இருக்காங்க. முன்னாடி எங்க காலத்தில நிறைய பேர் உதவி செய்ய வரமாட்டா..."

"ம்... நீங்க சொல்றது சரிதான் அம்மா... இப்ப காலம் மாறிண்டு வருது..."

"ஆமாம்... சரி வா. சாப்பாடு சூடா இருக்கு."

"என்ன சமையல்மா...?"

"ம்... வெண்டைக்காய் பொரியல். உருளைக்கிழங்கு சாம்பார். கத்திரிக்காய் கூட்டு."

"நாட் பேட்... உருளைக் கிழங்கு சாம்பாரை வைத்துக் கொண்டு மேனேஜ் செய்யலாம்."

"ஏய் வெண்டைக்காய் நல்லதுடி... மூளைக்கு ரொம்ப நல்லது. நல்லா வளரும் மூளை."

"யார் யாருக்கு மூளை கம்மியா இருக்கோ... அவங்க வெண்டைக்காய் சாப்பிடுங்க. நான் வரலை இந்த ஆட்டத்திற்கு!" என்றாள் சிரித்தபடியே.

"அரட்டை... வந்து சாப்பிடு!" என்றாள் மாலினி சிரித்தபடியே.



அம்மாவுடன் வம்பு செய்தபடியே சாப்பிட்டு முடித்தாள் அவள்.

"ஸோ... உன்னோட வீக்-எண்ட் போயிடுச்சா?"

"ம்... ஆமாம் அம்மா. நாளைக்கு பேக் டு வொர்க்."

"சரிடி... கொஞ்ச நேரம் படுத்து ரெஸ்ட் எடு."

"கண்டிப்பா... அடுத்த வேலை அதுதான்..." என்றாள் கொட்டாவி விட்டபடியே.

தன் அறைக்குள் சென்றவள்... கைபேசி வழியாக கொஞ்ச நேரம் பாட்டு கேட்டாள். பின்பு புஜ்ஜியை அணைத்துக் கொண்டு தூங்கினாள்.

தன் அறையிலிருந்து வெளியே வந்த மாலினி தூங்கும் மகளைப் பார்த்தாள். இன்னும் குழந்தைத்தனம் இவளுக்குப் போகலையே... என்று நினைத்துப் பெருமூச்சு விட்டாள்.

நன்றாக உறக்கத்தில் இருந்த ரித்விகா சட்டென எழுந்து உட்கார்ந்தாள்.

காட்! இது கனவா? அவள் மூளை மெதுவாக வேலை செய்தது.

இதுவரை அவளுக்கு அந்த மாதிரி கனவு வந்தது இல்லை. கனவில் சஞ்சய் அவள் கன்னத்தைச் செல்லமாகக் கிள்ளுகிறான். 'நீ என் தேவதை!' என்று காதோரம் கிசுகிசுக்கிறான்.

அப்பொழுது சட்டென விழித்தவள்... அதற்குப் பின் தூங்க முடியா[illegible]வித்தாள்.

## 8

இருளும்
ஒளியும்
பேசிக்
கொள்ளும்
அந்தி
மாலைப்
பொழுது
............
மழை
பெய்து
கொண்டு
இருக்கிறது
.........
பிரிவு
எனும்
முற்றுப்புள்ளி
நம்மைத்
தாக்க
..........
உன்
கண்களில்
கண்ணீர்



என்
நெஞ்சில்
உன் முகம்!

"ரித்து குட்டி... மணி எட்டாகுது. இன்னிக்கு ஆஃபீஸுக்குப் போகலையாடா!"

அப்பாவின் குரல் கேட்க... திடுக்கிட்டுக் கண் விழித்தாள் அவள்.

"என்னடா... உடம்பு சரியில்லையா?"

"அதெல்லாம் இல்லை அப்பா... முன்னாடியே எழுப்பி இருக்க வேண்டியதுதானே!"

"ம்... இரண்டு தடவை வந்து பார்த்தேன்டா... நீ பாவம் அசந்து தூங்கிக் கொண்டிருந்தாய். லீவ் வேணா சொல்லிடேன் ரித்து... ரெஸ்ட் எடு."

"இல்லைப்பா... வேலை இருக்கு ஆஃபீஸில். இன்னும் அரை மணி நேரத்தில் நான் ரெடியாயிடுவேன்."

"சரிம்மா... உன் இஷ்டம்."

எல்லாம் இந்த சிடுமூஞ்சி சஞ்சய்யால் வந்தது. அவன் கனவில் வந்ததால் என் தூக்கம் கெட்டுப் போய் விட்டது. முன்நேரத்தில் தூங்கும்படி ஆகிவிட்டது என்று அவனை மனதிற்குள் திட்டினாள்.

வேகவேகமாகக் குளித்துவிட்டு வந்தவள் என்ன உடை அணிவது என்று யோசித்தாள்.

ஓ... இன்னிக்கு நந்தினி ட்ரீட் தருகிறாளே...!

# 8

இருளும்
ஒளியும்
பேசிக்
கொள்ளும்
அந்தி
மாலைப்
பொழுது
............
மழை
பெய்து
கொண்டு
இருக்கிறது
.........
பிரிவு
எனும்
முற்றுப்புள்ளி
நம்மைத்
தாக்க
..........
உன்
கண்களில்
கண்ணீர்
என்
நெஞ்சில்
உன் முகம்!

"ரித்து குட்டி... மணி எட்டாகுது. இன்னிக்கு ஆஃபீஸுக்குப் போகலையாடா!"

அப்பாவின் குரல் கேட்க... திடுக்கிட்டுக் கண் விழித்தாள் அவள்.

"என்னடா... உடம்பு சரியில்லையா?"

"அதெல்லாம் இல்லை அப்பா... முன்னாடியே எழுப்பி இருக்க வேண்டியதுதானே!"

"ம்... இரண்டு தடவை வந்து பார்த்தேன்டா... நீ பாவம் அசந்து தூங்கிக் கொண்டிருந்தாய். லீவ் வேணா சொல்லிடேன் ரித்து... ரெஸ்ட் எடு."

"இல்லைப்பா... வேலை இருக்கு ஆஃபீஸில். இன்னும் அரை மணி நேரத்தில் நான் ரெடியாயிடுவேன்."

"சரிம்மா... உன் இஷ்டம்."

எல்லாம் இந்த சிடுமூஞ்சி சஞ்சய்யால் வந்தது. அவன் கனவில் வந்ததால் என் தூக்கம் கெட்டுப் போய் விட்டது. முன்நேரத்தில் தூங்கும்படி ஆகிவிட்டது என்று அவனை மனதிற்குள் திட்டினாள்.

வேகவேகமாகக் குளித்துவிட்டு வந்தவள் என்ன உடை அணிவது என்று யோசித்தாள்.

ஓ... இன்னிக்கு நந்தினி ட்ரீட் தருகிறாளே...!

அவள் இந்தக் கம்பெனியில் சேர்ந்து ஐந்து வருடங்கள் ஆகிவிட்டன. அதைக் கொண்டாடுவதற்காக லஞ்ச் வெளியே போய் சாப்பிடலாம் என்று பிளான் செய்தது அவள் நினைவுக்கு வந்தது. அதோடு புடவை கட்டிக் கொண்டு வர வேண்டும் என்று நந்தினி கண்டிப்பாகச் சொன்னது அவள் நினைவுக்கு வந்தது. சே! எழுந்ததே லேட்டாயிடுச்சு.

எந்தப் புடவையை அணிவது என்று யோசித்தவளின் கண்ணில் பட்டது. ரோஜா மொட்டின் நிறத்தில் இருந்த பிங்க் பிரிண்டட் சில்க் புடவை.

புடவையைக் கட்டவே அரை மணி நேரம் ஆனது அவளுக்கு. பின்பு அதற்கு மேட்சாக, பிங்க் நிற மாலை, பிங்க் நிற வளையல், கம்மல் என்று எல்லாவற்றையும் போட்டுக் கொண்டு, லேசான ஒப்பனை செய்து கொண்டு அறையிலிருந்து வெளியேறினாள்.

"ஹாய் ரித்து குட்டி... என்ன ஸ்பெஷல்! புடவை எல்லாம் உடுத்திட்டு ஜோரா இருக்கியே?"

"அப்பா... போங்கப்பா!" - சிணுங்கினாள் அவள்.

"ரித்து... ரோஸ் இந்தா... தலையில் வைச்சுக்கோ... மேட்சிங்கா இருக்கும்..." என்று ஒரு ரோஜாவை அவளிடம் நீட்டினார் மாலினி.

"தேங்க்ஸ் அம்மா!" என்றபடியே அதைத் தலையில் சூடிக் கொண்டாள் ரித்விகா.

"என்ன ரித்து... ஏதாவது ஃபங்ஷனா?"

"ம்... ஆமாம் அம்மா... லஞ்ச் வேண்டாம். நந்தினி ட்ரீட் இன்னிக்கு..."

"ஓ... எதுக்கு ட்ரீட்?"



"இந்தக் கம்பெனியில் நந்தினி சேர்ந்து ஐந்து வருடங்கள் ஆகிவிட்டது. அதைக் கொண்டாட ஒரு ட்ரீட் அவ தர்றா இன்னிக்கு..."

"தட்ஸ் குட். நேத்தே சொல்லி இருந்தால் உனக்கு லஞ்ச் டப்பா கட்டாமல் இருந்திருப்பேன்... நான்!"

"நான் மறந்திட்டேன் அம்மா... ஸாரி."

"சரி... இன்னொரு தோசை போட்டுக்கோ..."

"அச்சோ... போதும் அம்மா... லேட்டாச்சு."

ரித்விகா ஆஃபீஸில் நுழையும் பொழுது மணி பத்து.

"அட... ரிகா... இது? யூ லுக் ப்ரெட்டி!" என்றான் உடன் வேலை பார்க்கும் மாதவன்.

"ஓ... தேங்க்ஸ்!"

"ஸாரீயிங் ஸ்டைலா!"

"ட்ரீட் இன்னிக்கு நந்தினியோட... அதுதான்."

"ஓ... என்ஜாய்!"

"தேங்க்ஸ்..."

"ஒரு நிமிஷம்... பூ கீழே விழுந்திருச்சு..." என்றவன் குனிந்து பூவை எடுத்து அவளிடம் இடை வரை குனிந்து வணங்கி பவ்யமாக நீட்டினான்.

"ஓ... தேங்க்ஸ்!" என்று சிரித்தபடியே பூவை வாங்கியவள் ஏதோ தோன்ற சட்டெனத் திரும்பினாள்.

அங்கே சேம்பர் அறைக்கு வெளியே அவளையே பார்த்தபடி நின்று கொண்டிருந்தான் சஞ்சய். அவன் கண்களில் தீப்பொறி போல் கோபம் தெரிந்தது.

"ஹலோ..." என்று சிநேகமாகப் புன்னகைத்தாள் அவள். ஆனால் அவன் அதைக் கண்டு கொள்ளாமல் முகத்தைத் திருப்பிக் கொண்டான். அங்கிருந்து வேகமாக வெளியேறினான் அவன்.

இவனுக்கு எவ்வளவு திமிர்! சிரித்தால் பதிலுக்குச் சிரிக்க வேண்டும் என்றுகூடத் தெரியவில்லை. சிடுமூஞ்சி... சரியான பெயர்தான் வைத்தேன் என்று தன்னையே மெச்சிக் கொண்டாள்.

இவனுக்கு இங்கே என்ன வேலை? எதற்கு இங்கே வந்தான் என்று யோசித்தாள். அவன் எங்கே வந்தால் எனக்கு என்ன வந்தது... என்று தன்னையே கடிந்து கொண்டாள் அவள்.

கணினியை உயிர்ப்பித்தாள் ரித்விகா. வந்திருந்த இ-மெயில்களை செக் செய்தாள். தகுந்த பதிலை இமெயில் மூலம் திருப்பி அனுப்பினாள்.

"ஷாலினி! டைம் என்ன... என் சிஸ்டம் டைம் தப்பா இருக்கு."

அவளுடைய பக்கத்து இருக்கையில் அமர்ந்திருப்பவள் ஷாலினி. எப்பவும் துறுதுறுவென ஏதாவது செய்து கொண்டிருப்பாள். பேசிக் கொண்டிருப்பாள். இன்று அமைதியாக அவள் இருப்பதைக் கவனித்த ரித்விகா "ஏதோ சரியில்லை..." என்று தனக்குள்ளேயே முணுமுணுத்துக் கொண்டாள்.

"ஷாலு... உன்னைத்தான் கேட்டேன்."

"ஸாரி... நான்..." என்று அவசர அவசரமாகக் கண்களைத் துடைத்துக் கொண்டாள் ஷாலினி.



அவள் கண்கள் சிவந்திருப்பதைக் கவனித்தாள் ரித்விகா.

"ஷாலு... என்ன ஆச்சு?" என்றாள் மெல்லிய குரலில், அருகே வந்து ரித்விகா.

"எனக்குப் பயம்மா இருக்கு... ரிகா!"

"ஏய்... எதுக்குப் பயம்? சொல்லு..."

அவள் அழத் தொடங்கினாள்.

"ஷாலு! இங்கே பேச வேண்டாம். வா ரெஸ்ட் ரூம் போகலாம்."

"ஓ.கே. ரிகா!" என்று கண்களைத் துடைத்துக் கொண்டாள் ஷாலினி.

ரெஸ்ட் ரூம் உடம்பு சரியில்லாத பொழுது பெண்கள் ஓய்வெடுப்பதற்காக அமைக்கப்பட்ட ஒன்று. உள்ளே படுத்துக் கொள்ள படுக்கை உண்டு. சோபா ஒன்று உண்டு.

சோபாவில் அமர்ந்தாள் ரித்விகா.

"உட்கார் ஷாலு!"

ரோபோ போல் உட்கார்ந்தாள் ஷாலினி.

"என்ன ஷாலு... என்ன பிரச்சனை உனக்கு?"

"நான் ஒரு பெரிய ஆபத்தில் மாட்டியிருக்கிறேன் ரிகா!"

"ஏய்... மர்மக் கதை மன்னி மாதிரி பேசாமல் ஒழுங்காகச் சொல். என்ன ஆபத்து?"

"உனக்குத் தெரியும் ரிகா! எனக்கு நிச்சயம் ஆகிவிட்டது. அடுத்த மாதம் கல்யாணம் என்று..."

"ஹலோ..." என்று சிநேகமாகப் புன்னகைத்தாள் அவள். ஆனால் அவன் அதைக் கண்டு கொள்ளாமல் முகத்தைத் திருப்பிக் கொண்டான். அங்கிருந்து வேகமாக வெளியேறினான் அவன்.

இவனுக்கு எவ்வளவு திமிர்! சிரித்தால் பதிலுக்குச் சிரிக்க வேண்டும் என்றுகூடத் தெரியவில்லை. சிடுமூஞ்சி... சரியான பெயர்தான் வைத்தேன் என்று தன்னையே மெச்சிக் கொண்டாள்.

இவனுக்கு இங்கே என்ன வேலை? எதற்கு இங்கே வந்தான் என்று யோசித்தாள். அவன் எங்கே வந்தால் எனக்கு என்ன வந்தது... என்று தன்னையே கடிந்து கொண்டாள் அவள்.

கணினியை உயிர்ப்பித்தாள் ரித்விகா. வந்திருந்த இ-மெயில்களை செக் செய்தாள். தகுந்த பதிலை இமெயில் மூலம் திருப்பி அனுப்பினாள்.

"ஷாலினி! டைம் என்ன... என் சிஸ்டம் டைம் தப்பா இருக்கு."

அவளுடைய பக்கத்து இருக்கையில் அமர்ந் திருப்பவள் ஷாலினி. எப்பவும் துறுதுறுவென ஏதாவது செய்து கொண்டிருப்பாள். பேசிக் கொண்டிருப்பாள். இன்று அமைதியாக அவள் இருப்பதைக் கவனித்த ரித்விகா "ஏதோ சரியில்லை..." என்று தனக்குள்ளேயே முணுமுணுத்துக் கொண்டாள்.

"ஷாலு... உன்னைத்தான் கேட்டேன்."

"ஸாரி... நான்..." என்று அவசர அவசரமாகக் கண்களைத் துடைத்துக் கொண்டாள் ஷாலினி.



அவள் கண்கள் சிவந்திருப்பதைக் கவனித்தாள் ரித்விகா.

"ஷாலு... என்ன ஆச்சு?" என்றாள் மெல்லிய குரலில், அருகே வந்து ரித்விகா.

"எனக்குப் பயம்மா இருக்கு... ரிகா!"

"ஏய்... எதுக்குப் பயம்? சொல்லு..."

அவள் அழத் தொடங்கினாள்.

"ஷாலு! இங்கே பேச வேண்டாம். வா ரெஸ்ட் ரூம் போகலாம்."

"ஓ.கே. ரிகா!" என்று கண்களைத் துடைத்துக் கொண்டாள் ஷாலினி.

ரெஸ்ட் ரூம் உடம்பு சரியில்லாத பொழுது பெண்கள் ஓய்வெடுப்பதற்காக அமைக்கப்பட்ட ஒன்று. உள்ளே படுத்துக் கொள்ள படுக்கை உண்டு. சோபா ஒன்று உண்டு.

சோபாவில் அமர்ந்தாள் ரித்விகா.

"உட்கார் ஷாலு!"

ரோபோ போல் உட்கார்ந்தாள் ஷாலினி.

"என்ன ஷாலு... என்ன பிரச்சனை உனக்கு?"

"நான் ஒரு பெரிய ஆபத்தில் மாட்டியிருக்கிறேன் ரிகா!"

"ஏய்... மர்மக் கதை மன்னி மாதிரி பேசாமல் ஒழுங் காகச் சொல். என்ன ஆபத்து?"

"உனக்குத் தெரியும் ரிகா! எனக்கு நிச்சயம் ஆகிவிட்டது. அடுத்த மாதம் கல்யாணம் என்று..."

"ஆமாம். எனக்குத் தெரியும். நீ எல்லோருக்கும் ஸ்வீட் கொடுத்தாயே!"

"இப்ப என் கல்யாணம் நடக்குமா என்று எனக்குத் தெரியவில்லை."

"ஏன் ஷாலு! வரதட்சணைப் பிரச்சனையா?"

"இல்லை..."

"உன் வுட்பிக்கு வேறு பெண்களிடம்..."

"சே... சே... அதெல்லாம் இல்லை."

"உன் வுட்பியின் பெற்றோர் கல்யாணம் வேண்டாம் என்று சொல்கிறார்களா?"

"நோ... நோ."

"ஷாலு... சிக்கிரம் சொல். என்ன பிரச்சனை உனக்கு. எனக்குத் தெரிந்த ஆப்ஷன் எல்லாம் நான் சொல்லிட்டேன்."

"ரிகா! நான் காலேஜ் படிக்கும் பொழுது ஒருவனைக் காதலித்தேன். அவன் நல்லவன் இல்லை என்று தெரிந்த பின்பு விலகிவிட்டேன். அவன் பெயர் கோபால்.

அவனால்தான் இப்பொழுது பிரச்சனை. அவனுக்கு நான் எழுதிய கடிதங்கள் எல்லாம் அவனிடம் உள்ளன. அதை வைத்துக் கொண்டு அவன் இப்பொழுது என்னை மிரட்டுகிறான்..." - அழத் தொடங்கினாள் ஷாலினி.

"ஓ... பட் உன் வுட்பிக்கு இதைப் பற்றி..."

"இல்லை ரிகா... நான் அவரிடம் இதைப் பற்றி ஏதும் சொல்லவில்லை."

"இந்த மேட்டர் வேறு யாருக்கும் தெரியாதா?"





"தெரியாது."

"சரி... அவன் இப்பொழுது பணம் வேண்டும் என்று மிரட்டுகிறானா?"

"இல்லை ரிகா... பணம் கேட்டு இருந்தால் பரவாயில்லையே... முகத்தில் விட்டெறிந்து விட்டு... லெட்டர்ஸை வாங்கி வந்திருப்பேனே...!"

"வேறு என்ன வேண்டுமாம்... அவனுக்கு?"

"அவன் என்னைக் கேட்கிறான், ரிகா!" என்று மீண்டும் அழத் தொடங்கினாள் ஷாலினி.

"சே! காட்டு மிராண்டி. இவனை எல்லாம் நிற்க வைத்துச் சுட வேண்டும்."

"எனக்கும் அப்படித்தான் கோபம், ஆத்திரம் எல்லாமே வெறி போல் வருகிறது. ஆனால் என்ன செய்வது என்று புரியவில்லை. மூளை மரத்துப் போய் விட்டது."

"அவன் உன்னை எங்கே வரச் சொல்கிறான்?"

"அவன் வீட்டுக்குப் போக வேண்டுமாம்."

"வீடு எங்கே?"

"நீலாங்கரையில்... அட்ரஸ் கொடுத்து இருக்கிறான்."

"போலீஸிடம் புகார் செய்யலாமா?"

"புகார் செய்தால் கடிதங்களை நகல் எடுத்து என் சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் அனுப்புவேன் என்று மிரட்டுகிறான்."

"ஓ... இது வேறா?"

"சரி... நீ எப்ப அவன் வீட்டுக்குப் போக வேண்டும்?"

"இன்று இரவு பத்து மணிக்கு."

"வீட்டில் அவன் கடிதங்களை எங்கே வைத்திருப்பான் என்று தெரியுமா... உனக்கு?"

"தெரியாது ரிகா."

"சரி... நீ அவனிடம் பேசி எப்படியாவது இந்த விஷயத்தைக் கறக்க முடியுமா?"

"ம்... அது என்னால் முடியும். அவன் எப்பவும் போதையில் இருப்பான்."

"அப்ப முதலில் அந்தக் கடிதங்கள் எங்கே இருக்கு என்று கண்டுபிடி. கண்டுபிடித்து விட்டு என்னிடம் சொல்."

"சரி ரிகா! ப்ளீஸ் எப்படியாவது எனக்கு உதவி செய்... இந்த விஷயத்தில்."

"ம்... கண்டிப்பாக. ஷாலு... பயப்படாமல் போ."

அவள் சென்ற பின்பு என்ன செய்வது என்று யோசிக்கத் தொடங்கினாள். ஷாலுவைப் பார்த்தால் பாவமாக இருந்தது. கல்யாணக் கனவுகளுடன் மிதக்கும் பொழுது இந்த விஷயம் கண்டிப்பாக அதிர்ச்சியைத் தரும்.

கண்மூடி ஒரு நிமிடம் என்ன செய்யலாம் என்று தீவிரமாக யோசித்தாள்.

சட்டென ஒரு பொறி தட்டியது. ம்... அப்படிச் செய்ய வேண்டியதுதான். வேறு வழியில்லை... என்று தீர்மானித்தாள்.

சாயங்காலம் நெருங்க நெருங்க ரித்விகாவிற்குப் பதட்டம் அதிகரித்தது. கஷ்டப்பட்டுத் தன்னை சமாளித்துக் கொண்டாள்.

"ரித்விகா! என்னால் உனக்கு ரொம்ப சங்கடம்!"



"அதெல்லாம் நான் சமாளித்துக் கொள்கிறேன். நீ அந்தக் கேடுகெட்டவனிடம் பேச்சுக் கொடுத்தபடி இரு... அவன் வீட்டுக்குப் போகாமல் பார்த்துக் கொள்."

"ம்... ஆமாம் ரிகா. நான் அவனை டின்னர் சாப்பிட அழைத்து இருக்கிறேன்."

"ம்... அங்கேயே அவன் மயங்கி விழும்படி பார்த்துக் கொள்."

"ம்... தூக்க மருந்தை அவன் சாப்பாட்டிலோ... தண்ணீரிலோ கலந்து விடுகிறேன்."

"ஜாக்கிரதை... படத்தில் வருவது போல் தெரியாமல் நீ கலந்ததை நீ சாப்பிட்டு விடப் போகிறாய்."

அதைக் கேட்டு ஷாலினி சிரித்தாள். பதட்டம் குறைந்தது போல் உணர்ந்தனர் இருவரும். ஆறு மணி அளவில் ரித்விகா ஸ்கூட்டியில் புறப்பட்டாள். நீலாங்கரை செல்வதற்கு இரவு எட்டு மணி ஆகிவிட்டது. கைப்பையில் தேவையானவை எல்லாம் இருக்கிறதா என்று மீண்டும் ஒருமுறை செக் செய்தாள்.

அந்தக் குடியிருப்பு அடுக்ககம் (ஃபிளாட்ஸ்) கொஞ்சம் பாழடைந்தது போல் இருந்தது. வெளிச்சுவர் பூசப்படாமல் இருந்தது. சுற்றுமுற்றும் பார்த்தாள் அவள்.

யாரும் அந்த அடுக்ககம் அருகில் இல்லை. நல்லது தான். நான் உள்ளே நுழைவது யாருக்கும் தெரியாது என்று யோசித்தபடியே ஸ்கூட்டியை காம்பவுண்ட் சுவர் அருகே நிறுத்திவிட்டு அடுக்ககம் உள்ளே நுழைந்தாள்.

அவள் இதயத்துடிப்பு அதிகரித்தது. கடவுளே! ப்ளீஸ் எனக்குத் தெம்பைக் கொடு. நான் இதை ஒழுங்காகச் செய்

முடிக்க வேண்டும் என்று தனக்குள்ளேயே வேண்டிக் கொண்டாள்.

லிஃப்ட்டை உபயோகப்படுத்தாமல் படியை உபயோகப்படுத்தினாள். முதல் மாடியில் இருந்த இரண்டு வீடுகளும் பூட்டப்பட்டு இருந்தன. நல்லதுக்குத்தான் என்று நினைத்தபடியே இரண்டாவது மாடி ஏறினாள்.

கோபாலின் வீடு இரண்டாவது தளத்தில் முதல் வீடு.

எதிர்பார்த்தபடியே வீடு பூட்டப்பட்டு இருந்தது. எதிரில் இருந்த வீட்டின் கதவின் வெளித் தாழ்ப்பாளை லேசாக சப்தம் வராமல் போட்டாள்.

அவன் வீட்டின் பூட்டைத் திறப்பதற்காக பையில் கொண்டு வந்திருந்த ஆக்ஸா பிளேடை எடுத்தாள். வாட்ச்மேன் முத்துவிடம் பொய் சொல்லி வாங்கிய புது பிளேடு இது.

வீட்டில் உள்ள ஒரு ரூமின் பூட்டைத் திறக்க வேண்டும். சாவி தொலைந்து போய் விட்டது என்று பொய் சொல்லி, அவனை நம்ப வைத்து வாங்கி வரச் செய்தது.

பிளேடை எடுக்கும் பொழுது கைவிரல்கள் அவளை அறியாமல் நடுங்கின. மெள்ள பிளேடின் மூலம் பூட்டைத் தாழில் இருந்து விடுவிக்க முயன்றாள். அவள் விழிகள் சுற்றுமுற்றும் யாராவது வருகிறார்களா... என்று பார்த்த படியே இருந்தன.

ஒரு தடவை அவள் கைவிரலை பிளேடு பதம் பார்த்து விட்டது. வலியைக் கஷ்டப்பட்டுப் பொறுத்துக் கொண்டாள் ரித்விகா.



பூட்டு அசைந்து கொடுத்தது. மெதுவாகத் தாழைத் திறந்து கொண்டு கதவைத் திறந்தாள். அவளை அறியாமல் நிம்மதிப் பெருமூச்சு பிறந்தது.

வீடு கும்மிருட்டாக இருந்தது. கதவை உள்புறம் தாழிட்டவள், பையைத் துழாவினாள். தீப்பெட்டி மூலம் இருளைப் போக்கலாம் என்று பிளான் செய்து தீப்பெட்டியை பையினுள் வைத்திருந்தாள்.

ஒரு தீக்குச்சியைப் பற்ற வைத்தவளுக்கு ஸ்விட்ச் இருக்கும் இடம் தெரிந்தது. ஸ்விட்ச்சை அவள் போட முயன்றாள். அப்பொழுது ஒரு உருவம் அவளைக் குண்டுகட்டாக... முரட்டுத்தனமாக அணைத்தது. எதிர்பாராத தாக்குதலால் திணறினாள் அவள்.

பலங்கொண்ட மட்டும் அந்த உருவத்தின் பிடியில் இருந்து தப்ப முயன்றாள். ஆனால் அந்த உருவத்தின் பலம் முன்னால் அவள் சோர்ந்து போகத் தொடங்கினாள்.

போராட்டத்தின் பொழுது அவள் இடைக்கு மேல் உருவத்தின் கை பட்டது. பின்பு சட்டென உருவம் பிடியைத் தளர்த்தியது.

ஸ்விட்ச் போடும் சத்தம் கேட்டது. அந்த இடத்தில் ஒளி பரவியது. தன் முன்னே காக்கி உடையில் இருந்த சஞ்சய்யைப் பார்த்து அவள் அதிர்ந்தாள்.

"சே... நீதானா?" - வெறுப்பை உமிழ்ந்தான் சஞ்சய்.

இவன் முன்னால் இப்படி நிற்க வேண்டி உள்ளதே... மனம் புழுங்கினாள் அவள். அந்த அறையைப் பார்க்கவே அவளுக்கு அருவறுப்பாக இருந்தது.

சுவரில் ஆபாசப் படங்கள் ஒட்டப்பட்டு இருந்தன. டேபிளில் மது பாட்டில், ஆஷ்-ட்ரே இருந்தன. எங்கும், எதையும் பார்க்கப் பிடிக்காமல் தலை குனிந்தாள் அவள்.

சஞ்சய் அவள் அருகே வந்தான். அவள் கன்னத்தைப் பதம் பார்த்தது அவன் விரல்கள்.

# 9

இலக்கியங்களில்
ஜெயித்த
காதல்
கதைகளைக்
காட்டிலும்
மக்கள்
மனதில்
இடம்
பிடிப்பது
..........
பிரிந்த
கதைகளே
............
ஆனால்
நீயும்
நானும்



பிரிவோம்
என்று நான்
நினைக்கவில்லை
பெண்ணே...!

ரித்விகாவின் காதில் 'கொய்ங்' என்று சத்தம் கேட்டது.

"உனக்கு வெட்கமாக இல்லை... இந்த மாதிரி ஒருவனைச் சந்திக்க வருகிறாயே...!"

"இல்லை... நான்..." என்று அவள் முடிப்பதற்குள் அவன் குறுக்கிட்டான்.

"சே... கோபால் போன்ற ஆளைச் சந்திக்கத்தான் இந்த மாதிரி அழகாக புடவையை உடுத்திக் கொண்டு வந்தாயா?

சொல்... நீயும் அவன் காதல் வலையில் விழுந்தாயா? இந்த மாதிரி மட்டமான ரசனையுள்ள ஒருவனைப் போய்... நீ எப்படி?

அன்றும் அப்படித்தான். அவன் பெயர் என்ன... ஆங்... கணேஷ். அவனிடமும் மட்டரகமான புத்தகம் ஒன்று இருந்தது. கூட்டிக் கழித்துப் பார்த்தால் நீதான் எல்லாவற்றுக்கும் காரணம் என்று நினைக்கிறேன்!" என்று உறுமினான் அவன்.

அவமானத்தால் அவள் முகம் சிவந்தது. சே! சூழ்நிலை புரியாமல் என்னை இவன் எப்படி இந்த மாதிரி எல்லாம் பேசலாம் என்று கோபம் அலை போல் அவள் உடலில் படர்ந்தது.

“என்ன பேச்சைக் காணோம்? என்ன கதை சொல்லலாம் என்று யோசிக்கிறாயா?” - அவள் தோளை முரட்டுத்தனமாக உலுக்கினான் அவன்.

“ஸ்டாப் இட்... வலிக்கிறது!” என்று அவன் கையை தட்டி விட்டாள் ரித்விகா.

“சொல்... உனக்கும் கோபாலுக்கும் என்ன சம்பந்தம்?

“ம்... அதுதான் நீங்களே ஏதேதோ சொன்னீர்களே...

சொல்லும் பொழுதே அவள் கண்கள் கலங்கின.

“அன்றே உன்னை நான் ஸ்டேஷனிற்கு அழைத்து சென்றிருக்க வேண்டும். தப்பு செய்து விட்டேன். இன்று உன்னை விடுவதாக இல்லை. சொல்... ஏன் இங்கே வந்தாய்?”

“நீங்களே கண்டுபிடியுங்கள். உங்களைப் பொறுத்த வரை நான் குற்றவாளி. தட்ஸ் ஆல். நீங்கள் போலீஸ் தானே! கண்டுபிடியுங்கள்.... நான் ஏன் இங்கே வந்தேன் என்று. உங்களிடம் நான் எதையும் சொல்லத் தயாராக இல்லை.”

“உன்னை...” என்று அவளைக் கோபத்துடன் நெருங்கினான் அவன்.

ரித்விகாவின் கால்கள் பின்னோக்கி நடந்தன. கண்களில் பயம் தெரிந்தது. அவள் முதுகு சுவரில் உரசியது. இனி பின்னால் போக முடியாது என்று அவளுக்குப் புரிந்தது.

அவன் கண்கள் அவளைத் தலை முதல் கால் வரை நிதானமாக ஆராய்ந்தன. ரித்விகா சட்டென அவனைத் தள்ளி விட்டு ஓட முயன்றாள்.



அவள் புடவைத் தலைப்பு அவன் கையில் பட... அதைப் பிடித்து இழுத்தான் சஞ்சய். அவள் ப்ளவுஸுடன் குத்தியிருந்த ‘பின் கம்பி’ முரட்டுத்தனத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் உடைந்து போக பதறினாள் ரித்விகா.

புடவையின் மேல் பாகம் தரையில் விழ... முந்தானை சஞ்சய்யின் கையில் மொத்தமாக சிக்கியிருக்க இரு கைகளையும் கழுத்திற்குக் கீழ் வைத்து மானத்தைக் காக்க முயன்றாள்.

இனி, தன்னால் ஓட முடியாது என்று அவளுக்குப் புரிந்தது.

அவளையும் அறியாமல் கண்களில் இருந்து கண்ணீர் பெருகியது.

“ஏன்... நின்னுட்ட... ஓட வேண்டியதுதானே!” - சீறினான் அவன்.

“ம்... நீங்க... உண்மையான போலீஸ் அதிகாரிங்கிறதை இப்பதான் நிரூபிக்கிறீங்க... சே... ஐ... ஐ ஹேட் யூ!”

“என்ன தைரியம் உனக்கு... போலீஸைப் பற்றி இப்படிப் பேச...” என்றவன் அவள் அருகே நிதானமாக நடந்து வந்தான்.

பயத்தில் அவள் முகம் வெளிறிப் போனது.

“என்னை... என்னை... விட்டு விடுங்கள். நான் எந்தத் தப்பும் செய்யவில்லை. நான் உங்கள் மேல் அதிகாரியிடம் கம்ப்ளையிண்ட் செய்வேன்!” என்று முனகினாள் அவள்.

அவன் புடவை முந்தானையைக் கொண்டு அவள் தோளைப் போர்த்தினான்.

"சீக்கிரம்... புடவையை ஒழுங்காக உடுத்திக் கொண்டு வா. நான் உன்னிடம் பேச வேண்டும்..." என்றான் தணிந்த குரலில்.

அவளின் கைபேசி சிணுங்கியது. அவன் கண்கள் அவளைக் கூர்மையாகப் படம் பிடித்தன. அவள் கைப்பையில் இருந்த கைபேசியை அவனே எடுத்தான்.

"ஸ்பீக்கரில் போடுகிறேன். பேசு."

"சரி..." என்றாள் கோபத்தை அடக்கியபடியே.

"ஹலோ ஷாலு... சொல்லு."

"ரிகா... நான் ஹோட்டலை விட்டுக் கிளம்புகிறேன். அந்த கேடுகெட்ட கோபாலிற்கு மயக்க மருந்து கலந்த பாலைக் கொடுத்து விட்டேன். அவனைச் சாப்பிடும் டேபிளிலேயே இருக்கச் சொல்லி இருக்கிறேன். இப்பொழுது என்ன செய்வது?

நான் அவனுக்கு எழுதிய கடிதம் கிடைத்ததா? நீ எங்கே இருக்கிறாய்? ஸாரி... என்னால் உனக்கு எவ்வளவு கஷ்டம். சொல்லு ரிகா... எந்த ஆபத்தும் இல்லையே... உனக்கு!"

"கூல்... ஷாலு! நான் அவன் வீட்டில்தான் இருக்கிறேன். எப்படியும் நீ எழுதிய கடிதங்களைக் கண்டு பிடித்து விடுவேன். நீ கவலைப்படாதே... நீ பத்திரமாக வீட்டுக்குப் போ. இங்கே வர வேண்டாம்."

"ரொம்பத் தேங்க்ஸ் ரிகா. நானும் வருகிறேனே! பாவம்... நீ மட்டும் தனியாக... தேட வேண்டுமே!"

"இல்லை ஷாலு... நீ அங்கிருந்து இங்கு வர எப்படியும் ஒரு மணி நேரம் ஆகிவிடும். அதனால் நீ கிளம்பி



வர வேண்டாம். நான் அதற்குள் வேலையை முடித்து விடுவேன். நீ எழுதிய கடிதங்கள் மொத்தம் எவ்வளவு இருக்கும்?"

"நான்கு இல்லை... ஐந்திற்கு மேல் இருக்காது. பாவி! அதைப் பத்திரப்படுத்தி வைத்து என் வாழ்க்கையோடு இப்படி விளையாடுவான் என்று நான் கனவில்கூட கற்பனை செய்தது இல்லை."

"ம்... என்ன செய்வது ஷாலு! எதிர்பாராமல் நடப்பது நிறைய... அதுவும் பிடிக்காத விஷயங்கள் எதிர்பாராமல் தான் நடக்கும்..." என்றாள் அருகில் இருந்த சஞ்சய்யைப் பார்த்தபடியே.

"சரி... ரிகா! பத்திரம். எனக்காக நீ ரிஸ்க் எடுத்து அந்தக் கேடுகெட்டவனின் வீட்டில் இருக்கிறாயே... அதை நான் என் உயிர் உள்ள வரை மறக்க மாட்டேன். ரொம்பத் தேங்க்ஸ். என் கூடப் பிறந்தவர்கள்கூட இந்த மாதிரி ஒரு வேலை செய்யத் தயங்குவார்கள்.

ஆனால் நீ என்னைத் திட்டவில்லை. அநாவசியமான கேள்வி எதுவும் கேட்வில்லை. என் பிரச்சனையை இன்று சொன்னவுடன் சட்டெனப் புரிந்து கொண்டு உதவ முன் வந்தாயே... ஐ அம் கிரேட்ஃபுல் ரிகா டு யூ!" என்றாள் குரல் நடுங்க.

"ஷாலு... இட்ஸ் ஓ.கே. நீ வீட்டுக்குப் போ. நான் வேலை முடிந்த பின்பு உன்னைக் கூப்பிடுகிறேன்."

"சரி... ரிகா!"

ஃபோனில் சிவப்பு பட்டனை அழுத்தினான் சஞ்சய். பின்[illegible]வளைப் பார்த்தான்.

"ஸாரி... நான் உன்னை...!"

"போதும்... நிறுத்துங்கள்."

"லுக்... நீ வந்தவுடன் சொல்லி இருக்க வேண்டியது தானே?"

"நீங்கள் எங்கே என்னைச் சொல்ல விட்டீர்கள். ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு என்பது சரியாகத்தான் இருக்கிறது!" படபடத்தாள் அவள்.

"ஐயாம் ஸாரி. நான் நீ சொல்வது போல் ரொம்ப ஆத்திரப்பட்டு விட்டேன். வேண்டுமானால் என்னை நீ அடித்து விடு..." என்றவன் சட்டென அவள் இரண்டு கைகளையும் தன் கன்னத்தில் பதித்துக் கொண்டான்.

அவள் இதை எதிர்பார்க்கவில்லை. அவளுள் ஏதோ ஒரு புதிய உணர்வு பரவியது. அவன் கண்களைப் பார்த்தாள். அதில் முரட்டுத்தனம், கோபம் ஏதும் இல்லை.

ஏதும் சொல்லாமல் அவன் கையைத் தட்டி விட்டாள்.

"ஷாலினி இவனுக்கு எழுதிய கடிதங்களை நான் தேடி எடுக்க வேண்டும்."

"அந்தக் கவலை எல்லாம்... உனக்கு வேண்டாம். நான் பார்த்துக் கொள்கிறேன். நீ உன் ஃபிரண்டை பயப்படாமல் இருக்கச் சொல்."

"சரி... ஆனால் அவள் பெயர் ஏதும் வெளியே வராது அல்லவா... அவளுக்குத் திருமணம் ஆகப் போகிறது."

"ம்... பயப்படாதே. இதில் பெண்கள் மட்டுமே சம்பந்தப்பட்டு இருக்கிறார்கள். அதனால் எந்தப் பெண்ணின்



பெயரும் வெளியே வராமல் ரகசியமாகத்தான் நாங்கள் இந்தக் கேஸை நடத்துவோம்."

"ஓ... தேங்க்ஸ்!"

"இரு... ஒரு நிமிடம்!" என்றவன்... தன் கைபேசியில் யாரையோ தொடர்பு கொண்டான்.

"தாமஸ்... தீபம் ஹோட்டலில்தான் அவன் இருக்கிறான். அந்த ஹோட்டல் நிர்வாகியிடம் நீங்கள் பேசுங்கள். பேசி... அவனை அரெஸ்ட் செய்து விடுங்கள். நான் அவன் வீட்டை சீல் செய்து விட்டு வருகிறேன்."

"சரி ஸார்..."

"தாமஸ்! அந்த ஹோட்டலில் அவன் மயங்கியிருக்கிறான். நாம் செய்ய வேண்டிய வேலையைச் சுலபமாக்கி விட்டாள் ஒரு பெண்... " என்றான் சிரித்தபடியே சஞ்சய்.

"ஓ... தட்ஸ் குட் ஸார்... நான் அவனைக் கைது செய்த பின்பு உங்களுக்குத் தகவல் அளிக்கிறேன்."

"தேங்க்ஸ் தாமஸ்..." என்றபடியே கைபேசியைப் பாக்கெட்டில் போட்டுக் கொண்டான்.

"நீங்கள் இன்று ஆபீஸுக்கு வந்தது இதைப் பற்றி விசாரிக்கத்தானா?"

"ம்... ஆமாம். இந்தக் கோபாலின் மூலம் பாதிக்கப் பட்ட ஒரு பெண் எங்களுக்குப் புகார் கொடுத்தாள். அவள் தன்னைப் பற்றி முழு விவரமும் தெரிவிக்கவில்லை. ஆனால் கோபாலைப் பற்றி எல்லா விவரமும் சொன்னாள்.

அதற்குப் பின்பு நாங்கள் அவன் ஃபோன் காலை ட்ரேஸ் செய்தோம். அப்பொழுதுதான் உங்கள் ஆபீசில் பணிபுரிந்த ஷாலினி என்ற பெண்ணுடன் அவன் பேசி

வந்தான். அந்தப் பெண்ணைப் பற்றி விசாரிக்கலா என்றுதான் உங்கள் சேர்மன் ஆபீஸிற்கு..."

"காட்! அவரிடம் ஷாலினியைப் பற்றிக் கேட்டீர்களா அவள் வேலைக்குக் கூட ஆபத்து வரலாம், இதனால்..."

"ம்... எங்களுக்கும் அதெல்லாம் தெரியும், ரித்தி நாங்கள் நேரடியாக கேட்க மாட்டோம். உங்கள் ஆபீஸி பணிபுரிபவர்களின் விபரங்கள்... முக்கியமாக மொபை நம்பர் வேண்டும். ஒரு கேஸ் விஷயமாக நாங்கள் எல்லா பெரிய கட்டுமானக் கம்பெனிகளில் பணிபுரிபவர்களி நம்பர்களைச் சேகரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் என்று சொல்லித்தான் கேட்டேன்."

"ம்... அப்பாடா! நான் பயந்து விட்டேன்..."

"அங்கே வந்ததால்தான் உன்னுடைய இன்னொரு பாய்-ஃபிரண்டை என்னால் பார்க்க முடிந்தது."

"என்னது?"

"அட... தெரியாதது போல் அழகாக நடிக்கிறாயே?"

"சொல்ல வேண்டியதைத் தெளிவாகச் சொல்லுங்கள்."

"ம்... உன்னிடம் ஒரு ரோஜாப் பூவை நீட்டினானே ஒருவன். அதுவும் படத்தில் வருவது போல் ஏதோ வசனம் பேசியபடியே இடை வரை குனிந்து உன்னிடம் நீட்டினானே.. அவனைத் தான் சொல்கிறேன்.

நீயும் கலகலவென ரொம்ப ரசித்துச் சிரித்தாயே... இப்பொழுது ஒன்றும் புரியாதது போல் நடிக்கிறாயே! நான் போலீஸ் டிபார்ட்மெண்ட்டைச் சேர்ந்தவன். என்னிடமே உன் வேலையைக் காட்டுகிறாயா?" என்றான் சற்றே கோபமாக.



"எனக்கு நேரமாகி விட்டது. அதோடு இந்த இடத்தில் இருக்க எனக்குப் பிடிக்கவில்லை."

"ம்... இடம் பிடிக்கவில்லையா? இல்லை... என்னுடன் பேசப் பிடிக்கவில்லையா?"

அவள் மௌனமாக இருந்தாள்.

"அவன் பெயர் என்ன?"

"யார் பெயர்?"

"ம்... உன்னிடம் ரோஜாப் பூவைக் கொடுத்தானே... அவன் பெயர்!"

"அது... எதுக்கு உங்களுக்கு?"

"ஓ... திருமணம் செய்து கொள்ளப் போகிறவரின் பெயரைச் சொல்ல தமிழ் மரபு தடுக்கிறதோ!"

அவள் அவனை எரித்து விடுவது போல் பார்த்தாள்.

## 10

நான்
இயல்பானவளா?
எத்தனை
முகமூடிகள்
நான்
சுமக்கிறேன்
............
விரும்பியும்
விரும்பாமலும்
............

தாயாக
மகளாக
தங்கையாக
அக்காவாக
..........
இயல்பாக
இருந்தது
உன் காதலியாக
மட்டுமே
...............

"ம்... என்ன பதிலையே காணோம்?"

"நீங்கள்தான் போலீஸ் இலாகாவைச் சேர்ந்தவர் ஆயிற்றே... நீங்களே கண்டுபிடியுங்கள்."

அவன் முகம் இறுகியது.

"உனக்கு ரொம்பத் தைரியம்தான்... ஆனால் அசட்டுத் துணிச்சல் நிறைய தடவை உதவி செய்யாது. அதை ஞாபகம் வைத்துக் கொள்."

"நான் உங்களிடம் இப்பொழுது எதையும் கேட்கவில்லையே... என்னைப் பற்றி!"

"பரவாயில்லை. நீ கேட்காவிட்டால் என்ன... சொல்வது என் கடமை."

"சரி... போகலாமா!"



"ம்... வா."

"நான் ஸ்கூட்டியில் வந்தேன்."

"ஓ... பரவாயில்லை. நானும் உன்னுடன் வந்து விடுகிறேன்."

அவள் விழிகள் அகல அவனைப் பார்த்தாள்.

"இல்லை... நான்..." என்று முடிக்க முடியாமல் திணறினாள்.

"ஏன்... கணேஷை மட்டும்தான் பின்னாடி உட்கார்த்தி வைத்து ஸ்கூட்டியை ஓட்டுவாயா?"

அவள் அவனை முறைத்தாள்.

"சரி... உன் ஸ்கூட்டியையும் என் ஜீப்பே சுமக்கும். வா... என்னுடன்..."

அவள் முகத்தில் நிம்மதிப் பூக்கள் பரவின. அவனைப் பின்தொடர்ந்தாள் அவள்.

வெளியே மழை பலமாகப் பெய்து கொண்டிருந்தது.

"அச்சோ... மழை பெய்யறதே!"

"ம்... நீ என்ன உப்பா.... கரைந்து போக! வா...'

"இ... இல்லை. எனக்கு... மழைன்னா... பயம் இல்லை. ஆனால்..." என்று அவள் முடிக்கும் முன்பு ஒரு பலத்த இடிச் சத்தம் கேட்டது.

அவள் சட்டென அவன் கைமணிக்கட்டை பிடித்துக் கொண்டாள். கண்களை இறுக மூடிக் கொண்டாள். இன்னொரு இடி மிகவும் பலமாக ஒலிக்க, சட்டென முகத்தை அவன் தோள் வளைவில் புதைத்தாள்.

ஓ... இந்த வீராங்கனைக்கு இடின்னா பயம் போல என மனதிற்குள் நினைத்துச் சிரித்துக் கொண்டவ அவளைத் தன் புறம் இழுத்து அணைத்துக் கொண்டான்.

அவள் உடல் நடுங்குவதை அவனால் உண முடிந்தது. ரித்விகாவின் முகம் அவன் மார்பில் புதைய அவன் அவளைத் தன் கைச்சிறையில் பத்திரமாக பாதுகாத்தான்.

ரித்விகாவின் கைபேசி சிணுங்கியது. அவள் சட்டெ அவன் பிடியிலிருந்து விலகினாள். அவன் முகத்தை பார்க்கவே அவமானமாக இருந்தது அவளுக்கு.

"ம்... யார் போனில்?" என்றான் அவன்... எதுவுமே நடக்காதது போல.

"ம்... ஸ்பீக்கரில் போட வேண்டுமா... உங்களுக்கு இன்னும் சந்தேகம் தீரவில்லையா? சே... உங்களை போல ஒரு ஆளை நான் இதுவரை சந்தித்ததே இல்லை..." என்று படபடத்தாள்.

"ஒரு கேள்வி கேட்டால் உன்னால் ஒழுங்காகப் பதி சொல்ல முடியாதா?" - அவனும் படபடத்தான்.

"ம்... சொல்லு அம்மா... நான்... நான் வந்து விடுவேன். இங்கே மழை அதான் லேட்டாகுது?"

"ஓ... அப்படியா! ரெயின் கோட் இருக்காடி?"

"இ... இல்லைம்மா. நான் வந்திடறேன். நீ ஃபோனை வை."

"ஏன்டி சலிச்சுக்கிறே? உனக்குப் பிடித்த டிபன் பூரி, கிழங்கு செஞ்சிருக்கேன்."



"அம்மா... இப்ப பூரி, கிழங்கு இல்லைன்னு நான் உன்னிடம் சண்டை போட்டேனா?"

அவள் படபடத்தாள். அவன் அதை ரசித்தான்.

"சரிடி... நீ ஏதோ மூட்-அவுட்டில் இருக்க... பார்த்து நிதானமா வா. இங்கே மழை பெய்ஞ்சா... ரோடில குளம் மாதிரி தண்ணீர் தேங்கி இருக்கும். எந்த இடத்தில் பள்ளம், மேடு இருக்குன்னு தெரியாது. அதோடு எல்லா இடத்திலும் டிராஃபிக் நிறைய இருக்கும்.

ஜாக்கிரதையா வா... ரொம்ப வேகமாக வண்டி ஓட்டாதே. புரிஞ்சுதா!"

"அம்மா... போதும் வை ஃபோனை. நான் ஒண்ணும் சின்னக் குழந்தை இல்லை..." - என்றபடியே ஃபோனின் சிவப்பு பட்டனை அழுத்தினாள்.

"உங்க அம்மாவுக்குத் தெரியாதா... நீ இங்கே வந்திருப்பது?"

"தெரியாது."

"ம்... நீ கணேஷுடன் படம் போனது தெரியுமா?"

"தெரியாது."

"அப்புறம் நீ ஒருவனிடம் ரோஜாப் பூவை ஆசையாக வாங்கினாயே... அவனைப் பற்றித் தெரியுமா... உன் அம்மாவிற்கு!"

"லுக்... உங்களுக்கு என்ன தெரிய வேண்டும். நீங்க... உங்களுக்குத் தேவையில்லாத விஷயத்தில் எல்லாம் மூக்கை நுழைக்கிறீர்கள்."

"யெஸ்..."

"நீ ஒரு விஷயத்தைத் தெளிவாகச் சொல்லி விட்டால் நான் இனி இப்படிப் பேச மாட்டேன்."

"என்ன விஷயம்... தெரிய வேண்டும் உங்களுக்கு?" பொறுமை துளிக்கூட இல்லாமல் ஒலித்தது அவள் குரல்.

"ம்... அங்கிளிடம் என்னைப் பற்றி பேசிக் கொண்டிருந்தாயே...?"

"ம்... ஆ... ஆமாம்."

"என்னிடம் ஒரே ஒரு அட்ராக்ஷன்... என்று சொன்னாயே... என்ன அது? சொல்லு பார்க்கலாம்..."

சே! சரியான திருடன்... அதைத் தெரிந்து கொள்ள எப்படி எல்லாம் திட்டம் போடுகிறான். மனதிற்குள் அவனைச் செல்லமாகத் திட்டினாள் அவள்.

"என்ன பதிலைக் காணோம்..." என்றான் ஜீப்பைக் கிளப்பியபடியே.

"அச்சோ... என் ஸ்கூட்டி..."

"ஓ... ஸாரி!" என்றபடியே ஜீப்பை நிறுத்தியவன் ஓரமாக இருந்த அவள் ஸ்கூட்டியை பின்னே வைத்தான்.

"தேங்க்ஸ்!"

"இப்ப சொல்..."

"என்ன சொல்ல வேண்டும்?"

"என் பொறுமையை ரொம்பச் சோதிக்கிறாய்..."



அவன் ரெஸ்ட்லெஸ்ஸாக இருப்பதை அவள் கவனித்தாள். அவனைச் சீண்டுவது அவளுக்குப் பிடித்தது.

"ரித்விகா... நான் உன்னிடம்தான் பேசிக் கொண்டிருக்கிறேன்."

"ம்... தெரியுமே! வேறு யாரும் இங்கு இல்லையே!"

"தெரியுதுதானே... அப்ப ஏன் இப்படி ஆட்டம் காட்டற?"

"ம்... நான்... நாளைக்குச் சொல்றேன், ப்ளீஸ்."

"ஏன்... நாளைக்குத்தான் நாள் நல்லாயிருக்கா?"

"எப்படி வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள்... ப்ளீஸ்! நான் நாளைக்குச் சொல்றேன்."

"சரி... அது என்னவோ தெரியலை. அது என்னன்னு தெரியலைன்னா தலை வெடிச்சிடும் போல ஒரு மாதிரி இருக்கு..."

"ம்... ஆனால் ஒட்டுக் கேட்கிறது ரொம்ப தப்பு... தெரியுமா!"

"ஆமாம்... நீ என்ன அங்கிளிடம் ரகசியமாவா சொன்னே... நான் என் ரூமில் இருந்தேன். எனக்குக் காதில் விழுந்தது. தட்ஸ் ஆல்."

"என்ன இருந்தாலும்... ஒரு போலீஸ் ஆபீஸர் நீங்க... இந்த மாதிரிப் பேசலாமா... சே... சே... வெரி பேட்."

தன்னிடம் எல்லோரும் பேசப் பயப்படுவார்கள். காரணம் பதவி. ஆனால் ஒரு சின்னப் பெண் துளிக்கூட பயம் இல்லாமல் தன்னிடம் வாயடிக்கிறாளே என்று அவனுக்கு வியப்பாக இருந்தது. அவளிடம் பேசிக் கொண்டே இருக்க வேண்டும் என்று அவன் மனதில் ஒரு எண்ணம் வேகமாகப் படர்

"ம்... நான் இப்படிப் பேசுவது உனக்குப் பிடிக்க வில்லை. அப்படித்தானே!"

"யெஸ்..."

"நீ ஒரு விஷயத்தைத் தெளிவாகச் சொல்லி விட்டால் நான் இனி இப்படிப் பேச மாட்டேன்."

"என்ன விஷயம்... தெரிய வேண்டும் உங்களுக்கு?"... பொறுமை துளிக்கூட இல்லாமல் ஒலித்தது அவள் குரல்.

"ம்... அங்கிளிடம் என்னைப் பற்றி பேசிக் கொண் டிருந்தாயே...?"

"ம்... ஆ... ஆமாம்."

"என்னிடம் ஒரே ஒரு அட்ராக்ஷன்... என்று சொன்னாயே... என்ன அது? சொல்லு பார்க்கலாம்..."

சே! சரியான திருடன்... அதைத் தெரிந்து கொள்ள எப்படி எல்லாம் திட்டம் போடுகிறான். மனதிற்குள் அவனைச் செல்லமாகத் திட்டினாள் அவள்.

"என்ன பதிலைக் காணோம்..." என்றான் ஜீப்பைக் கிளப்பியபடியே.

"அச்சோ... என் ஸ்கூட்டி..."

"ஓ... ஸாரி!" என்றபடியே ஜீப்பை நிறுத்தியவன் ஓரமாக இருந்த அவள் ஸ்கூட்டியை பின்னே வைத்தான்.

"தேங்க்ஸ்!"

"இப்ப சொல்..."

"என்ன சொல்ல வேண்டும்?"

"என் பொறுமையை ரொம்பச் சோதிக்கிறாய்..."



அவன் ரெஸ்ட்லெஸ்ஸாக இருப்பதை அவள் கவனித்தாள். அவனைச் சீண்டுவது அவளுக்குப் பிடித்தது.

"ரித்விகா... நான் உன்னிடம்தான் பேசிக் கொண் டிருக்கிறேன்."

"ம்... தெரியுமே! வேறு யாரும் இங்கு இல்லையே!"

"தெரியுதுதானே... அப்ப ஏன் இப்படி ஆட்டம் காட்டுற?"

"ம்... நான்... நாளைக்குச் சொல்றேன், ப்ளீஸ்."

"ஏன்... நாளைக்குத்தான் நாள் நல்லாயிருக்கா?"

"எப்படி வேண்டுமானாலும் வைத்துக் கொள் ளுங்கள்... ப்ளீஸ்! நான் நாளைக்குச் சொல்றேன்."

"சரி... அது என்னவோ தெரியலை. அது என்னன்னு தெரியலைன்னா தலை வெடிச்சிடும் போல ஒரு மாதிரி இருக்கு..."

"ம்... ஆனால் ஒட்டுக் கேட்கிறது ரொம்ப தப்பு... தெரியுமா!"

"ஆமாம்... நீ என்ன அங்கிளிடம் ரகசியமாவா சொன்னே... நான் என் ரூமில் இருந்தேன். எனக்குக் காதில் விழுந்தது. தட்ஸ் ஆல்."

"என்ன இருந்தாலும்... ஒரு போலீஸ் ஆபீஸர் நீங்க... இந்த மாதிரிப் பேசலாமா... சே... சே... வெரி பேட்."

தன்னிடம் எல்லோரும் பேசப் பயப்படுவார்கள். காரணம் பதவி. ஆனால் ஒரு சின்னப் பெண் துளிக்கூட பயம் இல்லாமல் தன்னிடம் வாயடிக்கிறாளே என்று அவனுக்கு வியப்பாக இருந்தது. அவளிடம் பேசிக் கொண்டே இருக்க வேண்டும் என்று அவன் மனதில் ஒரு எண்ணம் வேகமாகப் படர்ந்தது.

"ஸாரி... நான்... அப்படிப் பேசி இருக்கக் கூடாது."

"நோ... நோ... எனக்கு உன்னைப் பிடித்திருக்கிறது. ஐ மீன் நீ பேசுவதைச் சொன்னேன். அதனால் நீ உன் இயல்பான குணத்தை மாற்றிக் கொள்ளாதே... எனக்காக..."

"ஓ... தேங்க்ஸ்."

"ஸாரி! நான் உன்னிடம் கடுமையாக... குற்றவாளி என்று நினைத்துப் பேசி விட்டேன் முதலில்..."

"ம்... என்ன செய்வது? உங்கள் கண்களுக்கு நான் குற்றவாளியைப் போல் தெரிகிறேன். உங்களுக்கு எப்படி போலீஸ் டிபார்ட்மெண்டில் உயர் பதவி கிடைத்தது என்று எனக்குத் தெரியவில்லை.

யாரோ தெரியாமல் உங்களுக்குக் கொடுத்து விட்டார்கள் போல..." என்றாள் சீரியஸாக அவள்.

சஞ்சய் தன்னை மீறிச் சிரித்தான். கஷ்டப்பட்டு படித்து, உழைத்துக் குற்றவாளிகளைத் திறம்பட பிடித்ததால்... கிடைத்தது இந்தப் பதவி. ஆனால் இவள் ஏதோ குருட்டு அதிர்ஷ்டத்தில் இந்தப் பதவி கிடைத்தது போல் அல்லவா பேசுகிறாள்.

என்ன ஒரு தைரியம்... இந்தப் பெண்ணிற்கு என்று யோசித்தபடியே ஜீப்பைச் செலுத்தினான்.

யோசனையில் மூழ்கி இருந்தவனைக் கலைத்தது கைபேசியின் சத்தம்.

"ஹலோ! சஞ்சய் ஸ்பீக்கிங்."

மறுமுனையில் கமிஷனர் பாண்டியன்.

"சஞ்சய்! வட சென்னையில் நாளைக்குக் கலவரம் நடக்கக் கூடும்னு எதிர்பார்க்கிறோம். ரகசியத் தகவல் வந்திருக்கு..."

"ஓ... என்ன காரணம் ஸார்?"

"ம்... ஜாதிக் கலவரம்தான். தேவர் வகுப்பைச் சேர்ந்த ஒரு பெண், பிராமின் வகுப்பைச் சேர்ந்த ஒரு பையனை ரிஜிஸ்ட்ரார் ஆபீஸில் திருமணம் செய்து கொண்டிருக்கிறாள்."

"ஓ... இரண்டு பேரும் மேஜர்தானே! ஒரே மதம்... அப்புறம் என்ன பிரச்சனை?"

"சஞ்சய்! நீ வட இந்தியாவில் படித்தவன். உனக்கு இதெல்லாம் புரியாது. இங்கே இருக்கும் ஜாதி சண்டைகளைப் பற்றித் தெரிந்து கொள்ள நாள் ஆகும்.

ஆனால் நீ இன்னிக்கு நைட் முதல் அங்கே வட சென்னையில் காவலைப் பலப்படுத்த வேண்டும். சாதிக் கலவரம், காட்டுத் தீ போல... சட்டெனப் பற்றிக் கொள்ளும். அணைய ரொம்ப நேரமாகும்."

"யெஸ்... ஸார்! அந்தத் திருமணமான ஜோடி எங்கே இருக்கிறார்கள்?"

"ம்... அவர்கள் தலைமறைவாகி விட்டார்கள். ஆனால் பெண் வீட்டைச் சேர்ந்தவர்கள் தேடும் வேட்டையில் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்த ஜோடி அவர்கள் கையில் மாட்டினால்... அவ்வளவுதான்! தொலைந்தார்கள்..."

"சரிங்க ஸார். நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன். தேங்க்ஸ் ஸார்!" என்றபடியே ஃபோனில் உள்ள சிவப்பு பட்டனை அழுத்தினான்.

அடுத்த அரை மணி நேரம் சஞ்சய் கைபேசி மூலம் அவன் கீழ் பணிபுரியும் அதிகாரிகளிடம் ஏதேதோ கட்டளைகளைப் பிறப்பித்த வண்ணம் இருந்தான்.

விழிகள் அகல... அவனைப் பிரமிப்பாகப் பார்த்தாள் ரித்விகா.

# 11

கடற்கரைக்
காற்றே
வழியை
விடு
..........
என்
இளவரசி
வருகிறாள்
..........
மேகமே
மேகமே
தேன்
மழை
பொழியேன்
இப்பொழுது
..........



என்
இளவரசி
வருகிறாள்
உன்
கல்லறையில்
நான்
புலம்புகிறேன்!

“ஹலோ... பாய்-ஃபிரண்ட்! என்ன டல்லா இருக்கீங்க...?” என்று பார்க்கில் வாக் போய்க் கொண்டிருந்த சிவநேசனை வம்புக்கு இழுத்தாள் ரித்விகா.

“ம்... கரெக்ட்தான் குழந்தை... ஏதோ மனசு சரியில்லை.”

“அச்சச்சோ... ஹவ் ஸாட்... என்ன ஆச்சு?”

“ம்... ஸ்வர்ணம் ஞாபகம் வந்திடுச்சு.”

“யார் அது ஸ்வர்ணம்... பாய்-ஃபிரண்ட்! உங்க ரூட்... சரியில்லை.”

“அட ராமா... நீ வேற... ஸ்வர்ணம்தான் என் ஆத்துக்காரி.”

“ஓ... ஸாரி பாய்-ஃபிரண்ட். புவனாதானே அவங்க பெயர். சரி... ஏன் திடீர்ன்னு ஆன்ட்டி ஞாபகம் வந்தது... உங்களுக்கு?”

“ம்... அவ முழுப் பெயர் ஸ்வர்ணபுவனா. நாளைக்கு என்னோட பிறந்த நாள். போன வருஷம் ஸ்வர்ணம் இருந்த[illegible] பாயசம் செய்தா. கோவிலுக்குப் போனோம்.

ம்... இந்தத் தடவை அவ பிட்ஸ்பெர்க்கில். நான் இங்கே..." என்று அங்கலாய்த்துக் கொண்டார் சிவநேசன்.

"ஓ... அட்வான்ஸ் பிறந்த நாள் வாழ்த்துக்கள். டோண்ட் ஒர்ரி பாய்-ஃபிரண்ட். உங்க அடுத்த பிறந்த நாள் பொழுது நீங்க ஆன்ட்டியோடதான் இருப்பீங்க."

"ம்... பார்க்கலாம். சரிம்மா... நான் கிளம்பறேன். நாழியாச்சு... ஸ்வர்ணம் ஃபோன் செய்வா."

"ஓ.கே. பாய்-ஃபிரண்ட்! நீங்க கிளம்புங்க. அப்புறம் ஒரு விஷயம்..."

"என்னம்மா... சொல்லு."

"ம்... சஞ்சய் வீட்டில இருக்காரா?"

"இல்லை... குழந்தை. இன்னிக்கு நிறைய வேலை இருக்கு. அதனால ஆத்துக்கு வர லேட்டாகும்னு சொன்னான். ஏதாவது முக்கியமான விஷயம் சொல்லணுமா... நான் வேணா அவன் ஃபோன் செய்யும் பொழுது சொல்லவா!"

"இல்லை... இல்லை. சும்மா கேட்டேன். நீங்க அவர்கிட்ட எதுவும் சொல்ல வேண்டாம்."

"சரிம்மா.. நான் கிளம்பறேன். நீ வரலையா?"

"இல்லை அங்கிள். நான் கொஞ்ச நேரம் வாக் செஞ்சிட்டு வரேன்."

"ஓ.கே..." என்று சொல்லி விட்டு அங்கு இருந்து கிளம்பினார் சிவநேசன்.

அவர் சென்ற பின்பு பார்க்கின் பெஞ்ச்சில் அமர்ந்தாள் த்விகா.



என்ன செய்வது அங்கிள் பர்த்டேக்கு... என்று தீவிரமாக யோசிக்கத் தொடங்கினாள்.

ஒரு ஐடியா உதயமானது. 'நாட் பேட் ரித்விகா!'

உனக்கு நல்ல யோசனை வருது... என்று தன்னையே தட்டிக் கொடுத்துக் கொண்டாள் அவள்.

கடைக்குச் சென்றவள்... ஒரு கேக்கிற்கு ஆர்டர் செய்தாள். பின்பு பலூன்கள், அழகான கிரீடம் ஒன்று என்று அலங்காரச் சாமான்களை வாங்கினாள்.

ம்... பப்லுவைக் கூப்பிட வேண்டும். அவன் ஹெல்ப் செய்வான் என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டாள்.

**சி**வநேசன் நல்ல தூக்கத்தில் இருந்தார். காலிங் பெல் சத்தம் கேட்டது.

சஞ்சயா... தெரியவில்லையே! இருக்காது. சஞ்சய் என்றால் பெல் அடிக்க மாட்டான். அவனிடம் சாவி உள்ளது. அதனால் திறந்து கொண்டு வருவானே... யாராக இருக்கும் என்று யோசித்தபடியே கதவைத் திறந்தார்.

"ஹாப்பி ரிடர்ன்ஸ் ஆஃப் தி டே!" என்று பூங்கொத்தைக் கையில் திணித்தாள் ரித்விகா.

"ஓ... தேங்க்ஸ். நீதானா!" என்றார் கொட்டாவி விட்டபடியே அவர்.

"ம்... என்ன பாய்-ஃபிரண்ட்! இப்படித் தூங்கி வழிய நீங்க. வாங்க... நாம இந்த நாளைக் கொண்டாடலாம்!" என்று அவர் கையைப் பிடித்து இழுத்துச் செல்லாத குறையாக இழுத்துச் சென்றாள் அவள்.

"என்... குழந்தை! எங்கே போறோம்?"

"வாங்க... வாங்க..." என்று படிக்கட்டு வழியாக மொட்டை மாடிக்கு அழைத்துச் சென்றாள் ரித்விகா.

மொட்டை மாடியில் நிலவின் ஒளி கசிந்து கொண்டிருந்தது ஒரு டேபிள் மேல் மெழுகுவர்த்திகள் பொருத்தப்பட்டு இருந்தன.

டேபிள் மேல் நடுவில் ஒரு கேக் சமர்த்தாக உட்கார்ந்திருந்தது. பலூன்கள் மாடியின் சுவரில் பறந்து கொண்டிருந்தன.

"என்னம்மா... இதெல்லாம்?"

"இந்த பர்த்-டேயை நீங்க மறக்கவே கூடாது மை பாய்-ஃபிரண்ட். அதுக்குத்தான் இந்த ஏற்பாடெல்லாம்..."

"என்னாலே நம்பவே முடியலை குழந்தை. எவ்வளவு சிரமம் எடுத்து இதெல்லாம் மெனக்கெட்டு கண்விழிச்சு செஞ்சிருக்க. நீ நன்னா இருக்கணும்மா..." என்று மனம் நெகிழ்ந்தார் அவர்.

"ம்... நான் மட்டும் இல்லை. பப்லுவும் ஹெல்ப் செய்தான். அவனுக்கு எக்ஸாம் வேற... அதனால நான்தான் அவனை வர வேண்டாம்னு சொல்லிட்டேன்.

அவன் வந்திருந்தா கேக் எல்லாம் போயிருக்கும். அதனாலேயே நான் அவனை வரச் சொல்லலை!" என்றாள் சட்டென ரகசியம் பேசும் குரலில்.

அவள் சொன்ன விதம் அவருக்குச் சிரிப்பை வரவழைத்தது. கலகலவெனச் சிரித்தார் அவர்.

**வே**லை முடிந்து வீடு திரும்பிக் கொண்டு இருந்தான் சஞ்சய். காரை நிறுத்திவிட்டு வீட்டை நோக்கி நடந்தான்.



'என்ன இது... வீட்டை சும்மா தாழ் போட்டு விட்டு எங்கே போயிருப்பார்... அங்கிள்!' என்று யோசித்தபடியே நின்றான் அவன்.

'ஊ... லலலா... ஊலலலா...' என்ற பாட்டுச் சத்தம் மாடியிலிருந்து அவன் காதைத் தீண்டியது. ஏதோ தோன்ற வேகமாக மாடிப்படிகளில் ஏறினான்.

அங்கே மொட்டை மாடியில் ரித்விகாவின் சிரிப்பு சப்தமும் அங்கிளின் பேச்சுக் குரலும் கேட்டது. மாடியின் கதவருகே மறைந்து அவர்கள் கண்ணில் படாதபடி நின்று கொண்டு அங்கே நடப்பதைப் பார்த்தான்.

'மானா மதுரை
மாமரக் கிளையிலே
பச்சைக் கிளி
ஒன்று கேட்டது
கேள்வியே...
என்
கண்ணு
ரொம்ப
அழகா..
என்
இறக்கை...
ரொம்ப
அழகா...'

பாடல் பேக்-கிரவுண்டில் கேட்க, அதற்கு ஏற்றபடி ரித்விகா ஃப்ரீ-ஸ்டைலில் நடனம் ஆடிக் கொண்டிருந்தாள். அவள் நடனம் ஆடும் ஸ்டைல் அவனுக்கு உற்சாகத்தை வரவழைத்தது. அங்கிள் டேபிள் அருகே இருந்த நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். அவர் கன்னங்களை சாக்லேட் நிற கேக் அலங்கரித்துக் கொண்டிருந்தது.

'ஓ... இன்று என்ன தேதி! சே... இருபத்தொன்று. அங்கிளின் பர்த்டே. மறந்து போய் விட்டேனே... நான். என்னை முந்திக் கொண்டாளே ரித்விகா...' என நினைத்த படியே நின்றான்.

'மேற்கு
சாலையிலே
மாட்டு
வண்டியிலே
போறாளே
பொண்ணு
ஒருத்தி...'

ரித்விகா இடையை ஆட்டியபடியே ஏதேதோ முகபாவனைகள் செய்து கொண்டு ஆடியபடி இருந்தாள்.

'பொண்ணு
கட்டி இருப்பது
என்ன
புடவை
என்றேன்



வானவில்லின்
வர்ணம்
என்றாள்...'

அவள் அங்கிளையும் ஆடச் சொல்லிக் கையைப் பிடித்து இழுப்பதை அவன் கவனித்தான்.

அவன் இதழ்களில் புன்னகை படர்ந்தது.

ஆடிக் கொண்டிருந்த ரித்விகாவிற்கு ஏதோ தோன்ற மாடிப்படியின் வாசலைப் பார்த்தாள். அங்கே சஞ்சய் இடுப்பில் கை ஊன்றியபடி நிற்பதைப் பார்த்தாள். சட்டென ஆடுவதை நிறுத்தி விட்டாள்.

"அங்கிள்... அங்கே பாருங்க!" என்று அவர் காதில் கிசுகிசுத்தாள்.

"அட... சஞ்சய்யா... அவனைப் பார்த்து ஏன் பயப்படறே? சஞ்சய்... வா... வா."

"ஹேப்பி ரிடர்ன்ஸ் ஆஃப் தி டே அங்கிள்!" என்று கை குலுக்கினான் சஞ்சய்.

"தேங்க்ஸ் சஞ்சய். நீ எப்ப வந்தே?"

"ம்... இப்பதான். நீங்க கதவைச் சும்மா தாழ் போட்டிருந்தீங்க. அப்பதான் பாட்டுச் சத்தம் கேட்டுது. அதான் மேலே ஏறி வந்தேன். ஸாரி... அங்கிள்! உங்க பர்த்-டேங்கிறதையே நான் மறந்து போயிட்டேன்."

"பரவாயில்லை... சஞ்சய். பாவம் உன் வேலை அப்படி. நீ என் [illegible] செய்வே?"

"ம்... ரித்விகா தான் உங்க பர்த்-டேயை ரொம்ப கிராண்டா செலிபிரேட் செய்திருக்கா போல..." என்றான் அவள் முகத்தைப் பார்த்தபடியே.

அவள் அவன் பார்வையின் குறுகுறுப்பைத் தாங்க முடியாமல் தலை குனிந்தாள்.

"ம்... பாட்டு, டான்ஸ், கேக்... பலூன்... மெழுகு வர்த்தின்னு ரொம்ப அமர்க்களமா செலிபிரேஷன்ஸ் இருக்கே..."

"ஆமான்டா... நேற்று தற்செயலா... நான் ரித்விகாவிடம் என் பர்த்-டே பற்றிச் சொன்னேன். அவள் இந்த மாதிரி செய்து அசத்தி விட்டாள்."

"தேங்க்ஸ்... ரித்விகா!" என்றவன் புன்னகைத்தபடியே கைகுலுக்க அவளை நோக்கி கை நீட்டினான்.

அவளும் கையை நீட்டினாள். அவனின் முரட்டுத் தனமான கைக்குள் மென்மையாக அடங்கியது அவள் கை.

"இட்ஸ் ஓ.கே." என்றாள் மெதுவாக.

"இந்த மாதிரி சர்ப்ரைஸாக பர்த்-டே செலிபிரேஷன் செய்வது... அங்கிள் பர்த்-டேக்கு மட்டும்தானா!" என்றான் உல்லாசமாகச் சிரித்தபடியே அவன்.

"ஏன்... உங்க பர்த்-டேக்கும் வேண்டுமானால் செலிபிரேட் செய்யலாமே..." என்றாள் அவளும் அதே தொனியில்.

"ம்... இதே மாதிரி இருந்தால் ரொம்ப நன்றாக இருக்கும். நீ ஆடுவதை நான் அழகாக... ராஜா போல் கால் மேல் கால் போட்டுக் கொண்டு பார்க்கலாம்."

"ஆஹா... நினைப்புதான்... உங்கள் பர்த்-டேக்கு நான் டான்ஸ் எல்லாம் ஆட மாட்டேன்."

"ம்... அப்ப பர்த்-டே பாய்க்கு என்ன கிஃப்ட் கொடுப்பாய்?" என்றான் ஏக்கமான குரலில்.

அவன் கண்களில் தெரிந்த ஏதோ ஒன்று அவளைப் பேச விடாமல் தடுத்தது.

"ம்... என்ன ரித்விகா! பதிலைக் காணோம்."

"ம்... ஒண்ணும் இல்லை... நான் கிளம்பறேன்."

"சரி... வா போகலாம்."

"இதோ... இதெல்லாம் கிளியர் செய்யணுமே..."

"நான் செய்யறேன்ம்மா..."

"அச்சோ... வேண்டாம். பர்த்-டே பாய் நீங்க எதுக்கு இதெல்லாம் செய்யணும்?"

"ஆமாம் அங்கிள். நீங்க எதுக்குச் செய்யணும். போய் ரெஸ்ட் எடுங்க. நீங்க போய் தூங்குங்க."

"சரி சஞ்சய்... ரித்விகா... பை... குட் நைட்."

"ஓ.கே. அங்கிள்! குட் நைட்."

சிவநேசன் போனவுடன் இருவரும் இடத்தை கிளியர் செய்யத் தொடங்கினார்கள். ஒரு மெழுகுவர்த்தி தவறுதலாக ரித்விகாவின் கை மேல் விழுந்தது.

"ஸ்...ஸ்..." என்று முனகினாள், அவளை அறியாமலே ரித்விகா.

"ஏய்... பார்த்து!" என்றவன் பதறியபடியே அவள் கையைப் பற்றினான்.

நெருப்புப் பட்டதால் அந்த இடம் கன்றிப் போய் சிவந்திருந்தது. அவன் சட்டென அவள் ஆள்காட்டி விரலை வாயில் வைத்துச் சப்பினான். அவள் உடலில் புதிதாக ரத்தம் பாய்வது போல் இருந்தது.

கையை இழுத்துக் கொள்ள முயன்றாள் அவள். ஆனால் அவன் விடாமல் அழுத்தமாகக் கையைப் பற்றி இருந்தான்.

"ரொம்ப எரியுதா?"

"ம்... பரவாயில்லை... இப்ப."

"சரியாயிடும். டோண்ட் ஒர்ரி."

"நான் ஒன்றும் கவலைப்படவில்லையே!"

"அதுதானே... நீ யார்? ஜான்ஸி ராணி போல் வீராங்கனை ஆச்சே!"

"ம்... என்னைக் கிண்டல் செய்கிறீர்கள்..."

"சே... சே... நிஜம்தான் இது. சரி... என்னிடம் பிடித்தது என்ன சொல்!" என்றவனின் கண்களில் ஆர்வம் பொங்கியது.

"விடுங்கள்... நான் போகணும்..." என்று அவன் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டாள்.

"ஏய்... இதை எல்லாம் யார் க்ளீன் செய்வது?"

"நீங்கள்தான்... இதில் என்ன சந்தேகம்?" என்று சொல்லிவிட்டு வேக வேகமாக அங்கிருந்து ஓடினாள்.

அவள் ஓடுவதையே பார்த்தபடி நின்றான் சஞ்சய்.



சரியான குறும்புக்காரப் பெண் இவள். எப்பவும் ஒரு துள்ளல், கிண்டல், குறும்பு, குழந்தைத்தனம் என எல்லாமே இவளிடம் உள்ளது என்று தனக்குள்ளேயே சிரித்தபடி டேபிளை நகர்த்தி வைத்தான்.

'என்னிடம் உள்ள என்ன அவளுக்குப் பிடிக்கும்?'

யோசனை ஓடியது.

## 12

மழைத்துளி
மண்ணில்
கலக்கிறது
............
இதமான
வாசனை
............
நீ
சளசளவென
மழைக்குப்
போட்டியாகப்
பேசிக்
கொண்டு
இருக்கிறாய்
............

ஆனால்
என்
மனம்
உன்னிடம்
இல்லை!
சொன்னால்
புரிந்து
கொள்வாயா?

"**ரி**த்து... உன் குறும்பு, சேஷ்டை... இதெல்லாம் நீ கொஞ்ச காலத்திற்கு மூட்டை கட்டி வைக்கணும்."

"வாட்... என்ன அம்மா இது?"

"ஆமாம்டி... உன் அப்பாவின் தங்கை பையன் ப்ரணேஷ் இங்கே ப்ராஜெக்ட் விஷயமாக வரப் போகிறானாம். நேத்துதான் அப்பா அதைப் பற்றி என்னண்ட பேசினார்."

"ஐயோ! இங்க நம்ம வீட்டிலேயா தங்கப் போறான்."

"ஆமாம் ரித்து. அவன் ப்ராஜெக்ட் டைடல் பார்க்கில்தானாம். அதனால் உங்க அப்பாதான் செல்ல தங்கைகிட்ட பேசி... அவன் இங்கே இருந்தே ஆபீஸ் போகட்டும்னு சொன்னார் போல...

என்னிடம் ஒரு வார்த்தை கூட கேட்கலை... இந்த மனுஷன். என்னடா ஆத்தில ஒரு வயசுப் பொண்ணு இருக்கேன்னு துளிக் கூட தோணலை... இந்த மனுஷனுக்கு."



"அம்மா! யாரும்மா ஒரு வயசுக் குழந்தை இங்க..."

"ரித்து! நீயும் உன் அப்பாவாட்டம் பேசாதே. நன்னா இல்லை. இது... சே! இந்த ஆத்தில நேக்கு துளிக்கூட மரியாதை இல்லை."

"என்ன மாலினி! என்னைப் பற்றிப் பேச்சு அடிபடற மாதிரி இருக்கே."

"அப்பா... உங்க தங்கை பையன் ப்ரணேஷ் இங்க வர்றது அம்மாவுக்குப் பிடிக்கலை."

"ரித்து... நீயும் உன் அம்மா மாதிரி பேசப்படாது. ப்ரணேஷ் யார்... உன் அத்தை பையன். நல்ல பதவியில் இருக்கிறான். ஸாஃப்ட்வேர் ஃபீல்டில் நல்ல சம்பளம். சின்ன வயசிலேயே இலங்கை, சிங்கப்பூர், மலேசியான்னு வெளிநாட்டுக்கெல்லாம் போயிட்டு வந்துட்டான்."

"அப்பா... நீங்க சொல்றதைக் கேட்டவுடன் எனக்கு ஒரு கவிதை ஞாபகம் வருது.. கவிதை இல்லை ஒரு விளம்பரப் படம் அது."

"ரித்து குட்டி... அத்தைப் பையனைப் பற்றிப் பேசத் தொடங்கிய உடனே உனக்குக் கற்பனை பலமா வருதே! சொல்லுடா கேட்கிறேன்..."

"இந்தியா, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா ஆகிய இடங்களில் மக்களின் பேராதரவைப் பெற்று உள்ளது கோபால் பல்பொடி.

ஹி... ஹி... எனக்கு அந்த விளம்பரம்தான் ஞாபகம் வந்தது... நீங்க ப்ரணேஷைப் பற்றிச் சொல்லும் பொழுது."

"நீ என் பொண்ணுடி...." என்று அவள் கன்னத்தைச் செல்லமாகக் கிள்ளினாள் மாலினி.

சந்தானத்தின் முகம் ஃபியூஸ் போன பல்ப் போல் இருந்தது.

"போய் காப்பி கொண்டா எனக்கு. வளவளன்னு பேசிண்டு நிப்பா..." - கோபத்தை மனைவி மேல் காட்டினார் சந்தானம்.

"அப்பா... அம்மாவை விரட்டாதீங்க. இப்ப என்ன ப்ரணேஷ் வரும் பொழுது எல்லாரும் ஒழுங்கா இருக்கணும்... அதுதானே உங்க கவலை."

"ஆமாம்... ரித்து."

"ஏன்ப்பா... யாராவது வந்தா ஒரு முகமூடியைப் போட்டுண்டு இருக்கணும். எவ்வளவு நாள் அந்த மாதிரி இருக்க முடியும். சொல்லுங்க... எப்படியும் ஒரு நாள் குட்டு உடைஞ்சிடும்."

"இல்லை ரித்து... என் தங்கை கல்யாணிக்கு வாய் ரொம்ப அதிகம். ப்ரணேஷ் மூலம் ஏதாவது தகவல் போகுமோன்னுதான் பயமா இருக்கு."

"அப்பா... நீங்க ஏன் அத்தைக்குப் பயப்படறீங்க?"

"ம்... ப்ரணேஷுக்கு உன்னைப் பேசி முடிக்கலாம்னு ஒரு எண்ணம் எனக்கு இருக்கு. கல்யாணிக்கும் அந்த எண்ணம் இருக்கு. அதனால நான்...." என்று அவர் முடிக்கும் முன்பு சீறினாள் ரித்விகா.

"அப்பா... இது என்ன உளறல்! எனக்கு இது எல்லாம் பிடிக்கலை."

"இல்லை ரித்துக் குட்டி... நீ ரொம்பச் செல்லமா ளர்ந்த பெண். நீ செய்யற குறும்பெல்லாம் எல்லாரும் பாறுத்துப்பாங்களான்னு எனக்குத் தெரியலை.



அசல் இடம்னா... எப்படி உன்னை நடத்துவாங்க ளான்னு தெரியலை. சந்தேகமா இருக்கு. இதுன்னா தங்கை பையன். அதனால தைரியமா நம்பி தாரை வார்த்துக் கொடுக்கலாம். அதுதான் நான் ப்ரணேஷை இங்கே வரச் சொன்னேன்."

"அப்பா! எனக்கு இது துளிக்கூட பிடிக்கலை. நீங்களா ஏதோ முடிவு செய்யறீங்க..." படபடத்தாள் அவள்.

"எல்லாம் உன் நல்லதுக்குத்தான் ரித்து குட்டி!"

"அப்பா... இனிமேல் நீங்க இந்த மாதிரி மறுபடியும் பேசினீங்கன்னா... நான் சும்மா இருக்க மாட்டேன்."

"என்னடா செய்வே... அப்பாவைத் திட்டுவ. அவ்வளவுதானே!"

"இல்லை... ப்ரணேஷை ஓட ஓட விரட்டி விடுவேன், நம்ம வீட்டை விட்டு..."

"காட்!" என்று கையைத் தலைமேல் வைத்து உட்கார்ந்தார் சந்தானம்.

"இந்தாங்க காப்பி..." - டீபாய் மேல் காப்பியை லொட் என வைத்தாள் மாலதி. அவள் 'ணங்' என வைத்ததில் காப்பித் துளிகள் டம்ளரைத் தாண்டி டீபாயில் சிதறின.

மனைவி ஒரு பக்கம் உம்... என்று முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்ள, மகள் கோபமாக முறுக்கிக் கொண்டு போக டெபாஸிட் போன வேட்பாளர் போல் பரிதாபமாக இருந்தார் சந்தானம்.

சமாளித்துக் கொண்டு பேசத் தொடங்கினார். "நான் நினைக்கிறதுல என்ன தப்பு மாலு!"

என்ன சொல்றேள்?"

"ம்... நம்ம ரித்துக் குட்டி செல்லமா வளர்ந்துட்டா."

"அதுக்குக் காரணம் நீங்க. ஒரே பொண்ணுன்னு செல்லம் கொடுத்தது நீங்க."

"சரி... சரி... எல்லாத்துக்கும் காரணம் நான்தான் ஒத்துக் கொள்கிறேன். ஆனால் ரித்துக் குட்டியின் திருமண விஷயத்தை நினைச்சாத்தான் கலக்கமா இருக்கு எனக்கு!"

"ஓ... உங்களுக்கு அந்த நினைப்பெல்லாம் இருக்கா?"

"ப்ளீஸ்! சொல்றதைக் கொஞ்சம் கேள்."

"சொல்லுங்க..."

"சொந்தத்தில் கல்யாணம் செய்தால் ரித்விகா கவலை இல்லாமல் இங்க இருப்பது போல் செல்லமாக புக்காத்தில் இருக்கலாம். அதனால்தான் என் தங்கை கல்யாணியின் ஒரே மகன் ப்ரணேஷிற்கு ரித்துக் குட்டியைச் சம்பந்தம் பேசலாம் என நான் நினைக்கிறேன்."

"ம்... உங்க பெண், உங்க தங்கை, உங்க தங்கை பையன்... உங்க இஷ்டம்."

"என்ன நீ... இப்படி விட்டேத்தியாப் பேசறே?"

"வேற என்ன செய்யறது? உங்களுக்கு என்ன இஷ்டமோ... அதுபடி செய்யுங்கோ."

"இல்லை... மாலு. உன் விருப்பம் என்ன?"

"என் விருப்பம் இதில் அநாவசியம். ரித்துவுக்குப் க்கணும் ப்ரணேஷை!"



"பிடிக்கும்... கண்டிப்பா பிடிக்கும். நித்யாவின் கல்யாணத்தின் பொழுது ப்ரணேஷைப் பார்த்தேன். அபிஷேக் பச்சன் மாதிரி நன்னா வெள்ளையா இருக்கான். பார்த்தவுடன் மனசில ஒட்டிக் கொள்கிற மாதிரியான உருவம். ரித்துக் குட்டிக்கு கண்டிப்பாக பிடிக்கும் அவனை..."

"ம்... சும்மா வெளித் தோற்றத்தில் மயங்கி விடுகிற ஆள் இல்லை, ரித்து!"

"பார்க்கலாம். ப்ரணேஷை அவளுக்குப் பிடிக்கும் என்று என் மனம் சொல்கிறது."

"ம்... பார்க்கலாம்."

"சரி... ரித்து எங்கே?"

"நீங்க சொன்ன நல்ல செய்தியைக் கேட்ட பின்பு கோபமாக ஸ்கூட்டியை எடுத்துக் கொண்டு போனாள்."

"அச்சோ... இவள் கோபம் எங்கே போய் முடியுமோ!"

"எல்லாம் உங்களால் வந்ததுதான். பக்குவமாகப் பேச வேண்டிய விஷயத்தை... எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசியது நீங்கள்..."

"ம்... தப்புதான். இப்ப என்ன செய்யறது?"

சின்னக் குழந்தை போல் தவிப்புடன் பேசும் கணவனைப் பார்த்து அவள் மனம் கனிந்தது.

"கவலைப்படாதீங்க... கொஞ்சம் கொஞ்சமா அவ மனசை மாத்த முயற்சிக்கலாம்."

"ம்... அதை ட்ரை பண்ணு மாலு!"

**ஸ்**கூட்டியைப் பெசன்ட் நகர் பீச் அருகே நிறுத்தினாள் ரித்விகா.

நிலவே ஒளி வீசு * சத்யா இராஜ்குமார்



கோபம் வந்தால் கடற்கரைக்கு வருவது அவள் வழக்கம். கடல் அலைகளைப் பார்த்தபடியே உட்கார்ந்திருப்பாள். அன்றும் அதே போல் உட்காருவது என்று தீர்மானித்தாள்.

"மேடம்... பஜ்ஜி."

"அட... இந்த மிளகாய் மாலை ரொம்ப அழகா இருக்கே..."

"ம்... காலையில் தொடுத்தேன் மேடம்! சும்மா வித்தியாசமா இருக்கட்டுமேன்னு கடை வாசலில் மாலையைப் போட்டேன்."

"ரொம்ப நல்லா இருக்கு. இருங்க... நான் உங்களை இதுகூட ஒரு ஃபோட்டோ எடுத்துக்கிறேன்."

அந்தக் கடை நடத்தும் பெண்மணியின் முகத்தில் மகிழ்ச்சி அலை பொங்கியது. "சரிங்க... மேடம்!" என்றபடியே தலைமுடியை ஒதுக்கிக் கொண்டாள்.

"அப்படியே நில்லுங்க... கொஞ்சம் முன்னாடி வாங்க. ஆங்... இப்ப கரெக்ட்டா இருக்கு. சிரிங்க... குட். அப்படியே இருங்க..." என்றபடியே தன் கைபேசி மூலம் ஃபோட்டோ எடுத்தாள்.

"காட்டுங்க மேடம்... பார்க்கலாம்!" என்று ஆர்வமாக அவள் அருகே வந்தாள் அந்தப் பெண். "அட... நல்லா இருக்கே ஃபோட்டோ. ரொம்பத் தேங்க்ஸ் மேடம்!"

"அட... பரவாயில்லை. இதுக்கு எதுக்கு தேங்க்ஸ். நான் அடுத்த வாரம் கடைக்கு வரும் பொழுது ஃபோட்டோ பிரிண்ட் உங்களுக்குத் தருகிறேன்."



"தேங்க்ஸ் மேடம்."

"ஹலோ! எனக்குத் தேங்க்ஸ் எல்லாம் வேண்டாம். ஆனால் நல்ல காரமான பஜ்ஜி வேணும்."

"உங்களுக்கு இல்லாததா மேடம்! இருங்க... ஒரு டூ மினிட்ஸ்ல ரெடியாயிடும்."

"அட... மேகி நூடுல்ஸ் விளம்பரம் மாதிரி இருக்கே..." என்றாள் சிரித்தபடியே ரித்விகா.

"மேடம்... உங்களை மாதிரி உற்சாகமான கஸ்டமர்ஸைப் பார்த்தாலே சுறுசுறுப்பா இருக்கு. அடிக்கடி நம்ம கடைக்கு வாங்க."

"சரி... சரி... பஜ்ஜி ரெடியா... பசிக்குது."

"இதோ... ரெடி மேடம்!" என்று வாழை இலையின் அடியே பனைத் தட்டை வைத்துப் பஜ்ஜியைப் பரப்பினாள்.

"ம்... பார்க்க சூப்பரா இருக்கு. சாப்பிடவும் அப்படி இருக்கும்தானே!" என்று கண்ணடித்தாள் ரித்விகா.

"மேடம்! என்ன இப்படிக் கேட்டுட்டீங்க... நம்ம கடையில சாப்பிட்டவங்க... திரும்பத் திரும்ப நம்ம கடைக்குத்தான் வருவாங்க."

"ஓ.கே. ஓ.கே. பஜ்ஜி எவ்வளவு?"

"அட... உங்ககிட்ட காசு வேண்டாம் மேடம்!"

"நோ... நோ.. பிடிங்க!" என்று ஐம்பது ரூபாய் தாளை அவளிடம் நீட்டினாள் ரித்விகா. அதைப் பவ்யமாக வாங்கிக் கொண்டவள், மீதம் முப்பது ரூபாயை அவளிடம் நீட்டினாள். அதை வாங்கி கைப்பையில் பத்திரப்படுத்தினாள் ரித்விகா.

பஜ்ஜி தட்டை எடுத்துக் கொண்டு கடல் அருகே சென்றாள். முன்பெல்லாம் இங்கே பிளாஸ்டிக் கவர் நிறைய இருக்கும். ஆனால் இப்பொழுது பிளாஸ்டிக் கவர் ஒன்று கூட இல்லை. கடைகளில் கூட பிளாஸ்டிக் கவர்களை வாங்குவது என்றால் விலைக்கு வாங்க வேண்டி உள்ளது.

அதனாலேயே நிறைய பேர் இப்பொழுது துணிப் பைகளை, இல்லை... வீட்டில் உள்ள பிளாஸ்டிக் கவர்களை எடுத்துச் செல்கிறார்கள்.

சுற்றுப்புறம் கெடாமல் இருக்க எல்லோரும் முனைப்பாக ஈடுபட வேண்டும் என்று நினைத்தபடியே கடற்கரையில்... அலைகள் காலை நனைக்க... நின்று கொண்டிருந்தாள் ரித்விகா.

# 13

ஈரக்காற்று
என்
முகத்தில்
படர்கிறது
...........
உடல்
சிலிர்க்கிறது
...........
மனம்
உன்னை
நினைக்கி[illegible]
...........



நீ
எங்கே
இருக்கிறாய்
இப்பொழுது?
என்ன
செய்கிறாய்
இப்பொழுது?
பதில் தெரியாத
கேள்விகளே
என் வாழ்க்கை!

**நே**ரம் போனதே தெரியாமல் கடற்கரையில் உட்கார்ந்திருந்தாள் அவள். அப்பா பேசியதையே மனம் அசை போட்டது.

ப்ரணேஷ் வரட்டும்... அவனை ஓட ஓட விரட்டுகிறேன் என்று மனதிற்குள் முடிவு செய்தாள் அவள்.

பஜ்ஜியைச் சாப்பிட்டு முடித்தவள் ப்ரணேஷிடம் எப்படி எல்லாம் நடந்து கொள்ள வேண்டும் என்று யோசித்தாள்.

கட்டாயத் திருமணம் மாதிரி ஏதாவது செய்து விடுவார்களா... ஒரு நொடி தன் மனதில் தோன்றிய எண்ணத்தை... 'சே... சே... அப்படி எல்லாம் நடக்காது!' என்று புறக்கணித்தாள்.

சட்டென சஞ்சய்யின் முகம் அவள் மனக்கண்ணில் தோன்றியது. கோபாலின் விஷயத்தில் எந்தப் பிரச்சனையும் இல்லாமல் ஷாலினியின் பெயர் வெளியே வராமல்...

கச்சிதமாக காரியத்தை முடித்த அவன் மேல் மதிப்பும் மரியாதையும் ஏற்பட்டது.

அன்று அவன் தன்னைத் தப்பாகப் புரிந்து கொண்டு கோபப்பட்டது எல்லாமே அவள் நினைவுக்கு வந்தது. இடி வந்ததும்... தான் அவன் மார்பில் முகம் புதைத்தது... அவன் நினைவுகளை மயில் இறகால் வருடியது.

நான் ஏன் இவனைப் பற்றி... இந்த கோபக்காரனைப் பற்றி நினைக்கிறேன்... என்று தன்னையே கேள்வி கேட்டுக் கொண்டாள்.

மழை லேசாகத் தூறல் போடத் தொடங்கியது. இந்த மழை வேறு... அப்பப்ப வந்து பயமுறுத்துகிறது. ரெயின் கோட் இல்லை. அதனால் வீட்டுக்குப் போய் விடலாம் என்று நினைத்தபடியே எழுந்தாள்.

கைக்கடிகாரத்தைப் பார்த்தாள். மணி பத்து... என்று காட்டியது அது.

ஓ... இவ்வளவு லேட்டாயிடுச்சா... அதனாலதான் பீச் காலியா இருக்கு... என நினைத்தபடியே மணலில் நடந்தாள்.

கடைகள் எல்லாம் அடைக்கப்பட்டு இருந்தன. மழை வலுக்கத் தொடங்கியது. ஸ்கூட்டி மொத்தமாக நனைந்திருந்தது அவளைப் போல...

ஸ்கூட்டி ஸ்டார்ட் ஆக மறுத்தது. அட சே! மழையில் இது வேறு... என்ன செய்வது என்று யோசித்தபடியே சுற்றும் முற்றும் பார்த்தாள்.

அங்கே ஒரு இளைஞன் நடந்து போய்க் கொண்டிருந்தான்.



"ஹலோ... மிஸ்டர்! இங்க வாங்க ப்ளீஸ்!"

அவன் திரும்பிப் பார்த்தான். பின் அவளை நோக்கி நடந்து வந்தான். "என்ன ஆச்சு?"

"ஸ்கூட்டியில என்ன பிரச்சனை என்று தெரியவில்லை. கிளம்ப மாட்டேங்குது... மழை வேறு பலமாப் பெய்யுது. எனக்கு இடின்னா பயம். ப்ளீஸ்... எனக்கு ஹெல்ப் பண்ணுங்க..."

அவன் அவளைப் பார்த்தான்.

ஈர உடையில் முற்றிலும் நனைந்து போயிருந்த அவளைப் பார்த்தவுடன் அவனுக்குப் போதை ஏறியது.

இதுக்குப் பேர்தான் ஜாக்பாட் என்பதா! நான் சும்மா போய்க் கொண்டிருந்தேன். என்னை இந்த அழகான பெண் அழைக்கிறாள். இவள் கொஞ்சிக் கொஞ்சிப் பேசுவதே நல்ல 'கிக்'காக இருக்கிறது... என்று நினைத்தபடியே அவளை நெருங்கினான்.

"உதவி செய்யறேன்... உன் போன்ற அழகான பெண் என்றால் எனக்குப் பிடிக்கும். சரி... நீ பதிலுக்கு என்ன தருவாய்?" என்றபடியே அவள் தோளில் கை பதித்தான்.

ரித்விகா இது வரை இந்த மாதிரி ஆள் யாரையும் சந்தித்தது இல்லை. அவன் தொட்ட இடம் எரிவது போல் இருந்தது. அவன் கையைத் தட்டி விட்டு... அவள் ஸ்கூட்டி அருகே சென்றாள்.

"ஏய்... சும்மா போனவனைக் கொஞ்சிக் கூப்பிட்டவள் நீ... உ[illegible]னை..." என்று அவளைத் தன்புறம் இழுத்தான்.

"ச்சீ... விடு என்னை!" என்றவள் அவனைத் தள்ளி விட்டாள். அவன் சுதாரித்துக் கொண்டு எழுந்திருக்க முயன்றான். அதற்குள் அவள் வேகமாக ஓடத் தொடங்கினாள்.

ஓடுவது அவளுக்குப் புதிது இல்லை. பப்லு, சச்சின் என்று ஃபிளாட்டில் உள்ளவர்களோடு ஹைட் அண்ட் ஸீக் கேம், ஷட்டில் எல்லாம் விளையாடுவதால் ஓடுவது அவளுக்கு வழக்கம்தான்.

ஆனால் இந்த முறை ஓடுவது பதட்டமாக இருந்தது. சே! ரோடில் யாருமே இல்லையே... எந்தக் கடையும் திறந்து இல்லையே... என்று நினைத்துக் கொண்டே கண்மண் தெரியாமல் ஓடினாள்.

சாலையில் ஒரு ஜீப் வருவது தெரிந்தது. திரும்பிப் பார்த்தாள். அந்தக் கொடியவன் அவளைத் தொடர்ந்து வந்து கொண்டிருந்தான்.

ஜீப்பை நோக்கிக் கை காட்டினாள். ஆனால் அவளைக் கண்டு கொள்ளாமல் ஜீப் அவள் மேல் மோதாமல்... உரசுவது போல் சென்றது.

இருந்த ஒரு நம்பிக்கையும் போய் விட... மீண்டும் ஓடத் தொடங்கினாள் ரித்விகா.

அவன் அவளை நெருங்கி விட்டான். பலத்த இடிச் சத்தம் ஒன்று கேட்க... பயந்து போய் நின்று விட்டாள் அவள். உருவம் ஒன்று அவளை இழுக்க... அவள் பதறினாள்.

"விடு... விடு... என்னை..." என்று போராடினாள்... திமிறினாள்.



"ரித்விகா! நான் சஞ்சய். பயப்படாதே!" என்ற குரல் அந்த உருவத்திடம் இருந்து வெளிப்பட... திமிறுவதை நிறுத்தினாள்.

நிலவு ஒளியில் சஞ்சய் முகம் தெரிந்தது. மீண்டும் ஒரு பலத்த இடி இடிக்க... அவள் அவன் மார்பில் முகம் புதைத்து அழத் தொடங்கினாள்.

"ஏய்... என்ன இது! ஒன்றும் இல்லை... பயப்படாதே. வா... ஜீப்பில் உட்கார்!" என்றபடியே அவளைக் கைத்தாங்கலாக அணைத்தபடியே ஜீப்பை நோக்கி நடந்தான்.

"அவன்... ஒருவன் என்னைத் துரத்தினான் தெரியுமா... அவன்... அவன் என்னிடம்..." முடிக்க முடியாமல் மீண்டும் விசும்பத் தொடங்கினாள்.

"அவனை கான்ஸ்டபிள் கவனித்துக் கொள்வார். நீ ஏன் இந்த நேரத்தில் தனியாக வந்தாய்? உனக்கு அறிவே இல்லை. எந்த நேரத்தில் எங்கே வருவது என்று விவஸ்தை இல்லை. சே! சரியான மக்கு நீ..." – கோபமாக வார்த்தைகள் வெளிப்பட்டன.

ஏற்கெனவே அதிர்ச்சியில் உறைந்திருந்த ரித்விகா... அவன் கோபப்பட்டவுடன் என்ன செய்வது என்று புரியாமல் தவித்தாள்.

"ச்சீ! ஐ ஹேட் யூ. என்னையே குற்றம் சொல்லுங்க. உங்க போலீஸ் டிபார்ட்மெண்ட் ஒழுங்காக வேலை செய்தால் இந்த மாதிரிக் குற்றவாளிங்க எல்லாம் ஏன் வெளியே திரியுறாங்க?

நான் உங்களுடன் வரவில்லை. விடுங்க என்னை...” என்று அவன் பிடியிலிருந்து விலகினாள்.

அவள் சொன்னதில் பொதிந்திருந்த உண்மை அவன் மனதை ஏதோ செய்தது. அப்பொழுது பலமாக ஒரு இடி இடிக்க... அவள் சட்டென ஓடி வந்து அவனை அணைத்துக் கொண்டாள்.

அவளின் அண்மை அவனுள் ஏதோ ஒரு உணர்வைத் தட்டி எழுப்பியது. சே! என்ன இது... நான் இதுவரை அனுபவித்திராத ஒரு புதிய உணர்வு... என்று நினைத்தபடியே அவளை இறுக அணைத்தான்.

அவள் அழுது கொண்டிருக்கிறாள் என்பது அவள் முதுகு குலுங்குவதில் இருந்து தெரிந்தது.

“ப்ளீஸ்... ரீது அழாதே... ஐயாம் ஸாரி. நான் உன்னை அப்படிச் சொல்லி இருக்கக் கூடாது. உன் மேல தப்பு இல்லை. இந்தச் சமூகம் புரையோடிப் போய் இருக்கிறது. நான் முட்டாள் மாதிரி உன்னைத் திட்டி விட்டேன்!” என்றான் தணிந்த குரலில்.

அவள் சட்டென அவன் அணைப்பில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டாள்.

“இப்பதான் உண்மையை நீங்க ஒத்துக் கொண்டிருக்கிறீர்கள். யூ ஆர் எ குட் பாய் நவ்!” என்று அவன் மூக்கைச் செல்லமாகத் திருகினாள்.

தன் உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு... கஷ்டப்பட்டுத் தன்னை அடக்கிக் கொண்டிருந்தான் அவன்.

பெண்ணின் ஸ்பரிசம் அவனுக்குப் புதிது. அதுவும் ஒரு அழகான, துடிப்பான இளம்பெண் தன்னிடம் இந்த



மாதிரி நடந்து கொள்வதை நினைத்து அவனுக்குப் பெருமையாக இருந்தது.

ஆனால் பதிலுக்கு அவளை ஏதும் செய்யக் கூடாது என்பதில் அவன் தீர்மானமாக இருந்தான். காரணம் அவன் அணிந்திருந்த காக்கி உடை.

அதோடு ஏதோ ஒரு தயக்கம் அவனை அறியாமல் தொற்றிக் கொண்டது. ரித்விகாவிடம் ஏதோ ஒரு ஈர்ப்பு சக்தி இருக்கிறது என்று அவனுக்குப் புரிந்தது.

“என்ன உண்மைன்னு கேட்க மாட்டேங்கிறீங்க!”

“யெஸ்... எ... என்ன உண்மை?”

குற்றவாளிகளைச் சர்வ சாதாரணமாகப் பிடித்த சஞ்சய் அவள் முன் தடுமாறினான்.

‘வானத்தில் ஏறியே
மின்னலைப்
பிடித்தவன்
.........
பூக்களைப்
பறிக்கவே
கைகளும்
நடுங்குதே...’

எப்பொழுதோ ரசித்த பாட்டு அவன் நினைவுக்கு வந்தது.

“என்ன கமிஷனர்! என்ன யோசனை?” என்று அவள் கொஞ்சினாள்.

"இல்லை... வந்து என்ன உண்மை... அது?"

"ம்... நீங்கள் உங்களையே முட்டாள் என்று ஒப்புக் கொண்டீர்களே... அதைத்தான் நான் சொன்னேன்..." என்று சொல்லி விட்டு... ஒரு இடிச் சிரிப்புச் சிரித்தாள் ரித்விகா.

அவன் இதழ்களில் புன்னகை படர்ந்தது. என்ன ஒரு தைரியம் இவளுக்கு! என்னிடம் பேச எல்லோரும் எப்படிப் பயப்படுவார்கள்! ஆனால் ஒரு சின்னப் பெண்... என்னிடம் துளிக்கூட பயம் இல்லாமல்... என்னைத் தைரியமாக முட்டாள் என்று சொல்கிறாளே... என்று வியந்தான் அவன்.

"சரி! அதெல்லாம் இருக்கட்டும். ஏன் இப்படி பீச் பக்கம் வந்தாய்... இந்த நேரத்தில்?"

"ம்... அது பெரிய கதை."

"பரவாயில்லை சொல்... வீடு போக இன்னும் அரை மணிநேரம் ஆகும்..." என்றபடியே ஜீப்பைக் கிளப்பினான்.

"அச்சோ... என் ஸ்கூட்டி!"

"எங்கே இருக்கிறது?"

"ம்... அங்கே வளையல் கடை போர்டு ஒன்று தெரிகிறதே... அதுக்குப் பக்கத்தில்தான் இருக்கிறது."

"ஓ... இந்தக் கடையா?" என்றவன்... ஜீப்பை அதன் அருகே நிறுத்தினான்.

ஸ்கூட்டியைத் தூக்கிப் பின்னால் வைத்தான்.

"ஸாரி... என்னால் உங்களுக்குச் சிரமம்!"

"பரவாயில்லை. அங்கிளுக்கு உன்னை ரொம்பப் பிடிக்கும். அதனால்தான் உனக்கு உதவி செய்[illegible]."



அவள் முகம் சுருங்கிப் போனது. மனதில் தோன்றிய சந்தேகம் வார்த்தைகளாகக் கொட்டியது.

"அப்ப... உங்களுக்கு என்னைப் பிடிக்கலை... அப்படித்தானே!"

"ஆமாம்... ஒரு பெண்ணுக்குத் தேவையான அச்சம், நாணம்... எதுவும் உன்னிடம் இல்லை. சின்னப் பசங்களுடன் விளையாடிக் கொண்டு திரிகிறாய். வெடி வெடித்துக் கொண்டு, போஸ்ட் பாக்ஸில் ஆட்டம்-பாம் வெடி வெடித்து எல்லோரையும் பயமுறுத்திக் கொண்டு... இதுதான் உன் வேலை.

எதுவும் இல்லை என்றால்... ஏதாவது வம்பில் மாட்டிக் கொண்டு முழித்துக் கொண்டு நிற்பாய். கோபால் வீட்டில் அப்படித்தான் நின்று கொண்டிருந்தாய். இதோ இப்பொழுது... இந்த முரடனிடம் மாட்டிக் கொண்டு நின்றாய்...

உன்னைப் போன்ற பெண் என்றாலே எனக்கு அலர்ஜி!" என்றான் சஞ்சய்.

சஞ்சய் அவளைச் சீண்டவே அப்படிச் சொன்னான். ஆனால் அது ரித்விகாவின் மனதில் பெரிய ஏமாற்றத்தையும், வலியையும் ஏற்படுத்தும் என்று அவன் துளிக்கூட எதிர்பார்க்கவில்லை.

"உங்களுக்குப் பிடித்தால் என்ன... பிடிக்காவிட்டால் என்ன... எனக்கு அதைப் பற்றிக் கவலை இல்லை. என் அத்தை மகன் ப்ரணேஷ் வருகிறான். அவனுக்கு என்னைப் பிடிக்கும். எ... எனக்கும் அப்படித்தான்.

அதனால்தான் சந்தானம் எங்களுக்குத் திருமணம் செய்து வைக்கப் போகிறார்!" என்றாள் வீம்புக்காக ரித்விகா.

சஞ்சயின் மனதில் வலி ஏற்பட்டது. ஏதோ ஒரு துக்கம்... அவன் மனதைப் பாரமாக அழுத்தியது. முகம் தெரியாத ப்ரணேஷ் மேல் ஆத்திரம் வந்தது.

"ஓ... கங்கிராட்ஸ்!" என்றான் ஏமாற்றத்தை... துக்கத்தை வலியை மறைத்துக் கொண்டு.

"தேங்க்ஸ்!"

இருவரும் அன்பை வெளிப்படுத்தாமல் வீம்புடன் இருந்தார்கள். அதனால் எவ்வளவு போராட்டங்கள் ஏற்படப் போகிறது என்பதை அறியாமலே!

## 14

கண்ணில்
கண்ணீர்
.............
சோர்ந்த
முகம்
.............
கலைந்த
ஓவியமாக
நீ
.............
பிரியப்
போகிறோம்
என்ற
வலி



கடப்பாரை
போல்
நெஞ்சைப்
பிளக்க
அழத்
திராணி
இன்றி
நான் ......

அடுத்த ஒரு வாரம் சஞ்சய்க்கு ஏனோ சரியாக எதுவுமே நடக்கவில்லை. ரித்விகா அவள் அத்தை பையனைப் பற்றி சொன்னதே... திரும்பத் திரும்ப அவன் காதில் ஒலித்துக் கொண்டிருந்தது.

காரணம் இல்லாமல் ஹெட்-கான்ஸ்டபிளிடமும், போலீஸ் ஸ்டேஷனுக்குப் புகார் கொடுக்க வந்தவர்களிடமும் சுள்ளென விழுந்தான்.

"என்ன ஸார்... உடம்பு சரியில்லையா? நீங்க முன்ன மாதிரி இல்லையே..." - கான்ஸ்டபிள் வாய் விட்டுக் கேட்கவே செய்து விட்டார்.

"அதெல்லாம் இல்லை. நீங்க உங்க வேலையைப் பாருங்க..." - சுள்ளென எரிந்து விழுந்தான் அவன்.

கான்ஸ்டபிள் சென்ற பின்பு அவனை மீறிப் பெருமூச்சு பிறந்தது. சே! நான் ஏன் இப்படி மாறிவிட்டேன். என்னைப் பற்றி இவர்கள் எவ்வளவோ நம்பிக்கைகள் வைத்திருக்கிறார்களே...

அதை எல்லாம் விட்டு விட்டு ஒரு பெண் என்னை ஒதுக்கி விட்டாள் என்ற காரணத்திற்காக நான் ஏன் இப்படி மாற வேண்டும்... என்று தன்னையே கடிந்து கொண்டான் அவன்.

அன்று வேலையில் அதற்கு மேல் அவனால் கவனம் செலுத்த முடியவில்லை.

"தாமஸ்!" என்று அழைத்தான்.

"யெஸ் ஸார்!"

"ம்... எனக்கு டயர்டா இருக்கு. அதனால் நான் வீட்டுக்குக் கிளம்பறேன்..."

"சரிங்க ஸார். ஒரு வாரமாகவே நீங்க கொஞ்சம் டல்லாத்தான் இருக்கீங்க. ஒரு வாரம் லீவ் போட்டு விட்டு எங்கேயாவது ரிலாக்ஸ்டாக இருக்க வேண்டியதுதானே ஸார்!" என்றவனின் குரலில் கரிசனம் தொனித்தது.

"ம்... சரி தாமஸ். ட்ரை பண்றேன். உன் கரிசனத்துக்கு நன்றி. நான் எதிலேயாவது கையெழுத்துப் போட வேண்டுமா... இருந்தால் கொடுங்கள்."

"இப்ப எதுவும் இல்லை ஸார்! நீங்க ஜாக்கிரதையாப் போங்க."

"சரி... தாமஸ்!" என்றபடியே வெளியே வந்தான். காரைக் கிளப்பினான். கார் சீறிப் பாய்ந்தது.

தாமஸுக்குக் கூட தெரிந்திருக்கிறது. என்னிடம் ஏதோ சரியில்லை என்று. சே! மற்றவர்கள் எல்லாம் தெரிந்து கொள்ளும்படி ஓபனாக என் நடவடிக்கைகள் மாறிவிட்டதே... என்று நினைத்தபடியே காரை ஓட்டினான்.



மழை பெய்து கொண்டிருந்தது. ஒரு பலத்த இடிச் சத்தம் கேட்டது. அவன் மனம் மீண்டும் ரித்விகாவைச் சுற்றி வந்தது.

இடி என்றால் அவளுக்கு எவ்வளவு பயம்! இடி இடித்த பொழுது அவள் பயந்து போய் தன்னை அணைத்துக் கொண்டது... பின்பு தன் மூக்கைத் திருகி குட்-பாய் என்று செல்லமாகப் பேசியது எல்லாமே அவனுக்கு ஞாபகம் வந்தது. அவளிடம் பேசினால் என்ன! சும்மா பேச வேண்டியதுதான்... என்று நினைத்தவன் கைபேசியை எடுத்தான்.

அடச்சே! அவள் நம்பர் என்னிடம் இல்லையே! அங்கிளிடம் இருக்கலாம். அவரைக் கேட்கலாம்... என்று நினைத்தபடியே அவருக்கு ஃபோன் செய்தான்.

"சஞ்சய்! சொல்லுடா... எப்பவும் டியூட்டியில் இருக்கும் பொழுது ஃபோன் செய்ய மாட்ட... என்ன விஷயம்?" என்றார் சிவநேசன்.

"அங்கிள்! உங்ககிட்ட ரித்விகா நம்பர் இருக்கா?"

"என்னடா... ஏதாவது பிரச்சனையா அவளால... பாவம்டா. குழந்தை அவ..."

'ம்... ம்... குழந்தைதான் என்னைப் படாத பாடு படுத்துகிறது...' என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டான் அவன்.

"அதெல்லாம் இல்லை அங்கிள்! என் ஃபிரண்டின் தங்கைக்கு [illegible] வேலை வேண்டும். அதுதான் ரித்விகாவிற்கு ஏதாவது தெரியுமா என்று விசாரிக்கலாம் என்றுதான்

காரை பார்க் செய்து விட்டு வேகமாக வீட்டை நோக்கி சென்றான். காலிங் பெல்லை அழுத்தினான். ரித்விகா திறப்பாள் என்ற நினைத்தவனுக்கு ஏமாற்றம் மிஞ்சியது.

காரணம் கதவைத் திறந்தது சிவநேசன். "வாடா... சஞ்சய்! எப்பவும் அர்த்த ராத்திரியில வருவே... இன்னிக்கு எப்படிடா பொழுதோட வந்துட்ட...?"

"ம்... சும்மாதான். ரித்விகா இல்லையா?"

"இல்லைடா... இப்பதான் கீழே போனாள். உன்னை[illegible] சொல்லச் சொன்னா."

"என்ன சொல்லச் சொன்னா?" – அவன் குரலில் கோபம் கொப்பளித்தது.

"கீழே ஃபிளாட்டில் இருக்கிற பசங்களை எல்லாம் வெளியே அழைச்சுண்டு போறாளாம். உன்னையும் வரச் சொன்னா..."

'ஆமாம்... அவ அங்கே குழந்தைகளுடன் லூட்டி அடித்துக் கொண்டிருப்பாள். நான் அதைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்...' கொந்தளித்தது அவன் மனம்.

"நான் எதுக்கு வரணுமாம்?"

"ம்... குழந்தைகளோடு வெளியே போறாளாம். அதனால பாதுகாப்பு வேண்டுமாம்."

அவனுக்கு வந்த ஆத்திரத்திற்குத் தலையை சுவரில் 'ணங்' என்று மோதிக் கொள்ளலாமா என்று இருந்தது.

பிரதமருக்கும், முதல் அமைச்சருக்கும் பாதுகாப்பு கொடுத்து வரும் நான் இந்தச் சின்னப் பெண்ணிற்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டுமா?



எல்லாம் நேரம்தான் சாமி... என நினைத்துக் கொண்டான்.

காற்று போன பலூன் போல இருந்தது... அவன் மனநிலை.

"சரி... இப்ப எங்கே இருக்கா... அவ?"

"அவங்க வீட்டில்தான் இருக்கா... உன்னை அங்கேதான் வரச் சொன்னா..."

"சரி... அங்கிள்! நான் போய்ப் பார்த்துட்டு வர்றேன்."

"டேய்... காக்கி டிரெஸ்ஸோடு போகாதே. அவா ஆத்தில பயந்திடப் போறா..."

"தேங்க்ஸ் அங்கிள்! மறந்திட்டேன்..." என்றவன்... வேகமாக முகம் கை, கால் கழுவி ஒரு டி-ஷர்ட்டும், ஜீன்ஸ் பேண்ட்டும் அணிந்து கொண்டான்.

கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்துக் கொண்டான். அவனை அறியாமல் அவன் கைவிரல்கள் மூக்கைத் தடவிப் பார்த்தன. அவள் தன் மூக்கைத் திருகியது அவன் நினைவுக்கு வர... தனக்குத் தானே சிரித்துக் கொண்டான்.

"அங்கிள்! கதவைச் சாத்திக்கோங்க..." என்றபடியே படி இறங்கினான்.

அவள் வீட்டில் யார் யார் இருக்கிறார்கள்? அவள் வீட்டுக்குப் போவது இதுவே முதல் தடவை. அவள் அப்பா பெயர் சந்தானம் என்று தெரியும். காரணம் ரித்விகா பேசும்பொழுது எப்படியாவது இந்தப் பெயர் வாயில் வந்து விடும்... அ[illegible]ல்தான்...

காலிங் பெல்லை அழுத்தினான் சஞ்சய். கதவைத் திறந்தது அபிஷேக் பச்சனைப் போல் இருந்த ஒருவன். ஷெர்வானியில் கம்பீரமாக இருந்தான்.

"ஹலோ... ரித்விகா இருக்காங்களா?"

"யெஸ்... நீங்க யார்? எதுக்கு அவளைப் பார்க்கனும்?"

கதவை அரைகுறையாகத் திறந்து வைத்துக் கொண்டு... விருந்தோம்பல் துளிக்கூட இல்லாமல்... கதவுக்கு வெளியே நிற்க வைத்துக் கேள்விக் கணைகளைத் தொடுத்தவனைத் துளிக்கூட பிடிக்கவில்லை சஞ்சய்க்கு.

"என் பெயர் சஞ்சய். அசிஸ்டெண்ட் கமிஷனர் ஆஃப் போலீஸ்."

"ஓ... ஸாரி... ஸாரி... ஸார்! வாங்க உள்ளே... உட்காருங்க!" என்றவன் உள்ளே சென்றான்.

"ரிகா... ரிகா... டியர்! எங்கே இருக்கிறாய்? உன்னைத் தேடிக் கொண்டு ஸார் வந்திருக்கிறார் பார்."

அதைக் கேட்ட சஞ்சய்க்கு உடல் எல்லாம் பற்றி எரிவது போல் எரிச்சல் பரவியது. இவன்தான் 'அந்த அத்தை மகன்' போல.

கூப்பிடுவதைப் பார்... 'ரிகா டியராம்... டியர்! நான் ஸாராம்... இவனுக்கு என்னவோ இருபத்தைந்து வயது மாதிரியும் எனக்கென்னவோ ஐம்பது வயது மாதிரியும் என்னை ஸார்... என்று அவளிடம் சொல்வதைப் பார்...' பொருமினான் அவன்.



"யார் அத்தான் வந்திருப்பது...?" என்றபடியே ஹாலுக்கு வந்த ரித்விகா திகைத்தாள். அவள் விழிகள் வியப்பால் விரிந்தன.

காக்கிச் சட்டையிலேயே அவனைப் பெரும்பாலும் பார்த்தவளுக்கு ஜீன்ஸிலும், டி-ஷர்ட்டிலும் பார்த்தவுடன் அவளுள் ஒரு தோழமை உணர்வு பரவியது.

"ஹலோ... சஞ்சய்! உட்காருங்க. என்ன சாப்பிடறீங்க... முதல் தடவையா வீட்டுக்கு வந்திருக்கீங்க... அதுவும் காக்கி டிரஸ் இல்லாமல் மஃப்டியில்... சட்டுன்னு அடையாளம் தெரியலை. பை தி பை... யூ லுக் வெரி ஹாண்ட்ஸம்!" என்றாள் அவனைப் பார்வையில் விழுங்கியபடியே...

அவளிடம் இருந்து இந்த ரியாக்ஷனை எதிர்பார்க்காத சஞ்சய்... என்ன பதில் பேசுவது என்று தெரியாமல் திணறினான்.

"நான் உன்னை வீட்டில் இருக்கச் சொன்னால்... நீ இங்கே வந்து விட்டாயே ரீது!"

வேண்டுமென்றே 'ரீது...'வில் அழுத்தம் கொடுத்தான் அவன். ப்ரணேஷ் முகம் கோபத்தால் சிவப்பதை ரசித்தான் சஞ்சய்.

"ஸாரி... சஞ்சய். அத்தான் அவசரமாக அழைத்தார். அதனால் நான்..."

இப்பொழுது சஞ்சய்யின் முகம் சுருங்கியது. பல்லை நறநறவெனக் கடித்தான். 'அத்தான்' என்ன வேண்டிக் கிடக்கிறது, இவனுக்கு.

"சரி... ரீது! அப்புறம் வீட்டுக்கு வா. நான் உன்னிடம் முக்கியமான விஷயம் பேச வேண்டும்."

"சரி... வருகிறேன்..."

"வீட்டில் அங்கிள் இல்லையா?"

"உள்ளே தியானம் செய்து கொண்டிருக்கிறார். ஸாரி... சந்தானம் தியானத்தை முடிக்க இன்னும் அரை மணிநேரம் ஆகும்."

"சரி... நான் கிளம்புகிறேன், ரீது!"

"ம்... சரி!" என்றவளின் கண்களில் சட்டென ஒளி குறைந்தது.

## 15

அழகான
கவிதைத்
தொகுப்பு
படிக்கிறேன்
............
உன்
ஞாபகம்
எனக்கு
..........
வெயிலும்
மழையும்
ஒன்றாகச்
சங்கமிக்க
..........



உன்
ஞாபகம்
எனக்கு
............
இந்த
அவஸ்தை
எப்பொழுது
தீரும்?

வீட்டுக்கு வந்த சஞ்சய்... கோபத்தின் உச்சியில் இருந்தான். அத்தானாம்... அத்தான். அழைப்பதைப் பார்! என்று ரித்விகாவை மனதிற்குள் திட்டினான்.

"டேய்... ஃபோன் உனக்குத்தான்!"

"எனக்கா... யார் ஃபோனில்?"

"ரித்விகா தான்டா..."

"கொடுங்க... ஹலோ! சஞ்சய் ஹியர்."

"ஸாரி... என் மேல கோபமா?"

"நான் கோபப்பட்டா என்ன... கோபப்படாவிட்டால் என்ன... உனக்கு அதைப் பற்றி என்ன கவலை? உன் அத்தான்... ஊரில் இருந்து வந்திருக்கிறார் போல...

உனக்கு அவருடன் நிறைய வேலைகள் இருக்கும். என்னோட பேசி எதுக்கு உன் டயத்தை வேஸ்ட் பண்ணுறே. வை... ஃபோனை!" என்றபடியே ஃபோனின் சிவப்புப் பட்டனை அழுத்தினான்.

"என்னடா சஞ்சய்! ஏன் அவகிட்ட கோவிச்சின்ட... பாவம்டா அவ...!"

"அங்கிள்! ப்ளீஸ் நீங்க வேணா அவளுக்கு சப்போர்ட் செய்யுங்க. என்னால அது முடியாது."

"டேய்... பாவம்டா அவ... நீ..." என்று அவர் முடிக்கும் முன்பு அவன் குறுக்கிட்டான்.

"அங்கிள் ப்ளீஸ்... இதுக்கு மேல இதைப் பற்றி நாம பேச வேண்டாமே!" என்றவன் தன் அறைக்குள் சென்றான்.

அறையில் இருந்த டி.வியை உயிர்ப்பித்தான். ஏதோ ஒரு பழைய பாடல் ஓடிக் கொண்டிருந்தது. வெறுப்போடு அதை நிறுத்தினான்.

இடிச் சத்தம் கேட்டது. மீண்டும் அவள் முகம்... அவள் நெருக்கம்... அவனுக்கு நினைவுக்கு வந்தது.

'சே... இது என்ன அவஸ்தை! இந்த இடியின் பொழுது அவள் என்ன செய்திருப்பாள்? அவள் அத்தை மகனின் மார்பில் தஞ்சம் அடைந்திருப்பாளோ...!'

தறிகெட்டு ஓடியது அவன் எண்ணங்கள். இது நாள் வரை யார் மேலேயும் ஏற்படாத ஒரு பொறாமை உணர்வு ப்ரணேஷ் மேல் ஏற்பட்டது.

ஆனால் ரித்விகா தன்னை வித்தியாசமாகப் பார்த்தது... ஹாண்ட்ஸம் என்று அழைத்தது எல்லாமே அவனுக்கு நம்பிக்கையை ஊட்டியது.

அவளிடம் கோபமாகப் பேசி இருக்கக் கூடாதா... முகத்தில் அடித்த மாதிரி பேசி இருக்கக் கூடாதா... சே! என்ன செய்வது... இவள் விஷயத்தில்! - குழம்பினான் அவன்.



சஞ்சய் ஏன் என்னை இப்படித் திட்டினான்? இதுவரை யாரும் என்னை எதுவும் சொன்னதில்லை. இவன் ஏதோ குற்றவாளியை நடத்துவது போல் அல்லவா என்னை நடத்துகிறான்.

ஆனால் இவனுக்கு ஏன்... நான் மற்றவரிடம் பேசினால், பழகினால் பிடிக்கவில்லை. ஒருவேளை நான் மறுபடியும் முட்டாள் மாதிரி எதிலாவது மாட்டிக் கொள்வேன் என்று நினைக்கிறானோ!

ம்... ம்... அப்படித்தான் இருக்கும். அப்புறம் என்னை வந்து காப்பாற்றுவது... அவன் வேலையாகி விடும். அது தான் எரிந்து விழுகிறான் போல... என நினைத்துக் கொண்டாள்.

அந்த நாள் முடிந்தது... அவனின் நினைவில்!

அன்று ஞாயிற்றுக்கிழமை.

எழுந்திருக்கும் பொழுதே அரவிந்தின் கல்யாணம் இன்றுதான் என்று சஞ்சய்க்கு ஞாபகம் வந்தது.

சஞ்சய் அவனின் ஸ்கூல் ஃபிரண்ட். நேரில் வந்து பத்திரிகை வைத்து விட்டுப் போனான். தாத்தா இறந்த பொழுது என்கூடவே இருந்து ஆறுதல் சொன்னவன்... என்னைத் தேற்றியவன்.

அதனால் நான் கண்டிப்பாக அவன் கல்யாணத் திற்குப் போக வேண்டும். டியூட்டி இன்று பார்க்க வேறு ஆளும் ஏற்பாடு செய்தாகி விட்டது. அதனால் எந்தப் பிரச் சனையும் வராது என நினைத்தபடியே எழுந்தான் அவன்.

"ஹாய் அங்கிள்! குட் மார்னிங்."

"குட் மார்னிங்... சஞ்சய்!"

"அங்கிள்! இன்னிக்கு என் ஃபிரண்ட் கல்யாணம். அதனால எனக்கு டிஃபன் வேண்டாம்."

"அப்படியா! நல்ல விஷயம்தான். போயிட்டு வா. ம்... ம்... நீதான் பிடி கொடுக்காம பேசறே... உன் கல்யாணத்தைப் பற்றி பேச்செடுத்தாலே..."

"ம்... அங்கிள்! காலையில வேற டாபிக் கிடைக் கலையா உங்களுக்கு?"

"நீ மனசில யாரையாவது வைச்சிண்டு இருக்கியா? வாயைத் திறந்து சொன்னாத்தானே தெரியும்."

"அதெல்லாம் இல்லை... அங்கிள்!"

"ம்... நேக்கென்னவோ நீ என்னை அந்நியமா நினைக்கிறியோன்னு மனசுக்குப் படறது..."

"அச்சோ... அங்கிள் அதெல்லாம் இல்லை. ஏதாவது இருந்தா உங்களுக்குத்தான் முதலில் தெரியும். புரிந்ததா... அதனால மனசைப் போட்டுக் குழப்பிக்காதீங்க..." என்றான் அவரைச் சமாதானப்படுத்தும் குரலில்.

"சரிடா... நான்... உன்னை நம்பறேன். கல்யாணம் எங்கே?"

"கொஞ்சம் தூரம்தான். குன்றத்தூர் கிட்ட..."

"ஓ! அப்ப போகவே ஒரு மணி நேரம் மேலே ஆகும்."

"ஆமாம் அங்கிள்! நான் குளிச்சிட்டுக் கிளம்பறேன்."

"சரிடா..."

சஞ்சய் குளித்துவிட்டு ஒரு டி-ஷர்ட்டும், நீல ஃபேண்ட்டும் அணிந்து கொண்டான்.



ரித்விகா தான் மஃப்டியில் இருந்த பொழுது தன்னை சுவாரசியமாகப் பார்த்தது அவன் நினைவுக்கு வந்தது.

'என்னிடம்... என்ன அட்ராக்ஷன் உள்ளது? அது என்னவென்று தெரிந்து கொள்ள மனம் துடிக்கிறது. அதற்குள் வந்துவிட்டான் அத்தை மகன். சே...' என்று பொருமியபடியே கிளம்பினான்.

குன்றத்தூரில் உள்ள அந்தத் திருமண மண்டபத்தை அடையும் பொழுது மணி ஏழு. காக்கிச் சட்டையில் இல்லாததால் எல்லோரும் இயல்பாகப் பயமின்றி அவனைப் பார்ப்பதை அவனால் உணர முடிந்தது.

மக்களுக்கு இன்னமும் போலீஸ் என்றால் பயம் போகவில்லை. தப்பு செய்பவர்களை மட்டுமே தண்டிக்க போலீஸ் உள்ளனர்... என்ற எண்ணம் மக்களுக்கு வரும் வரை இந்த நிலை மாறாது என நினைத்தபடியே கல்யாண மண்டபத்திற்குள் சென்றான்.

மணமகனின் அறைக்குள் நுழைந்தான். அவனைக் கண்டவுடன் அரவிந்த் ஆர்வமாக ஓடி வந்தான்.

"டேய்... என்னடா இவ்வளவு லேட்டா வர்றே?" - உரிமையாகத் தோளைத் தட்டினான்.

"ஸாரிடா... நைட் லேட்டாத் தூங்கினேன். அதுதான் காலையில கிளம்ப லேட்டாச்சு..."

"சரி... இப்பவாவது வந்தியே?"

"கங்கிராட்ஸ் அரவிந்த்."

"இட்ஸ் ஓ.கே.டா... உன்னால ஒரு வேலை ஆகணும்."

"என்னடா... சொல்..."

"நான் என் வுட்பிகிட்ட பேசவே இல்லைடா..."

"வாட்... நீ எந்த நூற்றாண்டில் இருக்க?"

"டேய்... என் வீட்டைப் பற்றித்தான் உனக்குத் தெரியுமே... ரொம்ப ஆர்தடாக்ஸ். இதெல்லாம் ஒத்துக் கொள்ள மாட்டாங்க..."

"அதுக்காக நீ எப்படிடா சும்மா இருந்தே? சே... சே... வெரி பேட்."

"அதான்டா இப்ப நித்யாகிட்ட பேசலாம்னு..."

"இப்பவாவது தோணிச்சே... போடா. போய் முதலில் பேசிட்டு வா."

"ம்... நான் இந்த உடையில் போக முடியாது. அதனால நீ கொஞ்ச நேரம் இந்தப் பட்டு வேஷ்டி, சட்டையில் இங்கேயே இரு. என் வீட்டில் உள்ளவர் களுக்குத் தெரியாமல் நான் அவளைப் பார்த்துப் பேசிவிட்டு வந்து விடுகிறேன்."

"அடப்பாவி... நான் போலீஸ்! என்னிடமே நீ இந்த மாதிரி ஒரு உதவியைக் கேட்கிறாய். உனக்கு ரொம்பத் தைரியம்தான்டா..."

"நீ என் நண்பன்டா... அப்புறம்தான் போலீஸ்!"

அதைக் கேட்டு சஞ்சய்யின் இதழ்களில் புன்னகை படர்ந்தது.

"சரிடா... நான் இங்கேயே இருக்கிறேன். ஆனால் உன் வீட்டில் உள்ளவர்கள் யாராவது வந்து விட்டால் என்ன செய்வது?"



"ம்... யாரும் வர மாட்டார்கள். எல்லோருமே கோவிலுக்குப் போய் இருக்கிறார்கள். பெண் வீட்டிலும் அதே மாதிரிதான்.... அதனால் நீ தைரியமாகத் தூங்குவது போல் படுத்து இரு."

"ம்... அப்படியே தூங்கிவிடப் போகிறேன்... நான்..."

"டேய்... சும்மா பேச்சுக்குச் சொன்னேன்டா..."

"இட்ஸ் ஓ.கே. சரி... நீ சீக்கிரம் கிளம்பு."

"இந்தாடா..." என்று தான் அணிந்திருந்த பட்டு வேஷ்டி, சட்டையை அவனிடம் கொடுத்தான் அரவிந்த்.

பட்டு சட்டை, வேஷ்டியில் தன்னைக் கண்ணாடியில் பார்த்தவனுக்கு... தான் ரொம்ப வித்தியாசமாக இருப்பது போல் தோன்றியது.

அரவிந்த் சொன்னபடி அங்கிருந்த கட்டிலில் படுத்தான் சஞ்சய். கட்டில் சுவர் அருகே இருந்தது. சுவரைப் பார்த்தபடி ஒருக்களித்துப் படுத்திருந்தான்.

அவன் அறையை நோக்கி, காலடிச் சத்தம் கேட்டது. அடக் கடவுளே! யாராக இருக்கும் இது... பேசாமல் தூங்குவது போல் பாவனை செய்ய வேண்டியதுதான்... என நினைத்தபடி கண்களை மூடிக் கொண்டான்.

"ரிகா... எனக்குப் பயம்மா இருக்கு..."

"ஏய்... பதட்டப்படாமல் வா. என்னையும் நீ பயமுறுத்துகிறாய்..."

"ம்... இந்த மாதிரி வேலை செய்து எனக்குப் பழக்கம் இல்லை."

...நான் மட்டும் ஏதோ இந்த ...தல் பதிந்த ...
வேலை செய்வது... என் தொழில் போல் சொல்கிறாய் நீ...

அட... இது ரித்விகாவின் குரல்தான். இந்த... அவளுக்கு என்ன வேலை? குசுகுசுவெனப் பேசிக் கொ...கிறார்களே... என்னவாக இருக்கும் என்று யோசித்து... கொண்டிருக்கும் பொழுதே காலடிச் சத்தம் மிக அருகில் கேட்டது.

ஒரு டவல் அவன் மூக்கருகே வந்தது. அவ... முகத்தை டவல் கொண்டு மூடியது ஒரு கரம். அந்த டவலில் மயக்க மருந்து இருப்பதை உணர்ந்தான் சஞ்சய். மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டு அசையாமல் இருந்தான்.

“ஏய்... மயக்கம் போட்டு விழுந்திட்டான் அவன்... அசைவே இல்லை. பார்... ஷாலு!”

“ஆமாம்... ரிகா!”

“சரி. அந்த டிராலியைத் தள்ளிக் கொண்டு வா. நான் இவனை பெட்ஷீட் கொண்டு முகம் தெரியாதபடி மூடி விடுகிறேன்.”

“சரி... ரிகா!”

டிராலி தள்ளும் சத்தம் அவனுக்குக் கேட்டது. என்ன திட்டம் இது? ஏன் அரவிந்தை டிராலியில் வைத்து யாருக்கும் தெரியாமல் தள்ளிக் கொண்டு போக நினைக்கிறார்கள் என யோசித்தபடியே படுத்திருந்தான் சஞ்சய்.

“இவனை எப்படித் தூக்குவது ஷாலு! ஆசாமி இவ்வளவு வெயிட்டா இருப்பான்னு நினைக்கலையே?”

பொங்கி வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டான் சஞ்சய்.



“வேற வழி இல்லை ரிகா! ஆளுக்கு ஒரு பக்கமாகத் தூக்கலாம். வேறு வழியில்லை.”

இருவரும் தலை ஒருவர், கால் ஒருவர் என்று தூக்க... அவர்கள் தூக்குவதற்கு வசதியாக தன் கனத்தை அவர்கள் மேல் ஒட்டுமொத்தமாகப் போடாமல் சமாளித்தான் சஞ்சய்.

“என்னடி இது... மலையைப் புரட்டினாப்பில இருக்கு ஷாலு!”

“ம்... இவன் மேல் அந்த நீள பெடெஸ்டல் ஃபேனை வைத்து... இன்னொரு பெட்ஷீட் போட்டு மூடு... ரிகா!”

“ஆமாம்... ஆள் வேறு பனைமர அளவு உயரமாக உள்ளான். காலெல்லாம் நன்றாக மூடி விடலாம்...” என்றபடியே அங்கிருந்த ஆள் உயர ஃபேனை அவன் மேல் வைத்தாள்.

காற்றாடியின் தலைப் பாகம் அவன் மூக்கில் உரச, பெட்ஷீட்டைத் தாண்டி தும்மல் வெளிப்பட்டு விடுமோ... என பயந்தபடி மூச்சை இழுத்துப் பிடித்தான் சஞ்சய்.

“ம்... அப்பாடா! எல்லாம் சரியாக இருக்கிறது. சீக்கிரம் வா. போகலாம்...”

“யாராவது கேட்டால் ஃபேன் ரிப்பேர்! சரி செய்யப் போகிறோம் என்று சொல்லலாம்.”

அவர்கள் பேசுவதை எல்லாம் கேட்டபடியே டிராலியில் படுத்திருந்தான் சஞ்சய். என்ன ஒரு தைரியம் இந்தப் பெண்களுக்கு... கல்யாண மண்டபத்தில் வந்து மணமகனைக் கடத்துகிறார்கள். பெண் சுதந்திரம் ரொம்ப அதிகமாகி விட்டது. அதுதான் இப்படிக் கொட்டமடிக்கிறார்கள்... எனக் கொந்தளித்தான் சஞ்சய்.

'ரித்விகாவிற்கும் அரவிந்திற்கும் என்ன சம்மந்தம் என்று புரியவில்லையே...! நிச்சயமாக ஏதோ விஷயம் இருக்கிறது. தானாகவே என்னிடம் மாட்டிக் கொண்டாள் ரித்விகா.

இந்த முறை அவளை விடப் போறதில்லை. ஒருவரைக் கடத்துவது சட்டப்படி குற்றம். அது கிரிமினல் குற்றம். அதில் ஈடுபட்டிருக்கிறாள் இவள். ரித்விகா... இந்த முறை நான் இரக்கப்படப் போவதில்லை உனக்கு...' - தீர்மானித்தான் சஞ்சய்.

## 16

அழகான
எல்லாமே
சில
நொடிகள்தான்
வாழ்கின்றன
..........
இயற்கையின்
படைப்பே
அப்படித்தானோ!
வானவில்
வண்ணத்துப் பூச்சி
ஒற்றை
ரோஜா
..........



அந்தப்
பட்டியலில்
ஏன் நீயும்
இணைந்தாய்
பெண்ணே!

"அப்பாடா... ஒரு வழியாக இவனைக் காரில் ஏற்றி விட்டோம்..."

"யெஸ்... ரிகா! நித்யாவிடம் சொல்லி விட்டாய்தானே!"

"ம்... இல்லை. அவள் கைபேசி தொடர்பு கொள்ளும் எல்லைக்கு வெளியே உள்ளது போல... அதே செய்தி திரும்பத் திரும்ப வருகிறது."

"ஓ... இந்நேரம்... கல்யாண வீட்டில் விஷயம் தெரிந்திருக்கும்தானே!"

"ம்... ஆமாம்."

"சரி... இப்ப இவனை என்ன செய்வது?"

"ம்... ஏதாவது ஒரு ஒதுக்குப்புறமான இடம் வந்தவுடன் அவனை உருட்டி விட்டு விடலாம்..."

"சே... வேண்டாம். இன்னும் கொஞ்ச நேரம் காரில் சவாரி செய்யலாம். அதற்குள் நித்யாவின் திருமணம் நின்று போய் விடும்."

"அது நடக்கவே நடக்காது!" என்று பின்னால் இருந்து பழக்கமான குரல் கேட்க... ரித்விகா அதிர்ந்து போனாள். அவள் கால் அனிச்சையாக பிரேக்கை அழுத்தியது.

'ரித்விகாவிற்கும் அரவிந்திற்கும் என்ன சம்மந்தம் என்று புரியவில்லையே...! நிச்சயமாக ஏதோ விஷயம் இருக்கிறது. தானாகவே என்னிடம் மாட்டிக் கொண்டாள் ரித்விகா.

இந்த முறை அவளை விடப் போறதில்லை. ஒருவரைக் கடத்துவது சட்டப்படி குற்றம். அது கிரிமினல் குற்றம். அதில் ஈடுபட்டிருக்கிறாள் இவள். ரித்விகா... இந்த முறை நான் இரக்கப்படப் போவதில்லை உனக்கு...' - தீர்மானித்தான் சஞ்சய்.

## 16

அழகான
எல்லாமே
சில
நொடிகள்தான்
வாழ்கின்றன
..........
இயற்கையின்
படைப்பே
அப்படித்தானோ!
வானவில்
வண்ணத்துப் பூச்சி
ஒற்றை
ரோஜா
..........



அந்தப்
பட்டியலில்
ஏன் நீயும்
இணைந்தாய்
பெண்ணே!

"அப்பாடா... ஒரு வழியாக இவனைக் காரில் ஏற்றி விட்டோம்..."

"யெஸ்... ரிகா! நித்யாவிடம் சொல்லி விட்டாய்தானே!"

"ம்... இல்லை. அவள் கைபேசி தொடர்பு கொள்ளும் எல்லைக்கு வெளியே உள்ளது போல... அதே செய்தி திரும்பத் திரும்ப வருகிறது."

"ஓ... இந்நேரம்... கல்யாண வீட்டில் விஷயம் தெரிந்திருக்கும்தானே!"

"ம்... ஆமாம்."

"சரி... இப்ப இவனை என்ன செய்வது?"

"ம்... ஏதாவது ஒரு ஒதுக்குப்புறமான இடம் வந்தவுடன் அவனை உருட்டி விட்டு விடலாம்..."

"சே... வேண்டாம். இன்னும் கொஞ்ச நேரம் காரில் சவாரி செய்யலாம். அதற்குள் நித்யாவின் திருமணம் நின்று போய் விடும்."

"அது நடக்கவே நடக்காது!" என்று பின்னால் இருந்து பழக்கமான குரல் கேட்க... ரித்விகா அதிர்ந்து போனாள். அவள் கால் அனிச்சையாக பிரேக்கை அழுத்தியது.

நல்ல காலம்... அந்தச் சாலையில் அவள் காரின் பின்புறம் எந்த வண்டியும் வராததால் எந்தச் சேதமும் அவள் வண்டிக்கு ஏற்படவில்லை.

காரின் பின்புறம் திரும்பிப் பார்த்தவள் திடுக்கிட்டாள். காரணம் பெட்ஷீட்டை உதறி விட்டுக் காரின் பின் சீட்டில் இருந்தான் சஞ்சய்.

"சஞ்சய்! நீ... நீங்க... எப்படி?" – திக்கித் திணறினாள் ரித்விகா.

"ம்... முதலில் வண்டியைப் பக்கத்தில் உள்ள போலீஸ் ஸ்டேஷனில் நிறுத்து."

"இ... இல்லை. வந்து... நாங்கள் அரவிந்தைத்தான் கடத்த வந்தோம் ஸார்... ப்ளீஸ்! எனக்குத் திருமணம் வேறு நிச்சயம் ஆகியிருக்கிறது!" – அழுது விடும் குரலில் ஷாலினி புலம்பினாள்.

"ஆமாம்... ப்ளீஸ்! ஷாலினிக்கு எதுவும் தெரியாது. அவளை நான்தான் இதில் ஈடுபடுத்தினேன். அதனால அவளை விட்டு விடுங்கள். நான்... நான்தான் இந்த ஐடியாவைக் கொடுத்தது."

"சரி... நீ சொல்வதை நான் ஏற்றுக் கொள்கிறேன்... ஷாலினி! அதுதானே உன் பெயர்!"

"ஆ... ஆமாம் ஸார்."

"சரி... உன்னை அப்புறமாகத் தேவைப்பட்டால் நான் விசாரிப்பேன். புரிந்ததா... உன்னை இந்த பஸ் ஸ்டாண்ட் அருகே இறக்கி விடலாமா?"

"சரிங்க ஸார். ஆ... ஆனால்..." என்று இழுத்தாள்.



"என்ன விஷயம்? சீக்கிரம் சொல்."

"ரிகா... பாவம் ஸார். அவளை விட்டு விடுங்கள்."

"ம்... ஒரு போலீஸ் உயர் அதிகாரியைக் கடத்துவது எவ்வளவு பெரிய தப்பு என்று படித்தவர்களான உங்களுக்குத் தெரியும். அதனால் அவளுக்கு அந்தத் தண்டனை கண்டிப்பாகக் கிடைக்கும்.

நியாயப்படி பார்த்தால் நீங்களும் இதில் இன்வால்வ் ஆகியிருக்கிறீர்கள். அதனால்... உங்களுக்கும்..." என்று அவன் முடிக்கும் முன்பு ரித்விகா குறுக்கிட்டாள்.

"ஷாலு... நீ பேசாமல் இறங்கிப் போ."

"ஏய்... நீ மட்டும் எப்படி... எப்படி இவரைச் சமாளிப்பாய்?"

"ம்... உங்க ஃபிரண்டிற்கு அது பழக்கம்தான். அதனால அவங்க அதை மேனேஜ் செஞ்சுப்பாங்க..." என்றான் சஞ்சய் காட்டமான குரலில்.

அருகில் இருந்த பஸ் ஸ்டாண்டில் காரை நிறுத்தினாள்.

"ஷாலு! இறங்கு இங்கே..."

"இல்லை... ரிகா! உன்னை எப்படி?"

"சீக்கிரம் போ ஷாலு! ஐ கேன் மேனேஜ்..."

பெருமூச்சுடன் காரிலிருந்து இறங்கினாள் ஷாலினி. டிரைவர் சீட்டில் அமர்ந்திருந்த ரித்விகாவை, அருகே உள்ள சீட்டில் உட்காரும்படி உத்தரவிட்டான் சஞ்சய்.

ஏதும் சொல்லாமல் அவன் கட்டளைக்குக் கீழ் ...ள் அவள். கார் அ... ...மானது. சீறிப் பாய்ந்தது.

"ஸோ... எதுக்கு அரவிந்தைக் கடத்தத் திட்டம் போட்ட?"

"நித்யாவிற்கு இந்தத் திருமணத்தில் இஷ்டம் இல்லை."

"ஏன்?"

"அது... உங்களுக்குத் தேவையில்லாதது.."

"ஷட் அப்! கேட்பதற்கு மட்டும் பதில் சொல். ஒரு கல்யாண வீட்டில் புகுந்து மாப்பிள்ளையைக் கடத்தும் அளவுக்கு முன்னேறி விட்டாய் நீ...

சே! உனக்கு வெட்கமாக இல்லை. இந்த மாதிரி கிரிமினல் வேலை எல்லாம் செய்யறதுக்கு?"

"இல்லை... நித்யாவைப் பார்க்கப் பாவமாக இருந்தது. அதோடு நான் இரண்டு பேருக்குமே நல்லதுதான் செய்தேன்."

"நீ... திருந்தவே மாட்ட... உன்னை இப்படி எல்லாம் கையாள்வது தப்பு... தெரிந்த பெண் என்று கொஞ்சம் இரக்கம் காட்டினால்... நீ ஓவராகப் பேசுகிறாய். நான் உன்னை அரெஸ்ட் செய்யப் போகிறேன்."

"நான் நினைத்தது... சரிதான்!"

"என்ன நினைத்தாய்?"

"ம்... நீங்க ஒழுங்கா எந்தக் கேஸும் டீல் செய்யற மாதிரி எனக்குத் தெரியலை... சென்னையில் குற்ற விழுக்காட்டைக் குறைக்க உருப்படியா ஏதேனும் செய்வீர்கள் என்று பார்த்தால்... அப்பாவிகளை எல்லாம் ஏதோ காரணம் காட்டி குற்றவாளி என்று முத்திரை குத்தி... சிறையில் தள்ளுவதிலேயே குறியாக இருக்கிறீர்கள்..."



அவன் பதில் சொல்ல வாயைத் திறந்தான். அதற்குள் அவள் கைபேசி சிணுங்கியது.

திரையில் 'நித்யா அழைக்கிறாள்!' என்று ஒளிர்ந்தது.

"அச்சோ... பாவம். நித்யாதான்!"

"ம்... ஸ்பீக்கரில் போடு."

"ஆமாம். இதே வேலை..." என்று முணுமுணுத்த படியே கைபேசியை ஸ்பீக்கரில் போட்டாள் ரித்விகா.

"சொ... சொல்லு நித்யா! ஸாரி ஒரு பெரிய தப்பு நடந்திடுச்சு..."

"ம்... நீ அரவிந்தைக் கடத்தலை. அதுதானே நடந்தது... நீ சொல்ல வந்தது இந்த விஷயம்தானே!"

"ஆ... ஆமாம் நித்யா!"

"நீ செய்தது... ஐ மீன் அரவிந்தைக் கடத்தாதது நல்லதுக்குத்தான்..."

"ஏய்... என்ன சொல்றே நீ?"

"ஆமாம்... ரித்விகா! அரவிந்த் வீட்டில் உள்ளவர்கள் ரொம்பக் கட்டுப்பெட்டி. ஆனால் அவர் அப்படி இல்லை. அவர்... என்னிடம் ஒரு மணி நேரம் முன்பு பேசினார்...

பெண் பார்க்க வந்த பொழுது பேச முடியாததற்கு மன்னிப்புக் கேட்டார். என்னை அவருக்கு ரொம்பப் பிடித்து விட்டதாம். ஆனால் திருமணம் ஆகும் வரை வீட்டுப் பெரியவர்கள் பேச்சிற்கு மதிப்புக் கொடுத்து என்னைத் தொடர்பு கொள்ளாமல் இருந்தாராம்.

[illegible] …துக்கு இதமாக இருந்தது. அதோடு திருமணத்திற்குப் பின்பு நாங்கள் எப்படியும் பெங்களூரில்தான் இருக்கப் போகிறோம்.

அதனால் அவர் பேசப் பேசத்தான் எனக்கு நான் முட்டாள்தனமாகச் செய்ய நினைத்தது எல்லாமே புரிந்தது. அதை எல்லாமே நான் அவரிடம் சொல்லிவிட்டேன்…"

"காட்! என்ன இது நித்யா? நீ… நீ சொல்வதெல்லாம் நிஜமா?" - சுருதி இறங்கியது, அவள் குரலில்.

"ஆமாம் ரித்விகா! அப்புறம்தான் அவருக்குப் புரிந்தது. நீங்கள் தெரியாமல் அவர் ஃபிரண்ட்டை பட்டுச் சட்டை, வேஷ்டியில் இருந்ததால் கடத்தி விட்டீர்கள் என்று…"

"யெஸ் நித்யா! நாங்கள்… நாங்கள் தெரியாமல்தான் செய்து விட்டோம்!" என்றாள், மெல்லிய குரலில்.

"ம்… நீ உனக்குத் தெரியாமல் எனக்கு நல்லது செய்திருக்கிறாய். ரிகா… உனக்கு எப்படி நன்றி சொல்வது என்றே தெரியவில்லை."

"இல்லை… நித்யா! எனக்கு எப்படி இதெல்லாம் நடக்கிறது என்று புரியவில்லை. நான் ஒன்று நினைக்கிறேன். ஆனால் அது வேறு விதமாக மாறி விடுகிறது."

"ஸாரி ரிகா! என்னால உனக்கு நிறைய சிரமம். நான் எவ்வளவு முட்டாள்தனமாக யோசித்திருக்கிறேன் என்று எனக்கு இப்பொழுதுதான் புரிகிறது."

"ம்… உனக்கு மட்டும் இல்லை… எனக்கும் இது இப்பொழுதுதான் புரிகிறது. ஸாரி… உன் கல்யாணத்திற்கு நான் வாழ்த்துக் கூட சொல்லலை… ஹாப்பி மேரீட் லைஃப் நித்யா!"

"தேங்க்ஸ். அப்புறம்… இரு… நான் அவரிடம் கொடுக்கிறேன். நீ பேசு!"

"ஏய்… இல்லை. நான்…" என்று அவள் முடிப்பதற்குள் அரவிந்த் குரல் ஸ்பீக்கர் மூலம் ஒலித்தது.

"ஹலோ… ரொம்பத் தேங்க்ஸ்! நீங்க என்னைக் கடத்தறதுக்குப் பதிலா என் ஃபிரண்டைக் கடத்தினதுக்கு…"

ரித்விகாவிற்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. அவமானத்தால் அவள் முகம் சிவந்தது.

"டேய் அரவிந்த்! உனக்கு என் நினைப்பு துளிக்கூட இல்லை போல…" என்றான் சஞ்சய்.

"ஏய்… சஞ்சய் உன்னை… நீ எப்படிடா அங்கே இருக்க… நீ இன்னும் மயக்கத்தில இருப்பன்னு இல்ல நான் நினைச்சேன்…"

"ஆஹா… என்ன ஒரு பாசம்டா… உனக்கு நண்பன் மேல… ஒரு போலீஸ் அசிஸ்டெண்ட் கமிஷனர் என்ற நினைப்பு உனக்குக் கொஞ்சம் கூட இல்லை. உன் கல்யாணம் முடிந்த பிறகு என்னைக் கண்டு கொள்ள வில்லை…"

"இல்லைடா… அப்படி எல்லாம் இல்லை. உன் கைபேசி மூலம் உன்னைத் தொடர்பு கொள்ள முயன்றேன். ஆனால் தொடர்பு எல்லைக்குள் நீ இல்லை… என்ற செய்தி வந்து கொண்டே இருந்தது."

"ஆமாம்டா… நீதான் இப்ப வேறு ஒரு 'தொடர்பு எல்லைக்குள்' இருக்கிறாயே! கல்யாணம் என்ற பந்தம் வந்து

அவர் பேசியது ரொம்ப மனதுக்கு இதமாக இருந்தது ரித்விகா! அதோடு திருமணத்திற்குப் பின்பு நாங்கள் எப்படியும் பெங்களூரில்தான் இருக்கப் போகிறோம்.

அதனால் அவர் பேசப் பேசத்தான் எனக்கு நான் முட்டாள்தனமாகச் செய்ய நினைத்தது எல்லாமே புரிந்தது. அதை எல்லாமே நான் அவரிடம் சொல்லிவிட்டேன்..."

"காட்! என்ன இது நித்யா? நீ... நீ சொல்வதெல்லாம் நிஜமா?" - சுருதி இறங்கியது, அவள் குரலில்.

"ஆமாம் ரித்விகா! அப்புறம்தான் அவருக்குப் புரிந்தது. நீங்கள் தெரியாமல் அவர் ஃபிரண்ட்டை பட்டுச் சட்டை, வேஷ்டியில் இருந்ததால் கடத்தி விட்டீர்கள் என்று..."

"யெஸ் நித்யா! நாங்கள்... நாங்கள் தெரியாமல்தான் செய்து விட்டோம்!" என்றாள், மெல்லிய குரலில்.

"ம்... நீ உனக்குத் தெரியாமல் எனக்கு நல்லது செய்திருக்கிறாய். ரிகா... உனக்கு எப்படி நன்றி சொல்வது என்றே தெரியவில்லை."

"இல்லை... நித்யா! எனக்கு எப்படி இதெல்லாம் நடக்கிறது என்று புரியவில்லை. நான் ஒன்று நினைக்கிறேன். ஆனால் அது வேறு விதமாக மாறி விடுகிறது."

"ஸாரி ரிகா! என்னால உனக்கு நிறைய சிரமம். நான் எவ்வளவு முட்டாள்தனமாக யோசித்திருக்கிறேன் என்று எனக்கு இப்பொழுதுதான் புரிகிறது."

"ம்... உனக்கு மட்டும் இல்லை... எனக்கும் இது இப்பொழுதுதான் புரிகிறது. ஸாரி... உன் கல்யாணத்திற்கு



நான் வாழ்த்துக் கூட சொல்லலை... ஹாப்பி மேரீட் லைஃப் நித்யா!"

"தேங்க்ஸ். அப்புறம்... இரு... நான் அவரிடம் கொடுக்கிறேன். நீ பேசு!"

"ஏய்... இல்லை. நான்..." என்று அவள் முடிப்பதற்குள் அரவிந்த் குரல் ஸ்பீக்கர் மூலம் ஒலித்தது.

"ஹலோ... ரொம்பத் தேங்க்ஸ்! நீங்க என்னைக் கடத்தறதுக்குப் பதிலா என் ஃபிரண்டைக் கடத்தினதுக்கு..."

ரித்விகாவிற்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. அவமானத்தால் அவள் முகம் சிவந்தது.

"டேய் அரவிந்த்! உனக்கு என் நினைப்பு துளிக்கூட இல்லை போல..." என்றான் சஞ்சய்.

"ஏய்... சஞ்சய் உன்னை... நீ எப்படிடா அங்கே இருக்க... நீ இன்னும் மயக்கத்தில இருப்பன்னு இல்ல நான் நினைச்சேன்..."

"ஆஹா... என்ன ஒரு பாசம்டா... உனக்கு நண்பன் மேல... ஒரு போலீஸ் அசிஸ்டெண்ட் கமிஷனர் என்ற நினைப்பு உனக்குக் கொஞ்சம் கூட இல்லை. உன் கல்யாணம் முடிந்த பிறகு என்னைக் கண்டு கொள்ள வில்லை..."

"இல்லைடா... அப்படி எல்லாம் இல்லை. உன் கைபேசி மூலம் உன்னைத் தொடர்பு கொள்ள முயன்றேன். ஆனால் தொடர்பு எல்லைக்குள் நீ இல்லை... என்ற செய்தி வந்து கொண்டே இருந்தது."

"ஆமாம்டா... நீதான் இப்ப வேறு ஒரு 'தொடர்பு எல்லைக்குள்' இருக்கிறாயே! கல்யாணம் என்ற பந்தம் வந்து

விட்டது. உனக்கு இனிமேல் என் நினைப்பு எங்கே வரப் போகிறது!"

"டேய்... ப்ளீஸ்... அப்படி எல்லாம் சொல்லாதே!"

"ம்... சரி சரி... எனக்கு ஒரு முக்கியமான வேலை இருக்கிறது. உன்னிடம் அப்புறம் பேசுகிறேன்."

"டேய் கோபமாடா... ஸாரிடா!"

"இல்லைடா... நான் என்னைக் கடத்தியவர்களுக்குத் தண்டனை கொடுக்க வேண்டாமா? ஒரு போலீஸ் உயர் அதிகாரியை சும்மா ஜஸ்ட் லைக் தட் கடத்த முடியாது... கடத்துவது எவ்வளவு பெரிய தப்பு என்று புரிய வைக்க வேண்டும்..."

"ஸார்... ப்ளீஸ்! ரித்விகாவை எதுவும் செய்து விடாதீர்கள்..." - கெஞ்சினாள் நித்யா.

"சிஸ்டர் ப்ளீஸ்! நீங்க இதில் தலையிடாதீங்க. தப்பா நினைச்சுக்காதீங்க..."

"டேய்... சஞ்சய்! கொஞ்சம் கருணை காட்டு. எங்களுக்கும் இந்தக் கடத்தல் குற்றத்தில் பங்கு இருக்கிறது. அதனால் நீ தண்டனை தருவதாக இருந்தால் எங்களுக்கும் தர வேண்டும்."

"ஆஹா... மனைவி மேல் என்ன கரிசனம் உனக்கு! இப்பவே அவங்க சொல்றபடி கேட்கிறே..."

"டேய்... ப்ளீஸ்! சொல்றதைக் கேளுடா!"

"பை... அரவிந்த்! இன்னும் கொஞ்ச நேரத்திற்கு எங்களைத் தொல்லை செய்ய வேண்டாம். நான் ரித்விகாவை விசாரிக்க வேண்டும். நான் சொல்வதைப்

புரிந்து கொள்வாய் என்று நம்புகிறேன்!

கைபேசியில் உள்ள சிவப்பு பட்டனை அழுத்தினான்.

காரை ஒரு ஓரமாக நிறுத்தினான் சஞ்சய். ரித்விகாவிற்கு அவன் முன்னால் முட்டாள் போல் நிற்பதற்கு அவமானமாக இருந்தது. பேசாமல் இருந்தாள் அவள்.

"இறங்கு காரிலிருந்து..." - உறுமினான் அவன்.

"எ... எங்கே போறோம்?"

"பேசாமல் வா..."

அவள் சுற்றும் முற்றும் பார்த்தாள். ஒரு ஈ, காக்கா கூட அந்தத் தெருவில் இல்லை. இங்கிருந்து தப்பிக்க வழியே இல்லை. அதோடு தப்பித்தாலும் மீண்டும் இவனிடம் மாட்டிக் கொள்வோம் ஃபிளாட்டில்... அதனால் இவனிடம் பேசித்தான் இதற்குத் தீர்வு காண வேண்டும்.

ஒரு மண்டபம் போன்ற இடம் அங்கே இருந்தது. கொஞ்சம் பாழடைந்து இருந்த அந்த மண்டபத்திற்குள் சஞ்சய் நுழைந்தான்.

அந்த மண்டபத்திற்குள் பயத்துடன் அவனைப் பின்தொடர்ந்தாள் ரித்விகா. முட்கள் நிறைந்த புதர்கள் அங்கே இருந்தன.

அவள் பயந்தபடியே மண்டபத்தை மேலும் கீழும் நாலாபுறமும் பார்த்தாள். அவள் விழிகள் சஞ்சய்யின் முகத்தில் பயத்துடன் பதிந்தது.

"இ... இங்கே எதுக்கு அழைச்சிண்டு வந்தீங்க?"

"ம்... இந்த இடத்தில் நீயும் நானும் ஓடிப் பிடிச்சு விளையாட..."

"விளையாடாதீங்க..."

"நான் யார் உன்னுடன் விளையாட? நான் என்ன உன் அத்தை மகனா என்ன!"

"நான் வீட்டுக்குப் போக வேண்டும்."

"ஓ... அத்தை மகன் ஞாபகம் வந்து விட்டதா மேடமிற்கு..."

அவளுக்கு அவனைச் சீண்ட வேண்டும் என்று தோன்றியது.

"யெஸ்... அவன் ரொம்ப டீஸண்ட் டைப். ஐ மிஸ் ஹிம்..."

சஞ்சய் முகம் கோபத்தால் இறுகியது.

# 17

உண்மைகளின்
கசப்பை
மறந்து
...........
பொய்மைகளின்
ஜாலத்தில்
மயங்கி
...........
கோபத்தின்
தீயில்
பொசுங்கி
...........



நான்
யார்
என்று
தேடிக்
கொண்டு
இருந்தபொழுது
நீ
வந்தாய்
பதிலாக!

அப்பொழுது சடச்சடவென வானம் பெரிய இடியுடன் அழத் தொடங்கியது... மழை ரூபத்தில். கண்களை இறுக மூடிக் கொண்டாள் ரித்விகா.

அவள் உடல் நடுங்கியது. எப்படி அவள் சஞ்சய்யின் கை வளையத்தினுள் நுழைந்தாள் என்று அவளுக்கே தெரியவில்லை.

இன்னொரு இடி பலத்த சத்தத்துடன் வெடிக்க... அவனை இறுக அணைத்துக் கொண்டாள் ரித்விகா. அவன் இதழ்கள் அவள் உதடுகளைக் கோபத்துடன் கவ்வின.

"என்னை உன் அத்தை மகன்... என்று நினைத்துக் கொண்டு அணைத்தாயா!" என்றவன் அவள் முகத்தில் கோபமாக உதடுகளைப் பதித்தான்.

அவள் உடல் கூசியது. அவன் பிடியிலிருந்து விலக முயன்றாள். ஆனால் அவன் கைவிரல்கள் அத்துமீறத் தொடங்கின.

"ம்... நான் இப்படித்தான் இருப்பேன்... இன்லைவ்டா உன்னால் என்ன செய்ய முடியும்... என்னை?" என்றபடியே தன் பிடியை இறுக்கினான் சஞ்சய்.

"இந்த மாதிரி நடந்து கொள்ள உங்களுக்கு அவமானமாக இல்லையா! மக்களைப் பாதுகாக்கும் பொறுப்புள்ள பதவியில் இருக்கும் நீங்கள் இந்த மாதிரி நடந்து கொள்ளலாமா?

நீங்களே தவறு செய்யலாமா? செய்தால் நான்... நான் என்ன செய்ய முடியும்! நீங்கள் உங்கள் வலிமையை என்னிடம் காட்டினால்... நான் தோற்றுதான் போவேன்.

ஒதுக்குப்புறமான ஒரு இடத்திற்கு அழைத்து வந்து பெண்களைத் தங்கள் ஆசைக்குப் பலியாக்கும் ரவுடிகளுக்கும் உங்களுக்கும்... வித்தியாசம் ஏதுமில்லை சஞ்சய்!" என்றாள், மெல்லிய குரலில் ரித்விகா.

சஞ்சய் சட்டென அவளை விலக்கினான். அவள் முகத்தைப் பார்த்தான். ஒரு அடிபட்ட பறவையின் நினைவு அவன் மனதை ஆக்கிரமித்தது.

அவள் சொன்னதெல்லாம் சாட்டையடி போல் அவனுக்கு வலித்தது. 'ஒரு சின்னப் பெண் சொல்ல வேண்டிய அளவுக்கு என் நிலைமை கீழிறங்கிப் போய் விட்டதே! ஏன் இவளிடம் இப்படி நடந்து கொண்டேன்... நான்! சே... நான் செய்தது எவ்வளவு பெரிய தப்பு...' என்று அவன் மனம் அவனைப் பழித்தது.

தன் சட்டைப் பையில் இருந்த சிகரெட் பாக்கெட்டில் இருந்து ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தான். எப்பொழுதாவது சிகரெட் பிடிக்கும் பழக்கம் அவனுக்கு உண்டு.



கிரிமினல் குற்றவாளிகளைப் பிடிப்பதற்கு முன்பு பிளான் செய்யும்பொழுது... அவன் சிகரெட் பிடிப்பதுண்டு. ஆனால் ஒரு சின்னப் பெண் முன் தோற்றுப் போய்... என்ன செய்வது என்று புரியாமல் திகைத்துப் போய் நின்றான் அவன்.

அவன் யோசனையில் இருக்கிறான் என்று அவளுக்குப் புரிந்தது. அவன் தனக்கு முதுகைக் காட்டியபடியே புகை பிடிப்பதை அவள் கவனித்தாள்.

அவனை இந்த மாதிரி சூழலில் பார்க்காததால் அவள் என்ன செய்வது என்று புரியாமல் குழம்பினாள்.

அவனிடம் தான் அப்படிப் பேசி இருக்கக் கூடாதா... மனதினுள் போராட்டம் தொடர்ந்தது.

புயலுக்குக் கலங்காத சஞ்சய்... ஒரு பூவின் முன் கலங்கி நின்றான்.

புயலால் வீழ்த்தப்படாத அவன் பூவால் வீழ்ந்தான்.

சிகரெட் கையைச் சுட்டவுடன் சுயஉணர்வு அடைந்தான் அவன். ஒரு பெருமூச்சு அவனை அறியாமல் பிறந்தது. அவள் முகத்தைப் பார்க்க அவமானமாக இருந்தது.

"வா... போகலாம்!" என்றான் அவளைப் பார்க்காமலே.

"ம்... தேங்க்ஸ்!"

"எதற்கு?"

"என்னைப் புரிந்து கொண்டதற்கு..."

"ம்... இல்லை. என்னை நான் புரிந்து கொண்டேன். நான்தான் உனக்கு நன்றி சொல்லணும்... இனி என்னால்

உனக்கு எந்தத் தொந்தரவும் ஏற்படாது. ஐயாம் ஸாரி..." என்றான் தலை குனிந்தபடி.

அவள் மனம் நெகிழ்ந்தது. தன் மேலேயே அவளுக்குக் கோபம் வந்தது. நான் இவன் அண்மையை விரும்புகிறேன். ஏன்... இது என்னுள் நிகழ்ந்தது?

என் மேல் தவறு இருக்கும் பொழுது, நான் அவனை மட்டும் குறை சொல்லலாமா? இது தப்புதானே... உள்ளுக்குள்ளே அழுதாள். உடைந்து போனாள் அவள்.

இதுவரை யாரிடமும் அனுபவித்திராத புதிய உணர்வு எப்படி இவனிடம் ஏற்படுகிறது? இவனை முதல் முறையாகச் சந்தித்ததிலிருந்து நான் இப்படித்தான் உணர்கிறேன்.

காரினுள் அமர்ந்தாள் ரித்விகா. மனம் அமைதி இல்லாமல் கொந்தளித்துக் கொண்டிருந்தது. அடுத்த ஒரு மணி நேரம் ஒரு கனத்த மௌனம் அந்த இடத்தை ஆக்கிரமித்தது.

நான் உங்களைச் சீண்டத்தான் ப்ரணேஷைப் பற்றிப் பேசினேன்... என்று கத்த வேண்டும் போல் தோன்றிய உணர்வை அடக்கினாள் ரித்விகா.

"இறங்கு... ரித்விகா!"

"ஓ... வீடு வந்துவிட்டதா?"

"ம்... யெஸ்."

"நீங்க வரலையா?"

"இல்லை..."

"ஓ... வேலை இருக்கிறதா? யூ லுக் டயர்ட்... ரெஸ்ட் எடு!" என்று அவள் முடிக்கும் முன்பு படபடத்தான் அவன்.



"ஜுக்... என்னைப் பற்றி உனக்கு ஏன் அக்கறை? சும்மா... நடிக்காதே! போ... போய் உன் ப்ரணேஷுடன்... ஈஸண்டாக டைம் ஸ்பெண்ட் செய். போ... போ இங்கிருந்து...

மனுஷனை நிம்மதியா இருக்க விடறது இல்லை... சே! சரியான தொல்லை..." என்று கத்தினான்.

அவள் கண்கள் கலங்கின. சட்டெனக் காரிலிருந்து வேகமாக இறங்கினாள்.

ஏதும் சொல்லாமல் கடகடவென நடக்கத் தொடங்கினாள்... லிஃப்ட்டை நோக்கி.

சஞ்சய் தன்னை ப்ரணேஷுடன் இணைத்துப் பேசுவது அவளுக்கு எரிச்சலை மூட்டியது.

மழை பெய்து முடிந்திருந்ததை அறிவித்தது அங்கு தேங்கியிருந்த தண்ணீர்க் குட்டைகள். காரில் இருந்தபடியே அவள் நடந்து போவதைப் பார்த்தபடி இருந்தான் அவன்.

அவள் சென்ற பின்பு அந்த இடம் சூனியமாக இருந்தது... அவன் மனதைப் போல!

**"எ**ன்னடி! கல்யாணம் நன்னா நடந்ததா?" மாலதி கேட்டது காதில் விழவில்லை ரித்விகாவிற்கு.

"ரிகா! இந்தப் புடவையில் ரொம்ப அழகா இருக்கே... நம் கல்யாணத்துக்கு அப்புறம் மாடர்ன் டிரெஸ்ஸை மூட்டைக் கட்டி வைச்சிடு..." என்றான் ப்ரணேஷ்.

தன் உடை விஷயத்தில் யாரும் தலையிடுவது ரித்விகாவிற்குப் பிடிக்காது. ப்ரணேஷ் உடை பற்றிச் சொன்னது அவளுக்குக் கோபத்தை வரவழைத்தது.

"ஓக்... டிரஸ் செய்யறது என்னோட பெர்சனல் விஷயம். இதில் யார் மூக்கை நுழைத்தாலும் எனக்குப் பிடிக்காது. அப்புறம்... சும்மா... கல்யாணம் அது... இதுன்னு கனவு காணாதீங்க. நான் அதைப் பற்றி... உங்களைப் பற்றி... எதுவும் யோசிக்கக் கூட இல்லை!" - பட்டெனத் தேங்காய் உடைப்பது போல் சொல்லி விட்டு அங்கிருந்து தன் அறையை நோக்கி நடந்தாள் அவள்.

ப்ரணேஷ் முகத்தில் அதிர்ச்சி ரேகைகள் தெரிந்தன. ப்ரணேஷ் தன் வருங்கால மனைவி எப்படி எல்லாம் இருக்க வேண்டும் என்ற கனவுகளை வளர்த்திருந்தான்.

காலையில் எழுந்து ஈரத் துண்டைத் தலையில் கட்டிக் கொண்டு... புடவையில் அவனைக் காப்பி டம்ளருடன் எழுப்ப வேண்டும். அவன் சொல்வதைக் கேட்க வேண்டும். அவனைக் கேட்ட பின்புதான் எல்லா முடிவுகளையும் எடுக்க வேண்டும். அவனைத் தவிர மற்ற ஆண்களுடன் அநாவசியமாகப் பேசக் கூடாது.

ஆனால் வேலைக்குப் போகலாம். போனால்தான் ஃபினான்ஷியல் ஸ்டேட்டஸ் உயரும். சம்பளப் பணத்தை அவனிடம் கொடுத்து விட வேண்டும். தன் தேவைக்கு அவனிடம் கேட்டுப் பணம் வாங்க வேண்டும்.

அவனுக்குப் பிடித்ததைச் சமைத்துப் போட வேண்டும். டெல்லியில் அந்த மாதிரி பெண்கள் - தென்னிந்தியப் பெண்கள் கிடைப்பது ரொம்ப கஷ்டம். அதனால்தான் உறவு முறையில் மட்டுமே இது சாத்தியம் என்று எண்ணினான். அவன் அம்மா அவனுக்கு அடித்த வேப்பிலை வேறு ரித்விகாவைப் பற்றிய கனவுகளை வளர்க்கச் செய்தது.



ஆனால் ரித்விகா அதற்கெல்லாம் நேர்மாறாக துளிக்கூட சம்பந்தம் இல்லாமல் இருந்தாள். ப்ரணேஷிற்குப் பயம் பிடித்துக் கொண்டது.

இப்பவே இவள் இப்படி இருக்கிறாளே... திருமணத்திற்குப் பின்பு எப்படி இருப்பாள்? ஆனால் திருமணம் செய்து கொள்ளும் எண்ணம் அவளுக்கு இருப்பது போல் தெரியவில்லையே... குழம்பினான் அவன்.

சரி... விட்டுப் பிடிக்கலாம். ரித்விகாவின் ப்ளஸ் பாயிண்ட் அவளின் அழகு. அதற்காக மற்ற விஷயங்களைச் சகித்துக் கொள்ள முடியுமா... தெரியவில்லை.

யோசிக்கத் தொடங்கினான் அவன். அறையினுள் நுழைந்த ரித்விகாவிற்குக் கோபம் கட்டுக்கடங்காமல் காட்டாறு போல் பொங்கியது.

இந்த ப்ரணேஷ் வந்த பின்பு இன்று என்னிடம் முதல் முறையாக நன்றாக வாங்கிக் கட்டிக் கொண்டான். இனி... என்னிடம் அச்சுபிச்சுத்தனமாக உளற மாட்டான் என்று நினைக்கிறேன்.

ஜன்னல் வழியாக வெளியே பார்த்தாள். மழை லேசாகத் தூறத் தொடங்கியது. ஒரு இடிச் சத்தம் வேகமாகக் கேட்டது. சட்டெனக் கண்களை இறுக மூடிக் கொண்டாள் ரித்விகா.

இடி இடிக்கும் பொழுதெல்லாம் சஞ்சய்யின் நினைவு அவளை அறியாமல் அவள் மனதில் படர்ந்தது. தான் பயந்து போய் அவன் அணைப்பில் இருந்ததை அவள் மனம் சுகமாக அசை போட்டது.

இதுவரை இந்த மாதிரியான எண்ணம் என் மனதில் தோன்றியதே இல்லையே! என்ன காரணத்தினால் சஞ்சய்... சிடுமூஞ்சி சஞ்சய் மேல் எனக்கு ஈர்ப்பு ஏற்படுகிறது.

தன்னையே கேட்டுக் கொண்டாள். எனக்கு அவன் மேல் ஈடுபாடு இருக்கிறது.... இதற்குப் பெயர்தான் காதலா!

அதனால்தான் அவன் என்னை ப்ரணேஷுடன் இணைத்துப் பேசும் பொழுது என் மனம் தவித்ததோ... ஆராய்ச்சியில் ஈடுபட்டாள் ரித்விகா.

அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமைக்குரிய சோம்பலுடன் மெதுவாக உதயமானான் கதிரவன். ரித்விகா ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தாள்.

அவள் சஞ்சய்யுடன் பேசிக் கொண்டிருந்தாள். அவன் முகம் கோபமாக இருந்தது. பேசும் பொழுது பாதியில் எழுந்து போகிறான் அவன்.

சஞ்சய்யின் கையைப் பிடித்து இழுத்தாள். சஞ்சய் அவள் மடியில் விழுகிறான். ஒரு இடிச் சத்தம் கேட்க... அவள் அவனைப் பயந்து போய் அணைத்துக் கொள்கிறாள்.

அவன் அவள் காதில் ஏதோ கிசுகிசுக்கிறான். அவள் அவன் மார்பைச் செல்லமாகக் குத்துகிறாள். சட்டெனக் கண் விழிக்கிறாள் ரித்விகா.

நடந்ததெல்லாம் கனவு என்று புரிந்தது அவளுக்கு.

ஆழ்மனதின் எண்ணங்கள்தான் கனவாக வருகின்றன ...ன எப்பொழுதோ படித்தது அவள் நினைவுக்கு வந்தது. ...ன் எப்பொழுது இப்படி மாறி விட்டோம் என்று யோசிக்கத் ...டங்கினாள்.



இந்த மாதிரி ஒரு கனவு இது வரை வந்ததே இல்லை. ஒரே ஒரு முறை அவள் சூர்யா – ஜோதிகாவைப் பேட்டி எடுப்பது போல் கனவு வந்தது. மற்ற கனவுகளில் எல்லாம் அவள் அர்ச்சனாவை ஷட்டில் கேமில் தோற்கடிப்பது போல்... பப்லுவுடன் ஐஸ்–க்ரீம் சாப்பிடுவது போல்... என்று வரும்.

தன் மனதில் கள்ளத்தனம் புகுந்து விட்டது, சஞ்சய்யின் ரூபத்தில்... என்று அவளுக்குப் புரிந்தது. இதை மீறித் தன்னால் பழைய ரித்விகாவாக இருக்க முடியுமா என யோசிக்கத் தொடங்கினாள்.

## 18

நான்
புதிதாகப்
பிறந்தது
போல்
உணர்கிறேன்
..............
நந்தவனங்கள்
பூமாலை
கட்டுகின்றன
...........
பூமி
என்
காலடியில்
...........

நட்சத்திரங்கள்
என்
கை அருகே
............
அழகான கனவு
உன்னைப்
போலவே!

**ரி**த்விகா ஸ்பென்ஸர் பிளாஸாவில் உள்ள காபி ஷாப்பில் உட்கார்ந்திருந்தாள். அவளுக்கு எதிரில் ப்ரணேஷ் உட்கார்ந்திருந்தான்.

"சீக்கிரம் சொல்... ப்ரணேஷ்! எனக்கு வீட்டில் நிறைய வேலைகள் உள்ளன. நீ ஏதோ பேச வேண்டும் என்று வற்புறுத்தி அழைத்ததால்தான் வெளியே வந்தேன்."

"யெஸ்... ரித்விகா! நம் திருமணத்தைப் பற்றித்தான் பேசலாம் என்று..." - அவன் முடிக்கும் முன்பு குறுக்கிட்டாள் ரித்விகா.

"ப்ரணேஷ்! எனக்கு இப்போதைக்குத் திருமணம் செய்து கொள்ளும் எண்ணம் இல்லை."

"தட்ஸ் ஓ.கே! எண்ணம் வரும் பொழுது..." என்று அவன் பேசிக் கொண்டிருக்கும்பொழுது பக்கத்து டேபிளில் இருந்து சிரிப்புச் சத்தமும் உரக்கக் கேட்டது.

பக்கத்து டேபிளில் இருப்பவர்களைக் கவனித்தாள் ரித்விகா. ரவுடிகள் என்று அக்மார்க் முத்திரை குத்தியிருந்தது அவர்கள் முகத்தில்.



அதேநேரத்தில் அங்கிருந்த ஒருவன் அவள் பார்ப்பதைக் கவனித்து விட்டான்.

"டேய் மச்சி! ஐஸ்க்ரீம் மாதிரி லுக் விட்டாடா பாப்பா! போய் என்னன்னு கேட்கலாம்... வா!"

ஏதோ விபரீதம் ஏற்படப் போகிறது என்று அவளுக்குப் புரிந்தது.

"என்னம்மா... பாப்பா! என்ன வேணும் உனக்கு? கேள்... இவன் தர முடியாததெல்லாம் நாங்க தர்றோம்...." என்று இரட்டை அர்த்த வசனத்தோடு அவள் கன்னத்தைக் கிள்ளினான் ஒருவன்.

"ச்சீ... விடு..." என்று அவன் கையைத் தட்டி விட்டாள் ரித்விகா.

"இதுக்கே முரண்டு பண்ணினா எப்படி?" என்று இன்னொருவன் அவள் துப்பட்டாவைப் பிடித்து இழுத்தான்.

அப்பொழுதுதான் மற்ற கடைகள் எல்லாம் அவசர அவசரமாக மூடப்படுவதைக் கவனித்தாள்.

ப்ரணேஷ் எங்கே என்று அவள் விழிகள் பதட்டத்துடன் சுற்றும் முற்றும் அவனைத் தேடின. அவனைக் காண வில்லை.

அந்தக் கடையில் உள்ள எல்லோரும் தன்னையே பார்ப்பது... அவளுக்கு அருவருப்பை ஏற்படுத்தியது.

சே... ஒருத்தர் கூட இங்கே நடப்பதைத் தட்டிக் கே மாட்டேங்கிறாங்களே... கோபமும் எரிச்சலும் அவ ஆட்டுவிக்க அங்கிருந்து கிளம்ப முயன்றாள்.

"என்ன பாப்பா! அதுக்குள்ள கிளம்பறே? எங்களை எல்லாம் யார் கவனிக்கிறது?" என்றபடியே அவள் கையைப் பற்றினான் ஒருவன்.

"ஏய்... விடு!" - கையை விடுவிக்கப் போராடினாள் ரித்விகா.

ஆனால் அந்தக் கொடியவனின் அசுர பலம் முன்பு அவள் முயற்சிகள் எதுவும் எடுபடவில்லை.

"டேய்... வாடா... போலீஸ்!" என்று இன்னொருவன் சொல்ல... அவள் கையை விட்டு விட்டு வேகமாக ஓடினான் அவன்.

சட்டென அந்த ரவுடிகள் கூட்டம் மின்னல் வேகத்தில் வெளியேறியது. தன்னருகே வந்த போலீஸ் அதிகாரியிடம் நன்றி சொல்லத் திரும்பினாள்.

திடுக்கிட்டாள் ரித்விகா.

காரணம் அங்கே சஞ்சய் நின்று கொண்டிருந்தான். அவள் அவன் விழிகளைப் பார்க்கத் திராணியின்றித் தலை குனிந்தாள்.

"அந்தக் கூட்டத்தில் உள்ளவர்களை உன்னால் அடையாளம் காட்ட முடியுமா?" என்றான் சஞ்சய், அவள் அருகே வந்து.

"ம்... முடியும்."

"உன் கூட வேறு யாராவது அடையாளம் காட்ட முடியுமா?"

"ப்ரணேஷ் என் கூடத்தான் வந்தான்..."



சஞ்சய்யின் முகம் ஒரு நொடி இறுகியது. பின்பு மீண்டும் பழைய நிலைக்கு வந்தது.

"அவன் எங்கே... இப்பொழுது?"

"தெ... தெரியலை..."

"அவங்க எல்லாம் போயிட்டாங்களா... ரிகா! நான் நல்ல காலம் டாய்லெட்டில் போய் ஒளிந்து கொண்டேன்!" என்றபடியே அவள் அருகே வந்தான் ப்ரணேஷ்.

"வெரி குட். சரியான ஆளுடன்தான் வந்திருக்கிறாய்!" என்றான் குத்தலாக சஞ்சய்.

அவளுக்கு அவமானமாக இருந்தது. ஒரு ஆபத்து வந்தவுடன் சுயநலம் பொங்க... தன்னை அம்போ என விட்டுச் சென்ற ப்ரணேஷ் தன்னை எப்படிக் காலமெல்லாம் திருமணம் எனும் பந்தம் மூலம் காக்கப் போகிறான்... சே! இவன் என் அத்தையின் பிள்ளை வேறு...

இந்த மாதிரிச் சொந்தம் எல்லாம் தேவையா? - கொதித்தாள் அவள்.

"நான் அடையாளம் காட்டறேன். எனக்கு அந்த ரவுடி முகம் நன்றாக ஞாபகம் இருக்கிறது..."

"சரி... இப்ப என்னோடு வர முடியுமா?"

"ம்... வருகிறேன்."

"தேங்க்ஸ். கம் வீ வில் கோ!"

"ரிகா... நானும் வர்றேன். நீ தனியா போலீஸோடு போவது எனக்குப் பிடிக்கலை."

"வாயை மூடுங்கள். என் விஷயத்தில் தலையிட உங்களுக்கு எந்த உரிமையும் இல்லை..." - சீறினாள் ரித்விகா.

"நான் உன் முறைமாப்பிள்ளை. எனக்கு எல்லா உரிமையும் உண்டு."

"ச்சீ... உங்களை என் சொந்தம் என்று சொல்லிக் கொள்ளவே எனக்கு அவமானமாக இருக்கிறது. வாங்க... சஞ்சய் போகலாம்!" என்று அவன் கைமணிக்கட்டை அவள் பற்றினாள்.

சஞ்சய் இறக்கை இல்லாமல் பறந்தான்... மேலே மேலே... ரித்விகா தெளிவாகச் சொன்னது அவன் மனதை மயில் இறகால் வருடியது போல் இருந்தது.

"ம்... தேங்க்ஸ் ரித்விகா!"

"எதுக்கு?"

அவன் சட்டெனச் சமாளித்துக் கொண்டான்.

"குற்றவாளியை அடையாளம் காட்ட ஒத்துக் கொண்டாய் அல்லவா... அதுக்குத்தான் தேங்க்ஸ்."

"ஓ... அதுக்குத்தானா... வேறு ஏதும் இல்லையா?"

"ம்... வேறு என்ன?"

மரமண்டை... சரியான கல்லுளிமங்கன். ஒன்றும் தெரியவில்லை இவனுக்கு... மனதிற்குள் அவனைத் திட்டினாள்.

"நான் இன்று ஜீப்பில் வரவில்லை. யமஹாவில்தான் வந்தேன். நீ அதில் வருகிறாயா... இல்லை ஆட்டோவில் வருகிறாயா?"



"ம்... உங்களுக்கு என்னைப் பின்னாடி உட்கார வைத்து ஓட்ட இஷ்டமில்லை போல் தெரிகிறது... உங்களுக்குத்தான் என் போன்ற பெண் என்றாலே அலர்ஜி ஆச்சே...!" அவள் அவனைச் சீண்டினாள்.

"எப்பவும் அலர்ஜி கூடவே இருந்தால் அது பழகிவிடும்!" என்றான் அவளைப் பார்த்து.

அவள் கன்னங்களில் செம்மை படர்ந்தது. இவன் முடைப் பொறுத்தது போல்... இவன் பேச்சு போல்... என நினைத்து சிரித்துக் கொண்டாள்.

அவன் பின்னால் பில்லியனில் உட்கார்ந்தாள் ரித்விகா. அவன் யமஹா சீறிப் பாய்ந்தது. அவன் விரைவாகச் செலுத்தினான் வண்டியை. குறுக்கே சாலையில் ஒரு ஆடு சட்டெனப் பாய்ந்து ஓட... அவன் பிரேக் போட்டான்.

இவள் அவன் முதுகோடு ஒட்டிக் கொண்டாள். கை அவன் இடுப்பை வளைத்துக் கெட்டியாகப் பிடிக்க... அவன் சந்தோஷ வானில் பறந்தான்.

எக்மோர் தலைமை போலீஸ் ஸ்டேஷன் முன் வண்டி நின்றது. அவன் வண்டியை நிறுத்தினான்.

"ம்... ரித்து! இதுதான் நான் பணியாற்றும் போலீஸ் ஸ்டேஷன். உனக்குப் பயம் ஏதுமில்லை அல்லவா... உள்ளே வர...!"

"உள்ளே இருப்பது மனிதர்கள்தானே!"

"ம்... மனிதர்கள்தான். ஆனால் சில நேரம் மனிதத் தன்மையைத் தொலைத்தவர்கள். அதனால்தான் இங்கிருக்கிறார்கள்."

"குட் மார்னிங் ஸார்..." என்று காக்கி உடையில் எதிரில் வந்தவர்கள் அவனைப் பார்த்துச் சொன்னார்கள்.

சஞ்சய்யும் பதிலுக்குத் தலை அசைத்து குட் மார்னிங் சொல்வதை அவள் கவனித்தாள்.

ஸ்டேஷனின் உள்ளே சுத்தமாக இருந்தது. ஒரு டேபிள் மேல் 'சஞ்சய் ஏ.சி.' என்று போர்டு தெரிந்தது.

"குட் மார்னிங் ஸார்!" என்று விறைப்பாகச் சல்யூட் அடித்தார் காக்கி உடையில் இருந்த ஒருவர்.

"குட் மார்னிங் தாமஸ்! இன்னிக்கு ஸ்பென்ஸர் பிளாஸாவில் நாம் எதிர்பார்த்தபடியே ஒரு கலாட்டா... ரவுடிகள் ஒரு காப்பி ஷாப்பில் கலாட்டா செய்தார்கள். நான் வருவதைப் பார்த்தவுடன் ஓடி விட்டனர். நான் அவர்களைப் பற்றி முழுமையாகத் தெரிய வேண்டும் என்ற எண்ணத்தில்தான் பின்தொடரவில்லை.

ஈஸ்வர் போயிருக்கான் மஃப்டியில்... அவர்களைப் பற்றிய எல்லா விவரங்களும் கிடைத்து விடும்..."

"தட் வுட் பி கிரேட் ஸார்!"

"அப்புறம் அந்த ரவுடிகளை அடையாளம் காட்ட இவங்க முன்வந்தாங்க... அதுதான் பாதுகாப்பா இருக்கட்டும்னு கையோடு அழைத்து வந்தேன்.

பெயர் ரித்விகா. என்னோடதான் இருக்காங்க... ஐ மீன் எங்க ஃபிளாட்டில்தான் இருக்காங்க..." என்றான் அவசரமாக சஞ்சய்.

"ஓ... ஹலோ மேடம்!" என்று சிநேகிதமாகப் புன்னகைத்தான் தாமஸ்.



"ஹலோ!" என்று பதில் புன்னகை செய்தாள் ரித்விகா.

சஞ்சய் சொன்னதே அவள் காதில் ஒலித்துக் கொண்டிருந்தது. என்னோடுதான் இருக்கிறாள்... என்று பட்டெனச் சொல்லி விட்டானே... சரியான கள்ளன் என மனதிற்குள் அவனைத் திட்டினாள் ரித்விகா.

"ரித்து வா... உள்ளே போகலாம்."

"ம்... சரி."

ரூமில் உள்ள நாற்காலியில் அவள் உட்கார்ந்தாள்.

"ஒரு நிமிஷம்!" என்றவன் லேப்-டாப்பை ஆராய்ந்தான்.

"ஸார்... இன்னிக்கு உங்ககிட்ட மனு கொடுக்கிறதுக்காக வெளியே நிறைய பேர் காத்துக்கிட்டு இருக்காங்க..."

"ஓ... இன்னிக்கு 'க்ரீவென்ஸஸ் டே' இல்ல... நான் வர்றேன் நட்ராஜ்!"

"அது என்ன... க்ரீவென்ஸஸ் டே?"

"ம்... நிறைய குடும்ப சம்பந்தமான பிரச்சனைகள் வரும்... வந்து பார்க்கிறாயா?"

"ம்... ஷ்யூர்."

அறையை விட்டு வாசலை நோக்கி இருவரும் நடந்தனர்.

"ஐயா! என்னையும் என் பொண்ணையும் நீங்கதான் நரகத்தில் இருந்து காப்பாற்றணும்..." - அவன் காலைக் கட்டிக் கொண்டாள் ஒரு நடுத்தர வயதுப் பெண்.

...மா... இது! எழுந்திருங்க..." என்று அவளை வற்புறுத்தி எழுந்து நிற்கச் செய்தான் சஞ்சய்.

"ஐயா! என் புருஷன்... டெய்லி என்னையும் என் பெண்ணையும் குடிச்சிட்டு அடிச்சுப் பணம் வேணும்னு தொல்லை செய்யறார்..."

"எத்தனை நாளா இது நடக்குது அம்மா!"

"அஞ்சு வருஷத்துக்கு மேல..."

"ம்... இதுக்கு முன்னாடி புகார் கொடுத்திருக்கீங்களா?"

"இல்லை... ஐயா!"

"அப்ப ஏன்மா இப்படி சட்டுன்னு தீர்மானிச்சீங்க?"

"எங்க வீட்டாண்ட இருக்கிற இன்னொரு பொம்பளை வீட்டிலேயும் இதே பிரச்சனைதான் ஐயா! நீங்கதான் சரி செய்தீங்க... அந்தப் பிரச்சனையை... அந்த அம்மா என்கிட்ட சொன்னாங்க.

அந்த வூட்டு ஐயா இப்ப திருந்திட்டார் போல... அதான் உங்ககிட்ட சொல்லலாம்னு... கொஞ்சம் அந்த ஆளைத் தட்டி புத்திமதி சொன்னா... திருந்திடும் அது..."

"ஓ! அப்படியா... ரெண்டு நாள் உள்ளே லாக்கப்பில் வைக்கவா?"

"என்ன வேணுமானாலும் செய்யுங்க... ஐயா! அவர் திருந்தினாப் போதும்... நானே கஷ்டப்பட்டுத் தோல் கம்பெனியில் வேலை செய்து பிழைப்பை ஓட்டிக் கொண்டிருக்கிறேன். என் பொண்ணும் இப்ப வேலைக்குப் போகுது. நிம்மதியா இருக்கலாம்னு பார்த்தா... இந்த ஆள் விட மாட்டேன்கிறான்... ஐயா!"



"சரி... உங்க வீட்டு முகவரியைக் கொடுத்திட்டுப் போங்க. இன்னும் ஒரு வாரத்தில் கண்டிப்பா அவர் திருந்திடுவார். இல்லாட்டி என்கிட்ட திரும்ப வந்து நீங்க புகார் செய்யலாம்..."

"ரொம்ப நன்றி ஐயா!"

அடுத்த அரை மணிநேரம் சஞ்சய் பலதரப்பட்ட கேஸ்களை எடுத்து நடத்துவதை அவள் வியப்புடன் பார்த்தாள். புகார் கொடுக்க வந்த மக்கள் எல்லோரும் ஏழ்மையில் இருப்பவர்கள்... என்பதை உடை, பேச்சு எல்லாமே உறுதி செய்தது.

வரதட்சணைக் கொடுமை, குடிகாரக் கணவனால் பிரச்சனை... வீட்டைக் காலி செய்யச் சொல்லி குண்டர்களை அனுப்பும் வீட்டுச் சொந்தக்காரர்... வாங்கின கடனின் வட்டியை ஒரு தவணை லேட்டாகக் கட்டியதால் வீட்டை நாசம் செய்த கும்பல்... எனப் பலதரப்பட்ட புகார்கள் வந்தன.

எல்லாவற்றையும் பொறுமையாக அவன் கையாண்ட விதம்... அவள் மனதை நெகிழச் செய்தது.

எவ்வளவு பேரோட குறைகளை இவன் தீர்த்து வைக்கிறான். மனநிம்மதியுடன், முகத்தில் பொலிவுடன், இவன் குறைகளைத் தீர்ப்பான் என்ற நம்பிக்கையோடு எல்லோரும் திரும்பிப் போகிறார்களே... என்று அவள் மனம் பெருமிதப்பட்டது.

இவனைப் போய் நான் சிடுமூஞ்சி என்று மனதிற்குள் திட்டினேனே... இவன் தொழில் எவ்வளவு சவால்கள் நிறைந்தது...

மழை, பனி, வெயில் எதையும் பார்க்காமல் [illegible] தொழிலைக் காக்க வேண்டும். குற்றங்கள் பெருகாமல் [illegible] வேண்டும்... உயிரைப் பணயம் வைத்து குற்றவாளிகளைப் பிடிக்க வேண்டும்.

அரசியல்வாதிகளின் தவறான நடைமுறைகளுக்கு செவி சாய்க்காமல்.. நேர் பாதையில் செல்ல வேண்டும்.. ஏ.ஸி. அறையில் உட்கார்ந்து கொண்டு, பன்னாட்டு நிறுவனங்கள் கொடுக்கும் பாலர்களுக்காக இரவு, பகல் பார்க்காமல்... உழைக்கும் இளைஞர்கள் மத்தியில் இவன் ரொம்பவே வித்தியாசமானவன்.

ஏனோ அவனைப் பார்க்க பார்க்க அவள் மனம் அவனிடம் சாய்ந்தது. இவனைப் போய் நான் எப்படி எல்லாம் வாய்க்கு வந்தபடி எல்லாம் பேசினேனே!

சே... எனக்குத் திமிர் அதிகம்தான். ஒரு பொறுப்பான பதவியில் இருப்பவனை நான் எப்படி எல்லாம் ஆட்டம் காட்டி இருக்கிறேன். கிண்டலாகப் பேசி இருக்கிறேன். அவனைப் பற்றியும் அவன் வகிக்கும் பதவியைப் பற்றியும்... அவள் மனம் நெகிழ்ந்தாள்.

"ரித்து... என்ன யோசனை! போகலாமா... உள்ளே இதோடு ரெண்டு முறை நான் உன்னை அழைத்து விட்டேன்."

"ஸாரி... நான்... நான்..." என்றவளின் கண்கள் கலங்கின.

அவன் முகத்தில் அப்பட்டமாகப் பதட்டம் தெரிந்தது.



## 19

என்
கனவும்
நீ
..........
என்
தூக்கமும்
நீ
..........
என்
கவிதை
நீ
..........
என்
பிழை
நீ
..........
என்
வெளிச்சம்
நீ
..........
என்
கண்ணீர்
நீ
..........
[illegible]
[illegible]

ஆசசு? உடம்பு சரியில்லையா!" - அவன் குரல் பதட்டமாக ஒலித்தது.

"இ... இல்லை. ஐயாம் ஸாரி."

"எதுக்கு ஸாரி... இப்ப?"

"நீங்க எவ்வளவு பெரிய ஆள். பொறுப்பான பதவியில் இருப்பவர். உங்களை நம்பி எவ்வளவு பேர் மனுக்கள் கொடுக்கிறார்கள்.

ஆனால் நான் அதைப் பற்றி எல்லாம் கவலைப்படாமல் உங்களை நிறைய தடவை எடுத்தெறிந்துப் பேசி இருக்கிறேன். ஐயாம் ஸாரி.. ரியலி!" என்று மீண்டும் கண் கலங்கினாள்.

"ஏய்... இதுக்கு ஏன் கஷ்டப்படறே? நீ செய்யும் குறும்பை எல்லாம் நான் ரசித்தேன்... ரியல் ஐ மீன் இட்!"

"நிஜம்மாவா...!" - விழிகள் அகல அவள் வினவினாள்.

"ம்... யெஸ். ஆனால் நீ இன்னும் ஒரு விஷயத்தைத் தான் என்னிடம் சொல்லாமல் மறைக்கிறாய்..."

"இல்லையே... என்ன விஷயம்?"

"என்னிடம் உள்ள ஒரே ஒரு அட்ராக்ஷன். அது என்னவென்று தெரிந்து கொள்ளாமல்... காட்! எனக்கு ரொம்பவே கஷ்டமாக இருக்கிறது. அது என்ன ரித்து... இப்பொழுது சொல்லி விடேன்."

ஓ... இதைத் தெரிந்து கொள்ள இவன் எவ்வளவு ஆர்வமாக இருக்கிறான்... இவனைச் சீண்டலாம்... கொஞ்ச



நேரம் காய விடலாம்... - மனதிற்குள் முடிவு செய்தாள் ரித்விகா.

"ம்... அது... அது... இப்ப வேண்டாமே?"

"ஏய்... எப்ப கேட்டாலும் இப்படித்தான் சொல்றே? சொல்லாமல் இந்த இடத்தை விட்டுப் போக முடியாது."

"அட... இது என்ன அராஜகம்! அப்புறம் சஞ்சய்... அராஜகம் ஒழிகன்னு நான் கத்துவேன்."

"நீ செய்தாலும் செய்வாய். தாயே! இது போலீஸ் ஸ்டேஷன். ப்ளீஸ்... உன் வாலை எல்லாம் மூட்டை கட்டி வை..." - அவன் கெஞ்சினான்.

"சஞ்சய்! நீங்க முதலில் ஒரு நல்ல கண் டாக்டர் கிட்ட போய் கண்ணை செக் செய்யுங்க..."

"ஏன் சட்டுன்னு சொல்றே? எனக்குப் புரியலை..."

"என்னைப் பார்த்து வாலை அடக்கி வைன்னு சொன்னீங்கதானே!"

"ஆமாம்..."

"ஒரு அழகான இளம்பெண்ணை இப்படிச் சொல்றீங்களே... அதனாலதான் சொன்னேன். ஒரு நல்ல கண் டாக்டரா செக் செய்யுங்கன்னு..."

அவன் அதைக் கேட்டுச் சிரித்தான். அவன் சிரிக்கும் பொழுது அவன் முகத்தின் இறுக்கம் தளர்ந்து ரொம்ப இயல்பாக இருப்பது போல் தோன்றியது அவளுக்கு.

அவனின் அடர்ந்த கரிய மீசையின் கீழ் மின்னிய வெண்பற்கள் அவளை ஏதோ செய்தது. அவன் முகத்தையே பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள் ரித்விகா.

"அழகான இளம்பெண்ணா... யார் அது?" என்று தேடுவது போல் பாவனை செய்தான் அவன்.

"சஞ்சய்... நீங்க ரொம்ப மோசம்!" என்று சட்டெனக் கைகளால் அவன் மார்பைக் குத்தினாள்.

அவன் சட்டென அவள் கையை விலக்கினான்.

அவளுக்கு அவமானமாக இருந்தது. தான் செய்ததை சஞ்சய் தவறாகப் புரிந்து கொண்டான் என்று நினைத்து மருகினாள் அவள்.

"ம்... நான் யூனிஃபார்மில் இருக்கிறேன் ரித்து! அப்புறம் டியூட்டியில் இருக்கும் பொழுது போலீஸ் மேல் கை வைத்து விட்டாய் என்று உன் மேல் யாராவது புகார் கொடுக்கலாம். அதனால்தான்... தப்பாக எடுத்துக் கொள்ளாதே!" என்று அவள் சந்தேகத்தைத் தீர்த்தான்.

"ஓ... அதுதானா விஷயம்?"

"யெஸ்... அது மட்டும்தான். வேறு ஏதும் இல்லை."

"நான் செய்வது பிடிக்கவில்லையோ... என்று நான் நினைத்தேன்."

அவளை அறியாமலேயே வார்த்தைகள் நழுவி விழுந்தன. அவன் அவள் முகத்தைப் பார்த்தான்.

அவள் கண்களில் ஒரு புது உணர்வு தெரிந்தது.

"ஸார்... கமிஷனர் லைனில் இருக்கார்..." - ஹேண்ட் செட்டை சஞ்சய்யிடம் நீட்டினான் தாமஸ்.

அடுத்த பத்து நிமிடங்கள் சஞ்சய் ஃபோனில் மும்முரமாகப் பேசியபடி இருந்தான். அவன் பேசுவதையே அவள் பார்த்துக் கொண்டிருந்தாள்.



"யெஸ் ஸார்... கண்டிப்பாக செய்யலாம்!" என்றபடியே ஃபோனை தாமஸிடம் கொடுத்தான் சஞ்சய்.

"ஸாரி ரித்து... நான் அவசரமாகப் போக வேண்டும்... தாமஸ்! அந்த நியூ-இயர் பார்ட்டியின் பொழுது கலாட்டா செய்த ரவுடிகள் ஃபோட்டோக்களை ரித்விகாவிடம் காட்டுங்கள்.

இன்று ஸ்பென்ஸர் பிளாஸாவில் கலாட்டா செய்தது அவர்கள்தானா... வேறு யாராவதா என்று ரித்விகா சொல்லட்டும்... நான் கமிஷனரைப் பார்த்துப் பேச வேண்டும். இட் இஸ் இம்பார்ட்டன்ட். அதனால்தான்... ரித்து. பை... பை..." என்று சொல்லிவிட்டு வேகமா வெளியேறினான் சஞ்சய்.

அவன் போனவுடன் அந்த ஸ்டேஷனே இரு அடைந்தது போல் தோன்றியது அவளுக்கு.

"மேடம்! அந்த அறைக்கு வர்றீங்களா... ப்ளீ ஃபைல் எல்லாம் அங்கேதான் கப்போர்டில் இருக்கு." என்றான் தாமஸ்.

"ஓ... அப்படியா! வாங்க அங்கேயே போகலாம்."

"உட்காருங்க மேடம்!"

"தேங்க்ஸ்..." என்றபடியே நாற்காலி உட்கார்ந்தாள் அவள்.

டேபிள் முன்பு நிறைய ஃபைல்கள் இருந் அவற்றை ஒதுக்கி ஓரமாக வைத்தான் தாமஸ். பி கப்போர்டில் இருந்து சில ஃபைல்களை எடுத்து வந்தா

"மேடம்... இதில் உள்ள ஃபோட்டோக்களை நன்றாகப் பாருங்கள். கொஞ்சம் சந்தேகம் வந்தால் கூட குறித்து வைத்துக் கொள்ளுங்கள்.

நான் ஸார் ரூமில்தான் இருப்பேன்... மேடம்! ஏதாவது வேண்டும் என்றால் கூப்பிடுங்கள். இன்டர்காம் நம்பர் ஆறு."

"சரி... நான் பார்க்கிறேன்."

அடுத்த அரை மணி நேரம் ஃபைலில் இருந்த பல்வேறு புகைப்படங்களைக் கிட்டத்தட்ட நூறு எண்ணிக்கையில் இருந்த படங்களைப் பார்த்த வண்ணம் இருந்தாள் ரித்விகா.

கடைசி ஐந்து படங்களில் இருந்த அந்த ரவுடிகளின் முகமும்... தான் ஸ்பென்ஸர் பிளாஸாவில் பார்த்த குண்டர்களின் முகமும் ஒத்துப் போயின.

உடனே இன்டர்காம் மூலம் தாமஸைத் தொடர்பு கொண்டாள்.

"இந்த ஃபைலில் உள்ள ஃபோட்டோவில் அந்த ரவுடிகள் இருக்காங்க. அதே ஆளுங்கதான்..."

"ஓ... குட். நான் அங்க வரேன் மேடம்!" என்றபடியே ரிசீவரை வைத்தான் தாமஸ்.

"இதே ஆளுங்கதான். ஐயாம் ஷ்யூர்!" என்றபடியே ஃபைலில் இருந்த ஃபோட்டோக்களை தாமஸிடம் காட்டினாள் ரித்விகா.

"பரவாயில்லை... என் யூகமும் இதுதான். நியூ இயர் பார்ட்டியின் பொழுது பெண்களிடம் தவறாக நடந்து



கொண்டவர்கள் இவர்கள். கொஞ்ச மாதங்கள் லாக்கப்பில் இருந்தார்கள். இன்னும் திருந்தவில்லை..."

"ஓ... அப்படியா! நான் வேறு ஏதாவது புகார் மாதிரி எழுதித் தரணுமா?"

"இல்லை... மேடம்! வேண்டாம். முடிந்த வரைக்கும் பெயர் வராமல் பார்த்துக் கொள்ளலாம்."

"ஓ... சரி. எனக்கு எந்தப் பயமும் இல்லை."

"ம்... தெரியும். மேடம் கொஞ்ச நேரம் முன்பு ஸாரைக் குத்தினீங்களே... அப்பவே தெரிஞ்சுடுத்து... எங்களுக்கு நீங்க ரொம்ப தைரியசாலி என்று..."

அவள் முகம் அந்தி வானமாகச் சிவந்தது.

"ஓ... எல்லோரும் பார்த்தீங்களா?"

"ம்... ஒன்ஸ்மோர் என்று ஒரு கான்ஸ்டபிள் கத்தப் போனார். நான்தான் அவர் வாயைப் பொத்தினேன்!" என்றான், சிரித்தபடியே தாமஸ்.

"அடக் கடவுளே! நான்... நான் சும்மாதான் செய்தேன்."

"நீங்கள்... சும்மா செய்தீர்களோ... இல்லை வேண்டுமென்றே செய்தீர்களோ... பரவாயில்லை. வீ ஆல் என்ஜாய்ட் இட். நாங்கள் எல்லோரும் ஸார் கிட்ட தள்ளியிருப்போம். ஆனால் நீங்கள் உரிமையோடு அவரிடம் பழகியது எங்களுக்குப் பிடித்தது..."

"ம்... எனக்கு உங்கள் ஸாரிடம் பயம் இல்லை. ஆனால் இங்கு வந்த பிறகு அவர் மேல் உள்ள மதிப்பும் மரியாதையும் அதிகமானது. சரி... நான் கிளம்பவா! லேட் ஆச்சு. உங்க ஸார் வர நேரமாகுமா?"

"ம்... தீர்மானமாகச் சொல்ல முடியாது. மேடம்! ஏதாவது முக்கியமான விஷயம்னா... ஸார் ஃபோன் செய்வார். நான் அப்ப ஏதாவது உங்களைப் பற்றிச் சொல்லணுமா?"

"அதெல்லாம் வேண்டாம். எதுவும் சொல்ல வேண்டாம். பை..." என்றபடியே அங்கிருந்து வெளியேறினாள் அவள்.

ஆட்டோ பிடித்து வீட்டுக்குள் வந்தாள் ரித்விகா. தாமஸ் தன்னையும் சஞ்சய்யையும் இணைத்துப் பேசியது அவள் மனதில் மீண்டும் ஓடியது.

ம்... எனக்கு சஞ்சய்யைப் பிடிச்சிருக்கு. ஆனால் அவனுக்கு என்னைப் பிடித்திருக்கிறதா...

அவன் முகத்தில் இருந்து எதையுமே தெரிந்து கொள்ள முடியவில்லையே!

இதை எல்லாம் எப்படி... நேரடியாகக் கேட்க முடியுமா என்ன... சே! சரியான கல்லுளிமங்கனாக இருக்கிறானே...

என்ன செய்தால் இவன் மனதில் இருக்கும் என்னைப் பற்றிய எண்ணங்கள் வெளி வரும்?

யோசித்தபடியே படுக்கையில் புரண்டு புரண்டு படுத்தாள் ரித்விகா.

தூக்கம் அவளை ஆட்கொள்ள மறுத்தது.

நித்ராதேவி கொஞ்ச நேரம் கழித்துதான் அவளை அணைத்தாள்.



# 20

பூ
ஒன்று
பூத்து
இருக்கிறது
..........
உன்
பாதத்தை
அது
தீண்டுமா!
.........
இல்லை
மண்ணை
முத்தமிடுமா!
..............
எதுவானால்
என்ன?
..............
பூவிற்கு
அது
ஒன்றுதான்!
.............
பூ பெண்ணாக
இருந்தால்
சொல்லடி சக்தி!

ஆழ்ந்த தூக்கத்தில் ஆழ்ந்திருந்தாள் ரித்விகா. கைபேசி சத்தம் போல் ஏதோ கேட்க... சட்டென கண் விழித்தாள் அவள்.

எங்கும் இருள் சூழ்ந்திருக்க இந்நேரத்தில் யார் என்று திகைத்தபடியே கைபேசியைப் பார்க்க... ஏதோ ஒரு புது நம்பர் திரையில் தெரிய... தூக்கக் கலக்கத்தில் "ஹலோ!" என்றாள்.

மறுமுனையில் எந்தச் சத்தமும் இல்லை. மீண்டும் "ஹலோ!" என்றாள். இந்த முறையும் மறுமுனையில் இருந்து பதில் வராததால் அவளுக்குக் கோபம் வந்தது.

சிவப்பு பட்டனை அழுத்திவிட்டு மீண்டும் கண்களை மூடினாள். ஏதாவது ராங்-காலாக இருக்கும் என்று நினைத்தபடியே தூங்க முயன்றாள்.

ஆனால் கைபேசி மீண்டும் ஒலித்தது. அட... சே! யார் இது என்று சலிப்புடன் அதை எடுத்தாள். திரையில் மீண்டும் அதே நம்பர் போல் ஒரு புது நம்பர் ஒளிர்ந்தது.

"ஹலோ! யார் இது... இந்த நேரத்தில் டிஸ்டர்ப் செய்யறது?" என்று படபடத்தாள் அவள்.

மறுமுனையில் மௌனம். இந்த முறை கோபம் அவள் உடல் முழுவதும் தீப்போல் பரவியது.

"ஹலோ... சொல்றது கேட்கலை!"

மீண்டும் மறுமுனையில் மௌனம். பல்லைக் கடித்தாள் ரித்விகா.

"ஹலோ... என்ன வேணும் உங்களுக்கு?"



"நீ... வேண்டும் டியர்!" என்று ஒரு ஆண் குரல் கேட்டது. அதைத் தொடர்ந்து... சப்தம்.

ரித்விகாவால் யூகிக்க முடிந்தது. அந்த ஆண் கைபேசிக்கு முத்தம் கொடுக்கிறான் என்று. தொடர்ந்து சத்தம் கேட்ட வண்ணம் இருக்க... ரித்விகா அதிர்ந்தாள்.

"ஏய்... ரோக்! உன்னை நான் சும்மா விடமாட்டேன். ஸ்கௌண்டிரல்!" என்றபடியே சிவப்பு பட்டனை அழுத்தினாள்.

அவள் உடலில் ஏ.சி.யை மீறி வியர்வைப் பூக்கள் பூத்தன. சே... ராஸ்கல்! இவன் யார் என்று தெரியவில்லையே... என்ன செய்யலாம்?

நாளைக்கு சஞ்சய்யிடம் இதைப் பற்றிச் சொல்ல வேண்டும். இந்த நம்பரைக் குறித்து வைத்துக் கொள்ளலாம்... என்று முடிவு செய்தாள் ரித்விகா.

கடகடவென நம்பரை ஒரு பேப்பரில் குறித்து வைத்துக் கொண்டாள். பின்பு கைபேசியை ஆஃப் செய்தாள். அப்பாவிடம் இதைப் பற்றிச் சொல்லலாமா... என்று ஒரு நொடி யோசித்தாள்.

வேண்டாம்... அப்பா பயந்து விடுவார் என்று அந்த எண்ணத்தைக் கைவிட்டாள்.

அதற்குப் பின்பு தூக்கச் சுவடு அவளிடம் துளிக்கூட இல்லை. இப்பவே சஞ்சய்க்கு ஃபோன் செய்ய வேண்டும் என்று துடித்த மனதை அடக்கினாள்.

பாவம்... எத்தனை மணிக்குத் தூங்கப் போனானோ தெரியவில்லை. அதனால் காலையில் பார்த்துக் கொள்ளலாம் என்று தீர்மானித்தாள்.

"என்னடி! இவ்வளவு சீக்கிரம் முழிச்சுட்ட... என்னால நம்பவே முடியலையே!" என்றாள் காப்பிப் பொடியை ஃபில்டரில் போட்டபடியே மாலதி.

"அம்மா... முதல்ல காப்பி கொடு."

"ஏய்... பல் தேய்க்காம... சே... சே..."

"அம்மா... எனக்கு ஒரு முக்கியமான வேலை இருக்கு. அதனாலதான் சீக்கிரம் எழுந்தேன். ப்ளீஸ்... என்ன ஏதுன்னு கேட்காம காப்பி கொடு.

இல்லாட்டி சந்தானத்தை எழுப்பி எனக்குக் காப்பி கொடுக்க ரெகமெண்ட் செய்யச் சொல்வேன்."

"பாவம்டி... அசந்து தூங்கறார். அவர் தூக்கத்தை கலைக்காதே! இந்தா காப்பி. இடத்தைக் காலி பண்ணு. எங்க வேணா போ... என்ன வேணா செய்.

இந்த ஆத்தில நீ வெச்சதுதான் சட்டம். என்ன செய்யறது?" என்று புலம்பியபடியே காப்பி டம்ளரை அவளிடம் நீட்டினாள் அவள்.

"தேங்க்ஸ் அம்மா..." என்று சொல்லியபடியே காப்பி டம்ளரை வாங்கிக் கொண்டாள் ரித்விகா.

காப்பியைக் குடித்த பின்பு அவளுக்குத் தெம்பு வந்தது. கைக்கடிகாரம் மணி காலை ஆறு என்றது. கைபேசியை எடுத்துக் கொண்டு சிவநேசன் ஃபிளாட் நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

காலிங் பெல்லை அழுத்தினாள். கதவு திறக்கும் சுவடு இல்லை. அங்கிள் தூங்கிக் கொண்டு இருப்பாரா... சே... சே... பாய்-ஃபிரண்ட் காலையில் கண் விழித்து விடுவ...



என்று நினைத்தவள் மீண்டும் காலிங் பெல்லை அழுத்தினாள்.

குளித்துக் கொண்டிருந்த சஞ்சய், பெல் சத்தம் கேட்க... அவசர அவசரமாக டவலால் உடம்பைத் துடைத்துக் கொண்டு டவலைக் கட்டியபடியே வேகமாகக் கதவைத் திறந்தான்.

"அங்கிள்... நான்..." என்று ஆரம்பித்தவளுக்கு அப்பதான் புரிந்தது... கதவைத் திறந்தது சஞ்சய் என்று.

அவன் நின்றிருந்த கோலம் அவளுக்கு என்னவோ போல் இருந்தது.

"ஸாரி... நான்..." என்று திணறினாள்.

"ஹலோ ரித்து! என்ன ஆச்சு? வந்ததிலிருந்து என்னவோ உளறிக் கொட்டற... முதல்ல உள்ளே வா."

"இல்லை... நான் அப்புறம் வரேன்."

"ஏய்... நீ மரியாதையா வா உள்ளே. அடுப்பில் பால் இருக்கு. உன்னோட பேசிட்டு இருந்தா அவ்வளவுதான்!" என்றபடியே வேகமாக கிச்சனை நோக்கி ஓடினான்.

அவன் ஓடுவதைப் பார்த்தவளுக்குச் சிரிப்பு பொங்கியது. சிரித்தபடியே சோபாவில் உட்கார்ந்தாள்.

"கரெக்டான நேரத்தில் போனேன். இட் வாஸ் ஜஸ்ட் இன் டைம்... இல்லாட்டி பால் காலி!"

"ஓ... அங்கிள் இல்லையா?"

"ம்... கோவில் போயிருக்கார்."

"ஓ... வர நேரமாகுமா?"

"ஒரு மணி நேரம் ஆகும்..."

"ஓ... அப்படியா!"

"ரித்து! ஏதோ சொல்றதுக்குத்தான்... நீ இவ்வளவு காலையில இங்கே வந்திருக்க...? அது முக்கியமான விஷயம்னு எனக்குத் தோணுது... அம் ஐ ரைட்!"

"யெஸ்... அது எப்படி உங்களுக்குத் தெரிந்தது?"

"நீ வந்ததிலிருந்து நெர்வஸாக இருக்கிறாய். நைட் சரியாகத் தூங்கவில்லை. உன் கண் சிவந்திருக்கு... அப்புறம் சொன்னால் கோபித்துக் கொள்ள மாட்டாயே...!"

"இ... இல்லை. சொல்லுங்கள்..."

"நீ வீட்டை விட்டுக் கிளம்பும் பொழுது கண்ணாடியில் உன்னைப் பார்த்துக் கொள்ளவில்லை என்று நினைக்கிறேன்."

"ஆமாம்... அது எப்படி... உங்களுக்கு?"

"ம்... உன் இரவு உடையின் பட்டன்... மேலும் கீழும் போட்டு இருக்கிறாய் பார்!" என்றான் சிரித்தபடியே.

குனிந்து தன்னைப் பார்த்துக் கொண்டவளுக்கு அவன் சொல்வது உண்மை என்று புரிந்தது. அவள் முகம் சிவந்தது.

"ஸாரி... உன்னை எம்பராஸ் செய்ய வேண்டும் என்று நான் சொல்லவில்லை. உள்ளே உள்ள அறையில் போய் நீ சரியாகப் போட்டுக் கொண்டு வா... நீ அப்படியே திரும்ப வீட்டுக்குப் போவது நல்லா இருக்காது..."



"ஓ... சரி" என்றவள் வேகமாகக் குளியல் அறைக்குள் சென்று பட்டன்களை எல்லாம் ஒழுங்காகப் போட்டுக் கொண்டு வந்தாள்.

வெளியே வந்தபொழுது சஞ்சய் டி-ஷர்ட்டுக்கும் ஜீன்ஸிற்கும் மாறியிருப்பதை அவள் விழிகள் கவனித்தன. பேப்பர் படித்துக் கொண்டிருந்தவன் சட்டென நிமிர்ந்தான்.

"ம்... உட்கார் ரித்து!" என்றான் சோபாவைக் காட்டி.

"ம்... தேங்க்ஸ்!" என்றபடியே உட்கார்ந்தாள்.

"காப்பி வேணுமா?"

"இல்லை... வேண்டாம்."

"ரித்து... மணிரத்னம் பட டயலாக் மாதிரி இந்த மாதிரி ரெண்டு பேரும் பேசுவதை விட்டு விடலாமே... நீ சொல்ல வந்த விஷயத்தைச் சொல்லேன் சீக்கிரம்..."

அவன் சொன்னதைக் கேட்டு அவள் இதழ்களில் சிரிப்பு பரவியது.

"ம்... என்னிடம் நேற்று ராத்திரி ஒருவன் ஃபோனில் மோசமாகப் பேசினான். ராஸ்கல்! அவன் நம்பர் இருக்கிறது என்னிடம். அவனைப் பற்றி கம்ப்ளையிண்ட் செய்யத்தான் வந்தேன். எனக்கு உங்கள் உதவி தேவை."

"ஓ... கண்டிப்பா. ராத்திரி எத்தனை மணிக்கு ஃபோன் வந்தது?"

"ம்... அதிகாலை மூன்று மணி அளவில் இருக்கும். இதுதான் அவன் நம்பர்!" என்று கைபேசியில் ஸ்டோர் செய்து வைத்த நம்பரை அவனிடம் கொடுத்தாள் ரித்விகா.

"அதை அப்புறம் குறித்துக் கொள்கிறேன். அவன் உன்னிடம் என்ன சொன்னான்?"

"சரியான ரோக்... அவன். நான் முதல் தடவை ஹலோ சொன்னேன். அவன் பதில் சொல்லவில்லை. நான் ஃபோனை டிஸ்கனெக்ட் செய்து விட்டேன்.

இரண்டாவது தடவை ஃபோன் வந்தது. அப்ப நான் செம கோபத்தில் இருந்தேன். உங்களுக்கு என்ன வேணும்னு கோபமா கேட்டேன்..."

"ஓ... பதில் வந்ததா... அந்த ரோக்கிடம் இருந்து?"

"ம்... வந்ததே... 'எனக்கு நீ வேணும் டியர்!' என்றான், அந்த ராஸ்கல்!"

"ஓ... அப்புறம் வேறு என்ன சொன்னான்?"

"வேறு ஏதும் சொல்லலை... நான் அவனைத் திட்டினேன். அப்புறம் ஃபோனை அணைத்து விட்டேன்."

"ஷ்யூர்! வேறு ஏதும் நடக்கவில்லையா?"

அந்த ராஸ்கல் முத்தமிட்டது அவள் நினைவுக்கு வந்தது. ஆனால் அவனிடம் அதைச் சொல்ல முடியாமல் ஏதோ ஒரு உணர்வு தடுத்தது.

"அவ்வளவுதான்... இது என்ன மெகா சீரியலா என்ன?"

"இல்லை... ரித்து! நீ என்னிடம் எதையோ மறைக்கிறாய்? என்னால் அதை உணர முடிகிறது."

"இ... இல்லை. வேறு ஏதும் இல்லை."



"ம்... அந்த ராஸ்கல் உன்னை ஃபோன் மூலம் தொடர்ந்து முத்தமிட்டு இருப்பானே... ரித்து!"

அவள் விழிகள் வியப்பால் விரிந்தன.

"ஆமாம்... அது எப்படி உங்களுக்குத் தெரிந்தது?"

"ம்... அந்த ராஸ்கல் நான்தான்!"

அங்கே ஒரு கனத்த மௌனம் பரவியது.

"ரித்து! இந்த ராஸ்கலுக்கு என்ன தண்டனை கொடுக்கப் போகிறாய்?" என்றவன் சட்டென அவள் கைகளை எடுத்து, தன் கன்னங்களில் பதித்துக் கொண்டான்.

அவளுக்கு மூச்சு விடக்கூட சிரமமாக இருந்தது. ஏதோ ஒரு உலகில் பயணம் செய்வது போல் அவளுக்கு இருந்தது. அவள் உதடு துடித்தது. கால்கள் நடுங்கின.

"என்ன ரித்து... பதிலே சொல்ல மாட்டேங்கிற!" என்றவன் துடித்த அவள் உதட்டைச் சுண்டு விரலால் வருடினான். பின்பு அவளை அணைத்தான்.

அவள் அவன் தோள் வளைவில் முகம் புதைத்தாள்.

"ரித்து... ப்ளீஸ் டியர்... பேசு!" என்றவன் அவள் முகத்தைக் கையில் ஏந்தினான்.

"என்னை உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?"

"ம்... பிடிக்காமல்தான் இப்படி நடந்து கொள்கிறேனா மக்கு... நீ சரியான மக்கு..."

"இல்லை... என் போன்ற பெண்களே அலர்ஜி என்று நீங்கள்தானே சொன்னீர்கள்!"

"அவர்தி கூடவே இருந்தால் சரியாகிவிடும் என்று நான்தானே சொன்னேன்."

"ஓ... அதுக்கு இதுதான் அர்த்தமா?"

"யெஸ்... முதலில் நீ அங்கிளிடம் செய்த அடாவடிக் குறும்புகள் எனக்குக் கோபத்தை ஏற்படுத்தியது உண்மைதான்... ஆனால் நீ ரொம்ப வித்தியாசமான பெண்ணாக இருந்தாய். எல்லோரிடமும் கலகலப்பாகப் பழகுகிறாய்.

நீ இருக்கும் இடத்தில் துள்ளல், குறும்பு எல்லாமே கரை புரண்டு ஓடுகிறது. எனக்கு அது பிடித்தது. ரொம்பப் பிடித்தது உன்னுடைய இன்னசென்ஸ். மற்ற பெண்கள் போல் வெட்கப்பட்டுக் கொண்டு ஓடாமல், பிரச்சனைகளை... மற்றவர்கள் கஷ்டங்களைத் தீர்த்து வைக்க முயற்சி செய்வது... அப்படின்னு சொல்லிக் கொண்டே போகலாம்.

ஆனால் அதற்கு முன்பு ஒரு உண்மை தெரிந்தாக வேண்டும். இந்த சிடுமூஞ்சி சஞ்சயிடம் உனக்குப் பிடித்த அட்ராக்ஷன் என்ன? ப்ளீஸ்... இப்பவாவது சொல்லேன். என்னிடம் உனக்குப் பிடித்தது என்ன?"

அவள் கண்களில் குறும்பு மின்னியது.

"தோடா... நாம என்ன டோரா, புஜ்ஜி மாதிரி பேசிட்டு இருக்கப் போறோமா?"

"ஏ... என்னது புரியலை..."

"மக்கு... டோரா, புஜ்ஜி புரோகிராமில் கடைசியில் டோரா, புஜ்ஜிகிட்ட கேட்பா... இந்தக் கதையில் உனக்கு எது



ரொம்ப பிடிச்ச பகுதின்னு... புஜ்ஜியும் அதே மாதிரி டோரா கிட்ட கேட்கும்...

அந்த ஞாபகம் வந்தது எனக்கு... நீங்க அதெல்லாம் பார்த்தது இல்லையா! டோரா எப்பவும் ஒரே காஸ்ட்யூம் போட்டுட்டு இருப்பா... அப்புறம் கூட வரும் பேக்-பேக், மேப்... தென்..." என்று அவளைத் தொடர விடாமல் அவன் உதடுகள் அவள் இதழ்களைப் பொத்தின.

"திருமணத்துக்குப் பின் நம் குழந்தைகளோடு சேர்ந்து... நான் இந்த டோரா கதை எல்லாம் கேட்கிறேன். இப்பொழுது வேண்டாம்..." என்றவன் அவள் கழுத்து வளைவில் முகம் புதைத்தான்.

அவள் உடலில் மின்சாரம் பாய்ந்தது போல் ஒரு உணர்வு ஏற்பட்டது. கண் மூடி அவன் மார்பில் ஒண்டிக் கொண்டாள்.

"ப்ளீஸ் ரித்து... சொல். என்னிடம் என்ன பிடித்தது? அங்கிளிடம் சொல்லிக் கொண்டிருந்தாயே..." - காதோரம் அவன் கிசுகிசுத்தான்.

அவள் கைவிரல்கள் அவன் மீசையை வருடின.

"இதுதான்டா அது... போதுமா! சரியான போலீஸ் நீ... எப்படியோ பதிலை வாங்கி விட்டாய்..." என்று அவன் மூக்கைச் செல்லமாகத் திருகினாள்.

"ம்... நீ பலே கில்லாடி ரித்து... எவ்வளவு நான் என்னைக் காய விட்டாய்... அது தெரியாதுக்கு என் மண்டை சூடானது எனக்குத் தானே தெரியும்..." என்று அவள் கன்னத்தை வருடினான்.

"ம்... நீங்க மட்டும் என்ன... லேசுப்பட்ட ஆளா என்ன? உங்களுக்கு என்னைப் பிடிக்கவே இல்லை என்று நான் முடிவே செய்து விட்டேன். அப்படி ஆட்டம் காட்டினீர்கள் என்னை... என்மேல் எரிந்து எரிந்து விழுந்தீர்கள்..."

"ஏய்... அது அப்படி இல்லை. நீ கண்டவனுடன் ஊரைச் சுற்றுவதைப் பார்த்து என்னுள் என்னை அறியாமலே பொறாமை உணர்வு. அதுவும் உன் அத்தை மகன் வந்த பொழுது கடவுளே... நான் பட்ட அவஸ்தை எனக்குத்தான் தெரியும். நீ வேறு 'அத்தான்... அத்தான்...' என்று அவனைத் தேனொழுக அழைத்து என்னை வெறுப்பேற்றினாய்..."

"உங்களைச் சீண்டவே அப்படி நான் செய்தேன்... அப்பொழுதாவது மனதில் உள்ளதைச் சொன்னீர்களா... நீங்கள்! சரியான கல்லுளிமங்கன்தான்..."

"எங்கே என் அன்பை நீ நிராகரித்து விடுவாயோ என்ற பயம்தான் எனக்கு. நீ எல்லாரிடமும் சகஜமாகப் பழகுவது போல்தான் என்னிடமும் பழகினாய் என்று நான் நினைத்துக் கொண்டேன். ஆனால் சில நேரம் நீ என்னை ஒரு மாதிரிப் பார்ப்பாய். அந்தத் தைரியத்தில்தான் உன்னிடம் ப்ரபோஸ் செய்தேன்."

"இப்ப கூட எங்க சொன்னீங்க நேரில... திருடன் போல் ஃபோனில் பேசினீங்க..."

"நான் என்ன டியர் செய்வது? இந்தக் கிரிமினல் முன்னால் நான் தோற்றுப் போய் விடுகிறேன். யூனிஃபார்ம் அணிந்து இருந்தேன் அன்று. அதனால் கஷ்டப்பட்டு என் உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டிருந்தேன்.



நீ செல்லமாக என் மூக்கைத் திருகி 'குட் பாய்!' என்று சொன்னாயே... அப்பவே நான் உன் வசம் ஆகி விட்டேன்..." என்றவனின் கைகள் அவள் இடையை அணைத்தன. கண்கள் அவள் அழகைப் பருகிக் கொண்டிருந்தன.

"யூ ஆர் நாட் குட் பாய் நவ்!" என்றாள், அவள் கண்களில் காதல் ததும்ப.

"பரவாயில்லை... நான் இந்த விஷயத்தில் பேட்-பாயாகவே இருக்கிறேன்..." என்றபடியே அவளை அணைத்தான், முரட்டுத்தனமாக.

"ஆ... வலிக்கிறது."

"ம்... இனிமேல் இந்த வலியை நீ பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும்."

"நீங்களும்தான்..." என்று அவன் கன்னத்தைக் கடித்தாள் அவள்.

"அழகான ராட்சிஸிடி நீ!" என்றான் சிரித்தபடியே அவன்.

"சந்தானத்திற்குத்தான் நீங்க தேங்க்ஸ் சொல்லணும்... இந்த ராட்சஸி பிறந்ததற்கு!"

"கண்டிப்பா தேங்க்ஸ் சொல்வேன். அப்படியே திருமணத் தேதியை சீக்கிரமா வைக்கச் சொல்லி மனு கொடுப்பேன்."

"ம்... கேளுங்க... கேளுங்க..."

"ஏய்... ரித்து! உங்க அப்பா எந்தப் பிரச்சனையும் செய்ய மாட்டார்தானே! நான் உங்க கேஸ்ட் இல்லை."

"சந்தானம் என்னைக் கேட்பார். 'நான் பரவாயில்லை. இந்த சிடுமூஞ்சி சஞ்சய் ரொம்ப மோசமில்லை. கொஞ்சம் அசமஞ்சம். பரவாயில்லை... ஓ.கே!'ன்னு சொல்வேன். அதனால கல்யாணத்திற்கு எந்தப் பிரச்சனையும் வராது. டோண்ட் ஒர்ரி."

"அடிப் பாவி! நானா அசமஞ்சம்!"

"ஆமாம்... ப்ரபோஸ் செய்யவே ஐயாவுக்கு இவ்வளவு நாளாச்சு..."

"அது ப்ரபோஸலிற்கு மட்டும்தான்... மற்ற விஷயத்துக்கு இல்லை பேபி!" என்றவனின் உதடுகள் அவள் முகத்தில் கோலமிட்டன.

வெளியே இடி சத்தம் கேட்டது. அவள் அவனை இறுக அணைத்துக் கொண்டாள்.

"நம் காதலை வாழ வைக்கும் இடி வாழ்க!" என்று அவன் அவள் காதில் கிசுகிசுத்தான்.

சஞ்சய்யின் அன்புச் சிறையில் வாழ்நாள் முழுவதும் தான் கைதியாக இருக்கப் போவதை நினைத்து மகிழ்ந்தாள் ரித்விகா.

நீங்களும்தானே!